கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

134

கார்த்திகை 2019

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



பேராசிரியர் சபா ஜெயராசா. சு.தவச்செல்வன். க.பரணீதரன். தெணியான். கந்தர்மடம் அ. அஜந்தன்.
ஆர்.எஸ்.ஆனந்தன். இராஜினிதேவி சிவலிங்கம். ஜெயம் நதியன். திக்குவல்லை கமால். எம்.எம்.மன்ஸுர்.
புகழ். கொற்றை பி.கிருஷ்ணானந்தன். பனைமீன் நாடன். பாலமுனை பாறூக். வானதி பகீரதன்.
சி.ஜெயசங்கர். சித்ரா சின்னராஜன். கெகிறாவ ஸுலைஹா. வேதா.இலங்காதிலகம். இ.ஜீவகாருண்யன்.
அலெக்ஸ் பரந்தாமன். மு.அநாதரட்சகன்

100/-

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2019 - கார்த்திகை

# பொருளடக்கம்



சிறுகதைகள்

கந்தர்மடம் அ. அஜந்தன் - 05
ஆர்.எஸ்.ஆனந்தன் - 15
இராஜினிதேவி சிவலிங்கம் - 22
ஜெயம் நதியன் - 29
திக்குவல்லை கமால் - 32
எம்.எம்.மன்ஸூர் - 36
புகழ் - 42

கவிதைகள்

பாலமுனை பாறூக் - 18
வானதி பகீரதன் - 25
சி.ஜெயசங்கர் - 26
சித்ரா சின்னராஜன் - 27
கெகிறாவ ஸுலைஹா - 38
வேதா.இலங்காதிலகம் - 41
இ.ஜீவகாருண்யன் - 41
அலெக்ஸ்பரந்தாமன் - 41

பத்தி

பனைமீன் நாடன் - 34

நூல் விமர்சனம்

க.பரணீதரன் - 31
மு.அநாதரட்சகன் - 46

கதைஇல்லாக் கதைகள்

கொற்றை பி. கிருஷ்ணானந்தன் - 31

அட்டைப்படம்

நன்றி இணையம்


கட்டுரைகள்

**இந்தியச் செவ்வியல் இசை மரபும் பண்ணிசையும்**
**பேராசிரியர் சபா.ஜெயராசா** - 03

**கலையும் வாழ்க்கையும் "குலாத்தி" தன் வரலாற்று நாவல் வழியான தேடல்**
சு.தவச்செல்வன் - 09



**புலோலியூர் தந்த அருங்கொடை புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்**
க.பரணீதரன் - 19



**திரும்பிப்பார்க்கிறேன் - 9**
தெணியான்- 48

# ஜீவநதி

**2019 கார்த்திகை இதழ் – 134**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 1500/–
வெளிநாடு – $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



## ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## வருமுன் காக்க

அனர்த்த முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வூட்டும் கருத்தரங்குகளும் அறிவூட்டல்களும் சில வருடங்களுக்கு முன்பு பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் நடத்தப்பட்டமை நமக்குத் தெரியும். சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு போன்றவை திடீரென ஏற்பட்டு சகல நாசங்களையும் செய்ய பின்பு, அவை பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்பு அவை குறித்த அக்கறை இல்லாமல் மீண்டும் ஓர் அனர்த்தம் ஏற்படும்போதுதான் அது பற்றிச் சிந்திக்க முற்படுகின்றோம்.

அனர்த்தம் என்பது எந்த வடிவத்திலும் எப்போதும் ஏற்படலாம். ஆனால் அவ்வாறு அனர்த்தம் ஏற்பட உள்ளபோது அழிவுகளிலிருந்தும் உயிரிழப்புகளிலிருந்தும் எம்மை மீட்டெடுப்பதும் அனர்த்த விளைவுகளை எவ்வாறு இயலுமானவரை தவிர்த்துக் கொள்ளலாம் அல்லது குறைத்துக் கொள்ளலாம் என்பதும் அனர்த்த முகாமைத்துவத்தின் நோக்கமாகும். அனர்த்தம் ஏற்படுமிடத்து விரைந்து செயற்படுவதும் உடனடியாகவே பாதுகாப்பான மாற்றுத்திட்டங்கள் குறித்து சிந்தித்து நடைமுறைப் படுத்துவதும் அவசியம்.

பாதுகாப்பான பொருத்தமான மாற்றுத்திட்டத்தைச் செயற்படுத்தத் தவறின் அண்மையில் தமிழ்நாட்டில் நடுக்காட்டுப்பட்டியில் ஏற்பட்ட அவலம் தொடரவே செய்யும். சகல மதத்தினரும் அனைத்து மக்களும் முகம் தெரியாத ஒரு குழந்தைக்காகப் பிரார்த்தித்தமை இறை விசுவாசத்திற்கும் அப்பால், மீட்பு முயற்சியில் இறை அருள் நிறைந்து முயற்சி திருவினையாக்கும் என்ற நம்பிக்கையினாலேயே. ஆனால், ஆபத்து விளிம்பில் குழந்தை சுஜித் இருந்து கொண்டிருக்கையில், மீட்பாளர்கள் முயன்று தவறல்(Trial and Error) முறையில் பரிசீலனைகளைச் செய்து கொண்டிருந்தமை இறை விசுவாசத்தில் நம்பிக்கை கொண்டோர் எல்லோரையும் சொல்லொணா சோகத்தில் ஆழ்த்திவிட்டது. இது மன்னிக்கப்படக் கூடியதன்று.

- க.பரணீதரன்

## ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்

யாழ் - பூபாலசிங்கம் புத்தகசாலை,
புக்லப் - திருநெல்வேலி,
செட்டித்தெரு பூபாலசிங்கம்,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி
ஸ்ரீலங்கா புத்தகசாலை - நல்லூர்

பேராசிரியர் சபா.ஜெயராசா

# இந்தியச் செவ்வியல் இசை மரபும் பண்ணிசையும்



இந்தியாவின் செவ்வியல் இசை பற்றி எழுதுவோரின் நிராகரிப்புக்கு உட்பட்டதாக பண் இசை இருந்து வந்துள்ளது. கருநாடக இசையையும், இந்துஸ்தானி இசையையும் செவ்வியல் இசைகளாக வற்புறுத்துவோர், பண் இசையை நிராகரிப்புக்கு உள்ளாக்குதல் இசையில் ஆழ்ந்து வேரூறி நிற்கும் மேட்டுமை உளப்பாங்கை வெளிப்படுத்துகின்றது.

மேட்டுமையினர் தமது அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கும், விளிம்பு நிலையினரைக் கலை நிலையில் ஓரங்கட்டி வைப்பதற்கும் இசையை ஒரு பலம் வாய்ந்த கருவியாகப் பயன்படுத்துதலை, இந்திய இசை வரலாற்றில் கண்டறிய முடியும்.

இந்துஸ்தானி இசை, வட இந்தியாவின் செவ்வியல் இசையாகக் கொள்ளப்படுகின்றது. சாம வேதத்துடன் அதன் வேர்கள் தொடர்புபடுத்தப்பட்டாலும், செழுமை மிக்க பாரசீக இசை மற்றும் அராபிய இசையின் பெரும் கலப்பினால் இந்துஸ்தானி இசை முகிழ்ப்புக் கொண்டது. கி. பி. பதின் நான்காம் நூற்றாண்டுக்குப் பின்னரே அதன் முழுமையான வளர்ச்சி நீட்சியுற்றது.

இந்துஸ்தானி இசை வளர்ச்சிக்கு திபேத் மற்றும் சின்ன ஆசியா இசை வகைகளும் பங்களிப்புச் செய்தன. இந்திய இசைக்குரிய இராகம், தாளம் ஆகியவை இந்துஸ்தானிய இசையின் அடிப்படைக் கூறுகளாக அமைந்த நிலையில், வடபுலு இசை செல்வாக்கு அந்த அடிப்படைகளை மீறாது உள் வாங்கிக் கொள்ளப் பட்டது.

இந்துஸ்தானி இசையை வரன்முறைப் படுத்தியவர்களுள், அமிர் குஸ்ரோ, தன்சென் ஆகியோர் முதன்மையானவர். அமிர்குஸ்ரோ, சுபி நெறி யுடன் தொடர்புடையவர். தன்சென் வைஸ்ணவ வழி பாட்டுடன் தொடர்புடையவர். பல்வேறு மரபுகளின் செழுங்கலவை நிலையுடன் இந்துஸ்தானி இசை ஏற்றம் கொண்டது.

இந்திய மரபில் இராகங்களின் உருவாக்கத் துக்கு நாட்டார் வழிபாட்டு இசையும், நாட்டார் மெட்டுக் களும் பெரும் துணை செய்தன. ஆனால் மேட்டுமை உளப்பாங்கு நாட்டார் இசை மரபுகளைப் புறந்தள்ளி விட்டது.

இந்துஸ்தானி இசையின் முதன்மை வடிவங்களாக "துருபத்", "காயல்", "தரனா" ஆகியவை விளங்குகின்றன. துருபத் என்பது பழைமையான இசைக்கும் முறைமையைக் கொண்டது. ஆரம்பத்தில் இது ஆண்களாலேயே பாடப்பட்டது. "ஹரி ஓம் நாராயணம்" என்றவாறு வழிபாட்டுடன் இணைந்து பாடப்படுவது. அது தனித்துவமான எழுநடையைக் (Style) கொண்டது

"காயல்" என்பது அராபிய மொழியை அடி யொற்றிய சொல். அதன் பொருள் சிந்தித்தல் மற்றும் கற்பனை செய்தல் என்பவையாகும். உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குரிய இணக்கல்(improvising) செயற் பாட்டோடு அது இணைந்தது.

தரனா என்பது விறுவிறுப்பான இசைக் கோலங்களைக் கொண்டது. இசை அளிக்கையின் நிறைவில் அது பாடப்படும். நாட்டார் துள்ளல் மரபி லிருந்து அது தோற்றம் பெற்றது.

மேற்கூறியவற்றைத் தவிர தப்பா, துமாரி, கசல், தமர், திரிவத், சைதி, தப்கயல், அஷ்டபதி, தாத்ரா, பஜனம் முதலாம் வகைப்பாடுகளையும் உள்ளடக்கிய பன்முகப் பரிமாணங்களை இந்துஸ்தானி இசை கொண்டுள்ளது. அதன் பன்முகப்பாடு அதற்கு வலிமை கொடுத்துள்ளது.

கருநாடக இசை, தமிழகத்து இசைப் பின்புலத்தி லிருந்து எழுகோலம் பெற்றது. கருநாடக இசையும், பண்ணிசையும் தமிழரின் நாட்டார் சடங்கு இசை வழி பாட்டிசை, தொழில் முறை இசை முதலியவற்றிலிருந்து தோற்றம் பெற்றவை. நாட்டார் விருத்தங்களும், மெட்டுக் களும் கருநாடக இசைக்கு வளம் சேர்த்தன. தொல் காப்பியம், கூத்தநூல், பரிபாடல், புற நானூறு, அக நானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருமந்திரம், சீவகசிந்தாமணி, தேவாரங் கள், நாலாயிர திவ்விய பிரபந்தம் முதலானவற்றில் தமிழரின் இசை பற்றிய செய்திகள் பரவலாக இடம் பெற்றன. தமிழிசையின் அடிப் படை வடிவங்களுள் ஒன்றாக பண் அமைகின்றது. அடிப் படை இசை ஒலிக் கூறு சுரம் என்றும் நரம்பு என்றும் அழைக்கப்படும். கூறு என்பது துளை என்று அழைக்கப் படும். ஏழு ஒலிக் கூறுகள் "கோவை" எனப்படும். பண்ணிசை தமிழ்க் கலைச் சொற்களோடு வளர்ச்சியுற்றது.

ஏழு ஒலிக் கூறுகளும் முறையே குரல், துத்தம்,

கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப்படும். வட மொழியில் இவை ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்றும் குறிப்பிடப்படும். இவ்வாறான வடமொழி சொற்களையே கருநாடக இசை எடுத்துக் கொண்டது.

இசை ஒழுங்கை ஒரு சீராக நடத்திச் செல்வ தற்கு தூக்கு என்ற தாளம் துணை செய்யும். இசை ஒலிகளை ஒழுங்குபடுத்தி நூற்று மூன்று பண்கள் தமிழில் உருவாக்கம் பெற்றுள்ளன. பண் ஒவ்வொன்றும் தனித்தனி பெயர்களால் சுட்டப்பட்டுள்ளது. இந்தளம், குறிஞ்சி, செந்துருத்தி, பழம் பஞ்சுரம், செவ்வழி, யாழ் முரி, காந்தாரம், புறநீர்மை என்றவாறு ஒவ்வொன்றுக் கும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்துஸ்தானி இசை கருநாட இசை ஆகிய வற்றிலே வழங்கி வரும் இராகங்களுக்கும் பண்களுக்கு மிடையே ஒப்புமைகள் உண்டு.

செம்மையும் செழுமையும் கொண்ட பண்ணிசை, கருநாடக இசை வல்லுனர்களால் புறந் தள்ளப்பட்டமை, தமிழகத்தின் சமூகக்கட்டமைப்புடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்பட வேண்டியுள்ளது.

வட மொழியும் மேட்டுமையும் அரச அதிகார மும் ஒன்றிணைந்த நிலையில் தமிழ்மொழியோடு ஒன்றித்து நின்ற பண் இசை பின் தள்ளப்பட்டது. வேதாகம வழி பாட்டுக்கோயில்களில் வடமொழியே பூசைக்குரிய மொழி யாயிற்று சோழப் பெரு மன்னர் ஆட்சியில் பண்பாடும் ஓதுவார்கள் கோயில்களிலே பண் இசைப்பதற்கு அமர்த்தப்பட்டனர். ஆயினும் பூசையில் பண்பாடுதல் இரண்டாம் நிலையிலே தான் வைக்கப்பட்டது.

தமிழகத்தில் நிகழ்ந்த அரசியல் மாற்றங் களோடு இந்துஸ்தானி இசைக்கு ஏற்பட்ட தாக்கங்கள் தமிழின அரச அவைகளில் அளிக்கை செய்யப்பட்ட தமிழிசைக் கும் ஏற்பட்டது. அராபிய இசைபாசி இசை முதலாம் வடபுல இசையின் செல்வாக்கினோடு செவ்வியல் தமிழிசை "கருநாடக இசை" என்ற வடிவை எடுத்தது.

கருநாடக இசையில் இடம் பெறும் சில இராகங்களின் பெயர்களே பார்சி மற்றும் அராபிய இசை களின் சொல்வாக்கை புலப்படுத்தும். பண் இசையோடு ஒப்பிடும் பொழுது கருநாடக இசையும் இந்துஸ்தானி இசையும் காலத்தாற் பிந்தியவை.

கருநாடக இசை மும்மூர்த்திகளாகிய தியாக ராஜ சுவாமிகள், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். விசய நகர நாயக்க மன்னர் ஆட்சி யோடிணைந்த முதன்மை மொழிகளான வடமொழி என்ற சமஸ்கிருதமும் தெலுங்கும் கருநாடக இசையுடன் கலந்து அந்த இசையின் பயில்வும் அளிக்கையும் சமூகத்தின் மேட்டுமையினருக்கே உரியதாயிற்று.

தமிழிசையின் ஒரு பிரிவாகிய பண்ணில் இசை தொடர்பான வளமான கலைச் சொற்கள் களஞ்சியப் பரப்புக்காணப்பட்டது.

ஏழு சுரங்களின் ஏற்ற முறைமை "ஆரோசை" எனப்பட்டது. இறக்க முறை "அமரோசை" எனப்பட்டது. அரைச் சுரத்துக்கு "ஆகணம்" என்றும் முழுச் சுரத்துக்கு "அந்தரம்" என்றும் பெயர் குறிப்பிடப்பட்டது.

பாடல் மேற்கொள்ளும் மூன்று முறைமை மெலிவு, சமன், வலிவு எனப்பட்டது. ஏழு சுரம் கொண்டது "பண்" என்றும் ஆறு சுரம் கொண்டது "பண்ணியம்" என்றும் ஐந்து சுரம் கொண்டது "திறம்" என்றும், நான்கு சுரம் கொண்டது "திறந்திறம்" என்றும் அழைக்கப்பட்டது. கருநாடக இசையின் மேற்கவிப்பால் தமிழிசைக்குரிய இவ்வாறான தமிழ்க் கலைச் சொற்கள் மறையத் தொடங்கின. இசை மரபு ஒன்று தமிழுக்கு இல்லை என்று கூறும் அளவுக்கு வடமொழி மற்றும் தெலுங்கு மொழி மேலாதிக்கம் நீட்சி கொண்டது. இந்தியச் செவ்வியல் இசையை அடையாளப் படுத்துகை யில் பண் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்பட்டது.

அவற்றின் பின்புலத்தில் தமிழிசை பற்றிய ஆய்வை முன்னெடுத்த முன்னோடிகளான தஞ்சை மு. ஆப்பிரகாம் பண்டிதர், மதுரை எம். கே. எம். பொன்னுச் சாமி, ஈழத்து விபுலானந்த அடிகளார் ஆகியோர் முதலில் முக்கியத் துவம் பெறுகின்றனர். ஆப்பிரகாம் பண்டிதரின் "கருணா மிர்த சாகரம்"*(1917)* தமிழிசை ஆய்வுக்கு முன்னோடியான நூலாயிற்று. *1346* பக்கங் களைக் கொண்ட அந்தப் பெரு நூல் நான்கு பாகங் களைக் கொண்டதாக தமிழிசையை விரிவான ஆய்வுக்கு உட்படுத்தியது.

விபுலானந்த அடிகளாரின் "யாழ்நூல்" பாயிரவி யல், யாழ் உறுப்பியல், இசை நரம்பியல், பாலைத்திரியி யல், பண்ணியல், தேவார இயல், ஒழிபியல் என்ற பிரிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. *1947*ஆம் ஆண்டில் அந்த நூல் வெளிவந்தது.

எம். கே. எம். பொன்னுச்சாமிப்பிள்ளை, "பூர்விக சங்கீத உண்மை" என்ற நூலை *1930* ஆம் ஆண்டில் வெளியிட்டார். இசை நூன் மரபு, கர்த்தா இராகத்தின் நிர்ணயம், மூர்ச்சை பிரசுதாரம், கர்த்தா இராகங்களும் அனுபவத்திலிருக்கின்ற ஜன்ய இராகங்களும், சுதி பேதராக சூட்சுமம் ஆகிய ஐந்து பகுதிகளைக் கொண்டது. சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்தி லும் காணப்படும் இசை பற்றிய செய்திகளை வெளிக் கொண்டு வரும் நோக்குடன் அந்த நூல் எழுதப் பட்டுள்ளது.

பொன்னுச்சாமிப்பிள்ளை நாகசுரக்கலை மரபைச் சேர்ந்தவர். கருநாடக இசை பற்றி ஆராய்ந்தவர்களதும் அளிக்கை செய்தோரதும் மேட்டுமை உளப்பாங்கு, தவில் நாகசுரக்கலையைப் புறந்தள்ளி யமையால் அவரது ஆய்வுகளுக்கு உரிய இடம் வழங்கப் படாதிருந்தது. அதேவேளை தமிழ் இசையைப் பாது காத்து வளர்த்ததில் தவில் நாக சுரக்கலைஞர்களுக்கு முக்கிய பங்கு உண்டு.

தமிழ் நாட்டு இசையரங்குகளில் தமிழ் புறக் கணிக்கப்பட்டவேளை தமிழிசை இயக்கம், மேற் கிளம்பியது. இசை ஆய்வுகள் பண்ணிசையின் செவ்வியற் பரிமாணங்களை வெளிப்படுத்தின.

வடமொழியோடு இணைந்த சமூக மேலாதிக் கம் தனக்குரிய கலைப் பொருளாகக் கருநாடக இசையை எடுத்துக் கொண்டது. அந்த மேலாதிக்கம் பண்ணிசையை யும் நாட்டார் இசையையும் புறக்கணிப்புக்கு உள்ளாக்கியது.

இந்துஸ்தானி இசையிலும் கரு நாடக இசையி லும் பிற மொழி இசைகள் உட்கவிந்துள்ளன. ஆனால் பண்ணிசை பிற இசைகளின் கவிப்புக்கு உட்படாது தனித்து வளர்ந்தது.

சமூக மேலாதிக்கம் இசைக்குரிய அங்கீகாரத்தில் செல்வாக்குச் செலுத்தி வருதலை இந்தியச் செவ்வி யல் இசை வரலாறு துல்லியமாகப் புலப்படுத்துகின்றது.

# எத்தனை மனிதர்கள்

கந்தர்மடம் அ.அஜந்தன்

எத்தனையோ தடவைகள் நாம் பேரூந்துகளிலும் பொதுப் போக்குவரத்து சாதனங்களிலும் ஊர்விட்டு ஊர் பயணித் திருப்போம் அப்பொழுதெல்லாம் வெறும் ஊர்களை மட்டும் நாம் கடப்பதில்லை. ஒவ்வொரு பயணத்தின்பொழுதும் பல தரப்பட்ட மனிதர்களையும், அனுபவங் களையும் கடந்தே பயணிக்கின்றோம் என்பதை நான் ஒருபோதும் மறுத்த தில்லை. 2013 புரட்டாதி 20ம் திகதி ஆரம்பித்த எனது யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவிற்கான பயணம் இன்றும் ஆறு ஆண்டுகளாக தொடர்ந்த வண்ணமே யுள்ளது.

அத்தனை பயணங்களும் அதி காலைப் பயணங்கள் என்பதால் பேரூந்தில் நிகழும் பல சம்பவங்கள் அடிமனதில் நங்கூரமிட்டு நின்று விடுகிறது. ஏனெனில் அதிகாலையில் எமது மூளை அதிக சக்தி யுடன் இருக்கும் என்கின்றனர் அறிவிய லாளர்கள். நான் பயணிக்கும் பேரூந்தில் பெரும்பாலும் ஆசிரியர்கள், அரச ஊழியர் கள், அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் போன்றோரே பயணிப்பர். பலதடவைகள் பயணிக்கின்ற போதிலும் சில குறிப்பிட்ட துறைசார்ந்த நட்புவட்டங்கள் தமக்குள் ஒன்றினை வதையே அதிகம் கவனிக்கமுடிகின்றது. புதிய நட்புக்களை ஏற்படுத்துவதிலும் புன்னகைகளை பகிர்வதிலும் நாம் கஞ்சர்கள் என்பது எமக்கு அடிக்கடி உணர்த்தப்படு கின்ற ஒரு உண்மை.

இவற்றிற்கு அப்பால் ஒரு சமரசம் உலாவும் இடமாகவும் பேரூந்தை அடை யாளப்படுத்தமுடிகிறது. ஏனெனில் தலைமை அதிகாரிகள், இடைநிலை ஊழியர்கள், சிற்றூழியர்கள் என்ற பேதமின்றி நடத்து நரும் ஓட்டுனரும் தமது அதிகாரத்தை சமத்துவமாகவும் சரமாரியாகவும் காண்பிப்பர். எமது பெயர், நாம் வகிக்கும் பதவி நிலைகள் எல்லாம் அழிந்து நாம் அன்று அணிந் திருக்கும் உடையின் நிறமே எமது பெயராக மாறும். "ஏய் அந்த நீலச்சேட்டு அண்ணை முன்னுக்கு போங்கோவன்", "சிவப்புச் சாறி அக்கா திரும்பி நில்லுங்கோவன் திரும்பப் பஞ்சியாகிடக்கிதோ", "பச்சைச் சறம் கட்டின ஐயா வழிவிடுங்கோவன் கையில உரப்பை யையும் வைச்சுக்கொண்டு குறுக்க நிண்டால் நாங்கள் எப்படி சனத்த ஏத்திறது, அங்க பின்னால அடுத்த பஸ்சும் வந்திட்டிது உதில நிண்டு ஆட்டம் போடிறியள்" இவை அனைத்தும் நடத்துநரின் குமுறல்கள். அள விற்கு அதிகமாக பயணிகளை ஏற்றியபின் மிதிபலகையில் நிற்பவர்கள் இடதுபுறமுள்ள



கண்ணாடியை மறைப்பதற்காக ஓட்டனர் தனது பங்கிற்கு திட்டிவைப்பார்.

இந்தப் பயணங்களில் சில சம்பவங்கள் எனது மனதில் காயத்தையும், ஆச்சரியத்தையும், மகிழ்வை யும், நெகிழ்வையும் தராமல் இருக்கவில்லை. எத்தனை மனிதர்கள் அவர்களுக்குள் எத்தனை பிரச்சினைகள் இவற்றையே நான் பட்டியலிட்டுப்பார்க்கின்றேன்.

மனிதன் 1

நான் வழமைபோல அன்றைய தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகிலிருந்து ஒரு பேரூந்தில் ஏறினேன் எப்பொழுதும்போல் கைதடி நுணாவிலிலேயே பேரூந்தின் ஆசனங்கள் நிறைந்து விட்டன. நின்றுகொண்டே பயணித்தேன் இருந்த போதும் பயணிகளை ஏற்றுவதை நிறுத்தியபாடில்லை. கொடிகாமத்தில் ஒற்றைக்கால் இயலாத ஒரு வயதான வர் உறவுக்கார இளைஞர் ஒருவரின் துணையோடு தட்டுத்தடுமாறி ஏறினார் மெல்ல மெல்ல முன்னோக்கி நகர்கின்றார். ஆசிரியர்கள், அரசஊழியர்கள், இளைஞர் யுவதிகள் எவரும் அவருக்கு இருப்பதற்கு இடம் கொடுக்கவில்லை. பயணிகளுக்கு இவரின் இயலாமை தெரியாதிருக்கச் சந்தர்ப்பமில்லை அதனால் இவருக்கு யாரும் முகம்கொடுக்க தயாராகவில்லை என்பதை உணர முடிந்தது. பரந்தன் வரும்வரை அவர் பட்ட துன்பம் அவர்மீது இரக்கத்தையும் ஆசனத்தில் இருந்தவர்கள்மீது கோபத்தையும் தோற்றுவித்தது.

திடீரென சற்று வயதானவர் தூக்கத்தில் இருந்து எழுந்து இந்த இயலாதவரைப் பார்த்து "ஐயா ஏலாத ஆள் இவளவு நேரம் நிண்டனீங்களோ ?. என்ர சீற்றில இருங்கோ" என்றார். உடனே அந்த இயலாத பெரிய மனிதர் "ஐயா உங்களுக்கும் எனக்கும் கிட்ட முட்ட ஒரே வயது நீங்களும் பாவம். உங்கட மனிதாபி மானச் செயலுக்கு நன்றி. இவளவுதூரம் நிண்டு கொண்டே வந்திட்டன் இன்னும் கொஞ்சத்தூரம்தான் " என்றார். உடனே அவருக்கு அருகிலிருந்த சில இளையவர்கள் முண்டியடித்து "ஐயா என்ர சீற்றில இருங்கோ", "ஐயா கொஞ்சத்தூரமெண்டாலும் என்ர சீற்றில இருங்கோ" என்று எழுந்தார்கள். இயலாத வரோ "இல்லைத்தம்பியவை நான் போகவேண்டிய தூரத்தின்ர அதிகமான தூரத்துக்கு நிண்டுதான் வந்தனான் நீங்களெல்லாம் படிச்ச ஆக்கள் நான் பென்சன் கேஸ். இந்தக்காலத்தில எல்லாம் இப்பிடியாப் போச்சு பாவம் நீங்கள் என்ன செய்யேலும்" என்று கூறியபடி முன் பாதை நோக்கி நகர்ந்தார். அனைவரது கவனமும் அவர்மீதே பதிந்திருந்தது. "உங்கள் மனிதாபிமான செயலுக்கு நன்றி", "நீங்களெல்லாம் படிச்ச ஆக்கள்" போன்ற அவரது வசனங்களுக்குள் பொதிந்திருந்த அர்த்தமும் அதன் ஆழமும் பலரது சுயநலக்கதவுகளை உடைத்துத் திறந்து விட்டது.

சில சமயங்களில் சிலருக்கு சொல்லவேண்டிய பாசையில் சொல்லவேண்டும் என்பதை அவர் உணர்த்தியிருந்தார். இதே செய்தியை இன்னொரு சம்பவமும் எனக்கு உணர்த்தியது. செல்வபுரம் என்ற பகுதியில் புதிதாக ஒரு வீடு கட்டப்பட்டு வெளி மதிலில் அழகாக வர்ணம் தீட்டப்பட்டிருந்தது அத்துடன் அதில் "தயவுசெய்து இங்கு குப்பை கொட்ட வேண்டாம்" என்ற வாசகம் எழுதப் பட்டிருந்தது. ஆனால் அதனருகில் குப்பைகள் கொட்டப்பட்டிருந்தது. மறுமுறை பார்த்த போது "தயவுசெய்து" என்ற சொல் அழிக்கப்பட்டு "இங்கு குப்பை கொட்டவேண்டாம்" என்று சற்று கோபமாக எழுதப்பட்டதுபோல் இருந்தது. மறுபடியும் குப்பைகள் குவிந்திருந்தது. அடுத்த கிழமை மீண்டும் அந்தப் பாதையை பேரூந்து கடக்கும்பொழுது ஆர்வம் தலை நீட்ட அந்த இடத்தைப் பார்த்தேன் குப்பைகள் அற்று சுத்தமாக இருந்தது. ஆச்சரியத்தோடு எழுதப் பட்ட வாசகத்தை படித்தேன் அங்கே குப்பை போடுவதற்கு இப்படி அனுமதி வழங்கப்பட்டிருந்தது "இவ்விடத்தில் நாய்கள்மட்டும் குப்பைகொட்டலாம்". சிரித்துக் கொண்டே இந்த இரண்டு நிகழ்வுகளின் சாராம்சமாக "சில மனிதர்கள் சொல்லவேண்டிய பாசையில் சொன்னால்த்தான் புரிந்துகொள்வர்" என்பதைப் புரிந்துகொண்டேன்.

மனிதன் 2

உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவி ஒருவர் தனது நண்பியுடன் தர்மபுரத்தில் பேரூந்தில் ஏறினார் அவரது பயணம் புதுக்குடியிருப்பு வரை தொடரப்போகின்றது என்பதை அவர் நடத்துநரிடம் பற்றுச்சீட்டைப் பெறும்பொழுது புரிந்துகொண்டேன். பாடசாலை, கல்வி சார்ந்த உரையாடலே இந்த மாணவிகளுக்குள் நிகழ்ந்தது. அவர்களின் உடை, புத்தகப்பை அணிந்திருந்த பாதணி என்பவை அவர்கள் வசதியில் நடுத்தர வர்க்கமாக இருக்கவேண்டும் என்று எண்ணத்தோன்றியது. மூங்கிலாற்றை நெருங்கும் பொழுது எமது பேரூந்தை ஒரு நோயாளர் அவசர வண்டி தனக்கே உரிய ஒலியை எழுப்பியபடி கடந்து சென்றது. உடனே அந்தமாணவி கதைப்பதை நிறுத்திவிட்டு இரு கண்களையும் மூடி பிரார்த்தனை செய்தபின் சிலுவை யிட்டு கண்திறந்தார். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது அதற்குள் அவரது நண்பி "ஏனடி அன்புலன்ஸ் சத்தம் கேட்ட உடனே கண்ணைமூடி பிறே பண்ணிறனி?" என்று கேட்டாள். அதற்கு அந்த மாணவி "இல்லையடி கடைசிச் சண்டையில உனக்கு ஞாபகமோ தெரியேல்ல அடிக்கடி உந்த அன்புலன்ஸ் சத்தம் கேக்கிற தும் அவை அதில போறவையள்ள பெரும்பாலான ஆக்கள் செத்துப் போறதும், வீட்டில அவை செத்துப் போச்சினம் இவை செத்துப்போச்சினம் எண்டு கத்திறதும் இப்பவும் எனக்கு நினைவிருக்கு. அதாலதான் நான் எங்கையாவது அன்புலன்ஸ் சத்தம் கேட்டா கடவுளே அந்தப் பேசன்ரை காப்பாற்றும் என்டு பிறேபண்ணிப் பழகீற்றன். ஆரெண்டாலும் எந்த மத மெண்டாலும் அவையளின்ர உயிரைக் காப்பற்றச் சொல்லி நான் ஜீசசிட்டை கேட்டுக்கொள்றது" என்று முடித்தாள்.

அவளது வயதையும் தாண்டி ஒரு மதிப்பு அவள்மீது ஏற்பட்டது. மாணவர்களை எப்பொழுதுமே குறைசொல்லும் சமூகத்திற்கு இவள் ஒரு முன் உதாரணம். சிறுவர்கள், இளையோர்களிலும் பாராட்டத்தக்க பல விடயங்கைச் செய்யமுடியும் என்பதை அவள் உணர்த்தி நின்றாள். இவ்வாறான குணத்தால் உயர்ந்த சிறியவர் களை நாமே காணாமல்

கடந்துவிடுகின்றோம். போர் நிகழ்ந்தபோது அந்த மாணவியின் வயது 7 அல்லது 8 ஆக இருந்திருக்கும். அன்றைய தாக்கம் இந்த மாணவிக்குள் மரணம் தொடர்பான அச்சத்தையும், இறைவன்மீதான நம்பிக்கையையும், உயிர்கள் வீணாகப் போய்விடக் கூடாது என்ற மதங்கள் தாண்டிய மனிதத்தைத் தேடும் பண்பையும் வளர்த்து விட்டுள்ளது.

மனிதன் 3

எனக்கு அருகில் ஒரு வெள்ளை வேட்டி சட்டை அணிந்த உயரமான வாடிய ஒரு வயதானவர் அமர்ந்தார். அமரும்பொழுதே ஒரு புன்னகையை பரிமாறிக் கொண்டோம். பேரூந்து நகர்கையில் அவர் என்னோடு உரையாட ஆரம்பித்தார். "தம்பி யாழ்ப் பாணத்தில இருந்து வாறியளோ ? எங்க வேலை செய்யிறியள்? எவ்வளவு காலமா வேலை செய்யிறியள்? என்று தொடர் வினாக்களை அடுக்கினார். நான் அனைத்துக்கும் ஒருமித்து "ஓம் ஐயா யாழ்பாணத்தி லிருந்து வேலைக்காக 2013இல முல்லத்தீவுக்கு வந்தனான்" என்றேன். "அப்ப உங்கட குடும்பம் யாழ்ப் பாணத்தில எண்டால் நீங்கள் ஒவ்வொருநாளும் பயணம் செய்யவேணுமோ ?" என்றார். நான் "இல்லை ஐயா வீடொண்டு வாடைக்கெடுத்து எங்கட ஸ்ராப்ஃ எல்லாம் அதில இருக்கிறம் இனி வெள்ளிதான் வீட்டை போவம்" என்றேன்.

எனது பங்குக்கு நானும் "நீங்கள் எங்க போறியள்" என்று சுருக்கமாக கேட்டேன். "தம்பி என்ர காணியைக் காணேல்லை அதுதான் கேஸ் குடுக்கப் போறன்" என்றார். எனக்கு வடிவேலு சொன்ன "கிணத்தை காணேல்லை எண்டு கேஸ்போட்ட சினிமா நகைச் சுவை தான் நினைவிற்கு வந்தது. மெல்லச் சிரித்தபின் கேட்டன் "அந்தக் காணிக்கு என்ன நடந்தது" என்று. அவர் சொன்னார் "தம்பி போரில என்ர ஒரு பிள்ளையை நாட்டுக்காக இழந்தன் இன்னொரு பிள்ளையை "செல்" கொண்டுபோட்டுது இப்ப என்னெண்ட என்ர காணியை அரசாங்கம் தன்ர காணியெண்டு உரிமை கொண்டாடுது. பத்தாததுக்கு "ஊர்த் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு அடிச்ச கதையா" அந்தக் காணியை ஆருக்கோ தானமாவேறை குடுக்கப் போயினமாம். அதுதான் என்ன சேட்டையெண்டு பாப்பமெண்டிட்டு தெரிஞ்ச லோயரோடை கதைச்ச னான் அவர் வரச் சொன்னவர் அது தான் போறன்". "போரிலை இவளத்தையும் இழந்து காணிகிடக் கெண்ட தெம்பில உயிரைப் பிடிச்சுக் கொண்டிருந் தால் இப்பிடி ஆகிற்றிது" என்று தனது சோகத்தை கொட்டினார். தமிழரின் போராட்டங்கள் உருமாறுதே தவிர ஓய்ந்தபாடில்லை என்பது அறிந்ததே. இருந்தபோதிலும் இழப்புக்கள், போராட்டங்கள், துன்பங்களின் மத்தியிலும் அவரது பேச்சில் நகைச் சுவைக்கும் பழமொழிகளுக்கும் குறைவில்லை.

மனிதன் 3

இன்னொருநாள் எனது ஆசனத்தின் பின் ஆசனத்தில் இருவர் உரையாடியவண்ணம் வந்தார்கள். அவர்கள் முல்லைத்தீவிலிருந்து உடையார்கட்டிற்கு பயணிக்கின்றனர். தமது குடும்ப நிலை, தொழில் வாய்ப்பு, யுத்த அனுபவங்கள், சமூகத்தின் செயற்பாடு கள் தொடர்பான வெறுப்பு அவர்களின் உரையாடலின் உள்ளடக்கங்களாக அமைந்திருந்தது. இந்த இருவரில் ஒருவர் உடலின் பல பாகங்களில் காயங்களுடன் தடுப்பிலிருந்து மிக அண்மையில் விடுதலை செய்யப் பட்ட ஒரு முன்னாள் போராளி. குறிப்பிடத்தக்க பதவியில் அவர் போராட்டத்தில் பங்காற்றியிருப்பது அவரது உரையாடலில் புலப் பட்டது. "என்ன முல்லைத் தீவிலையே உப்ப வேலை" என்று மற்றவர் கேட்க "ஓம் அண்ணை கொங்கிறீற் கல்லு அரியப் போறனான். வாகனம் ஓடிறது, கடுமை யான வேலையள் எல்லாம் செய்ய ஏலத அளவுக் கெல்லை எங்களுக்கு புணர்வாழ்வு தந்தது அரசாங்கம்" என்று சலித்துக்கொண்டே கூறினார். "அப்ப எப்பிடி கல்லரியிற வேலை செய்யிறது" என்றார் மற்றவர். "அந்த ஓணர் எனக்கு தெரிஞ்ச ஆள் அதால எனக்கு பெரிய கடும் வேலையளில்லாமல் அரிஞ்ச கல்லுக்கு தண்ணியடிக்கிறது, கல்லரியிற அச்சை சுத்தம் செய்யிறது, கல்லைத் தட்டிச் சேப்பண்ணிறது இப்பிடி குனிஞ்சு வளைஞ்சு பாரம் தூக்காத வேலையை தந்திருக்கிறார் அதுதான் போறனான்" எண்றார்.

"என்ன அண்ணை நீங்கள் எல்லாம் எப்படி இருக்கவேண்டிய ஆக்கள் இப்பிடி கஸ்ரப்படுறதைப் பார்க்க கவலையா இருக்கு" என்றார் மற்றவர். "அண்டைக்கு நாட்டுக்காக உயிரைக்குடுக்கவும் தயாரா இருந்தம் சனம் எங்களை மதிச்சிது, குடும்பத்தை விட்டிட்டு நாங்கள் அடிபடப் போனால் சொந்தம், அயல் எல்லாம் என்ர குடும்பத்தை கவனமாப் பாத்திது. இப்ப எல்லாம் முடிஞ்சு நாங்கள் சிறையில வதைபட்டு ஊருக்குள்ள வரேக்க ஏதோ களவெடுத்து ஜெயிலுக்கு போட்டுவந்தமாதிரியெல்லோ சனங்கள் எங்களைப் பாத்தது". "புனர்வாழ்வெண்ட பேரில வாழ்வாதாரம் செய்து பிழைக்கச்சொல்லி கொஞ்சக் காசு தந்துதான் விட்டவை. வீட்டுக்கு வந்து நிலைமையப்பாத்தா பிள்ளையளும் மனுசியும் கால் தேயத்தேய நடந் தெல்லோ திரியிதுகள் எண்டிட்டு ஒரு சைக்கிளை வாங்கிக்குடுத்தன், எனக்கெண்டு நல்ல உடுப்புகள் ஒண்டும் இல்லையெண்டு மனிசி கொஞ்ச உடுப்பை எடுத்து தந்திது, பக்கத்துக்கடையில கொஞ்சம் கடனிருந்தது அதையும் கட்டினன் கொண்டுவந்த காசு முடிஞ்சிது". "பிறகு சாப்பாட்டுக் கஸ்ரத்தில அங்கை இஞ்சையெண்டு பல வேலையளையும் செய்துதான் குடும்பத்தை பாக்கவேண்டிக் கிடக்கு" என்றார்.

"உங்கை உப்ப தடுப்பாலவந்தாக்களைப் பார்த் தால் பாவங்களா இருக்கு அங்கை அவளவு அடி உதை யெண்டெல்லாம் வாங்கிற்றுவந்து பிறகு குடும்பத்தை பழைய நிலமைக்கு கொண்டுவர எவ்வளவு கஸ்ரப் படுதுகள்" என்று மனமிரங்கி அவருக்கு ஒத்துணர்வு கொடுத்தார் மற்றயவர். "அண்ணை எங்களோடை இருந்த சிலபேரைப் பாத்தன் அவையள் நல்லாத்தான் இருக்கினம். ஆனால் எங்களுக்கு அவையளைமாதிரி காட்டிக்குடுத்து காலில விழுந்தெல்லாம் பிழைக்கத் தெரியாது அதாலதான் இவ்வளது கஸ்ரப்படிறம்" என்றார் அந்த முன்நாள் போராளி. கொடுமைகள் பலதை அனுபவித்தும் கொள்கையில் உறுதியாக நின்ற வரை திரும்பிப்பார்த்து சிரித்தேன் அந்தச் சிரிப்பை அவருக்கான மரியாதையாகவே நான் பார்த்தேன்.

மனிதன் 4

எமது பேரூந்து உசனைக் கடக்கும்பொழுது இரண்டு கண்ணும் தெரியாத நபர் ஒருவர் கையில் வெள்ளைப் பிரம்புடனும், றபான் என்ற இசைக்கருவி யுடனும் ஏறினார். தட்டுத் தடுமாறி ஓட்டுனரின் பின்புறமாக இருந்த சில்வர் பைப்பில் தனது உடலைச் சாய்த்துக்கொண்டு பயணிகளை நோக்கி றபானைத் தட்டி சினிமாப்பாடலை பாட ஆரம்பித்தார். கோப மடைந்த ஓட்டுனர் சிறிது தூரத்திலேயே பேரூந்தை நிறுத்தி "விடியக்காலமை இதுக்கவந்து பாடிப் பிச்சை கேக்கிறியள். கோண்டெக்ரருக்கு ஆக்களைப் பார்த்து ஏத்தத் தெரியாது" என்று பேசியபடி அந்த பார்வை இல்லாதவரை இறக்கிவிட்டனர். காலையில் நிகழ்ந்த இந்தச் சம்பவம் மிகுந்த வேதனையை கொடுத்தது.

இதே பேரூந்தில் விசுவமடுவில் ஒரு காவி வேட்டி உடுத்திய பட்டைசாத்திய ஒரு ஐயா உண்டிய லோடு ஏறினார். வாகனத்தின் முன்கண்ணாடியில் உட்புறமாக ஓம் என்று எழுதியவர் திருநீற்றினை ஓட்டுனர், நடத்துநர் ஆகியோருக்கு அவரே பூசியும் விட்டார். பின்பு அவரது உண்டியல் ஒவ்வொருவராக தேடிவந்தது. பலரும் கடவுளுக்குப் பயத்தில் அல்லது புண்ணியம் தேடுவதற்கு பணம்போட்டனர். இவர்களில் பலர் அந்தக் கண்பார்வையில்லாதவரை ஓட்டுனர் துரத்துவதை கண்குளிரப்பார்த்தவர்கள் (நான் உட்பட). ஆனால் எனக்கு ஆலயங்களுக்கு நிதிகொடுப்பதில் உடன்பாடில்லாததால் ஒருபோதும் பேரூந்தில் நீட்டப்படும் உண்டியலில் பணமிட்ட தில்லை. தென்னிந்தியச் சினிமாவையும், நிகழ்வுகளை யும் தரக்குறைவாக விமர்சிக்கும் எமது சமூகம் அவர்கள் இயலாதவர்களை எப்படி உலக அரங்கில் முன்னிலைப் படுத்தி அவர்களது வாழ்வில் விளக் கேற்றி விடுகின்றனர் என்ற உண்மையை எப்பொழுதும் உணர்த்தவில்லை. விசேட தேவையுடையோரின் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வற்ற மனச்சாட்சியை விற்று வாழத் துடிக்கும் சமூகத்தினுள் நானும் ஒருவனாய் வாழ்வது உறுத்தலே.


மனிதன் 5

பேரூந்தின் முதல் ஆசனங்களில் சில கர்ப்பிணிப் பெண்களுக்கென்றும், சில மத குருக்களுக்கென்றும், இன்னும் சில இடங்களில் ஊனமுற்றோருக்கான ஆசனம் என்றும் எழுதப்பட்டிருக்கும். ஆனால் அதன் படி யாரும் அமர்வதுமில்லை, அமர்த்தப்படுவது மில்லை வழமையான எமது சட்டங்களைப்போன்று வெறும் எழுத்துருவில் அவை காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. மாஞ்சோலை வைத்தியசாலைக்கும், புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கும் மருத்துவப் பரிசோதனைக்காக செல்லும் கர்ப்பிணிப்பெண்கள் அல்லது கைக்குழந்தையோடு ஏறும் பெண்களுக்கு ஆண்கள் மட்டுமே இடம் கொடுக்கவேண்டும் என்ற எமது மைய நம்பிக்கையின் தோற்றுவாயாக பெரும்பா லான ஆண்களே தமது ஆசனத்தை கொடுக்கின்றனர். பெண்கள் பயணங்களின்போது படும் துன்பங்களை பல தடைவ பார்த்துள்ளோம் அதனால் அவர்களுக்க ஆசனத்தில் ஒரு முன்னுரிமை கொடுக்கப்படுவது இன்றும் சில இடங்களில் அவதானிக்கமுடியும். அதிலும் கர்ப்பிணிப்பெண்களுக்கு அது கட்டாயம் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் கர்ப்பிணிப் பெண்ணொருவர் பேரூந்தில் ஏறினால் அவருக்கு ஆசனம் வழங்குவதில் பால்வேறுபாடு தேவை யில்லை. அவர்கள் ஏறும் பேரூந்தின் பாதையினருகில் பாதுகாப்பான இடத்தில் ஆசனத்தைப் பெற்றுக் கொடுப்பது நன்று. ஆனால் பெண்கள் பலர் தமது ஆசனத்தை பறிகொடுக்கக்கூடாதென்பதில் உறுதியாக இருந்துகொண்டு பிறரை கைநீட்டுவது தவறு.

ஒருமுறை ஒரு இளம் கர்ப்பவதி பேரூந்தில் ஏறுகின்றார் அவருக்கும் அவரது வயிற்றில் உள்ள குழந்தைக்கும் போதுமான இடம் பேரூந்தில் கிடைக்க வில்லை அதனால் மிகவும் சிரமப்பட்டு நின்றிருந்தார். அவரது கால் மிதிபட்டபொழுது வேதனையில் துடித்தார். அருகிலே ஆசனத்தில் இருந்த ஒரு நடுத்தர வயதுப்பெண் "என்னபிள்ளை நீ இப்பிடி நெரிசாலன பஸ்சில ஏன் ஏறினனி பின்னால வாற பஸ்சுகள் பிறியா வரும்தானே". காசுக்காக ஆக்களையெல்லாம் அள்ளி அடையிறது அதுக்குள்ள இப்பிடி பிள்ளைத்தாச்சி பிள்ளையளையும் பார்க்காமல் ஏத்திவிடுறது" என்று இந்தப் பெண்ணுக்கும் நடத்துநருக்கும் சரமாரியாகப் பேசினார். "கர்ப்பவதியோ இல்லை அக்கா முதல்போன ரெண்டு பஸ்சும் ஏத்தாமல் போட்டுது இதையும் விட்டால் கொஸ்பிட்டல்லை டொக்ரறைச் சந்திக்க ஏலாமல் போடும்" என்றார். "சரி சரி கொஞ்சம் முன்னுக்குப் போங்கோ அதில ஒராளை எழுப்பிப் போட்டு இரும்" என்றவர் இரண்டு ஆசனங்களுக்கு முன் அமர்ந்திருந்த ஒரு வரை நோக்கி " அந்தத் தொப்பி போட்டிருக்கிற அண்ணை ! பாவம் இந்தப்பிள்ளை கனநேரமா நிக்கிது ஒருக்கா சீற்றைக் கொடுங்கோவன்" என்று மற்றவருக்க சிபாரிசு செய்தார். தன்னாலும் அந்த ஆசனத்தை கொடுத்து உதவியிருக்கமுடியுமென்பதை இறுதிவரை உணராதவராக இப்பொழுது ஒரு பெரு மூச்சோடு மீண்டும் கண்மூடி ஆசனத்தில் சாய்கின்றார்.

எனது பயணங்களின் படிப்பினைகள் வாழ்வில் பல புரிதல்களை உருவாக்கியுள்ளது சம்பவங்களும் சாணக்கியங்களும் மாறாத இவ்வுலகின் சராசரி மனிதனாய் வாழ்ந்துபோவதுதான் எமது கடமையா விட்டதோ என்ற குற்ற உணர்வோடு எனது பயணங்கள் தொடரும் இன்னும் சில புதிய மனிதர்களைத் தேடி.

## நூல் அறிமுகம்




நூல்
கலையுருக்காட்டி
(கவிதைத்தொகுதி)

ஆசிரியர்
இ.சு.முரளிதரன்

வெளியீடு : ஜீவநதி

விலை : 200/-

சு.தவச்செல்வன்




# கலையும் வாழ்க்கையும் 'குலாத்தி' தன்வரலாற்று நாவல் வழியான தேடல்

குலாத்தி சமூகம் ஓர் அறிமுகம்.

இருபத்தியோராம் நூற்றாண்டில் வட இந்திய பிரதேசத்தில் வாழ்ந்து வரும் விளிம்புநிலை சமூகமாக குலாத்தி இனக்குழு விளங்குகின்றது. ஒருவகையில் நிலவுடைமை சமுதாய அமைப்பின் எச்சமென்றே அச்சமூகத்தை குறிப்பிடலாம். ராஜஸ்தானிய நாடோடி பழங்குடிச் சமூகத்திலிருந்து மேற்கு மகாராஷ்டிராவுக்கு குடிபெயர்ந்த ஒரு இனக்குழுவாகவே அதன் பூர்வீகம் குறிப்பிடப்படுகிறது. குலாத்தி சமூகத்தில் பெண்களே குடும்ப பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கு கின்றனர். இச்சமூகபெண்களே 'தமாஷா' என்கின்ற பாலியல் கிளர்ச்சியூட்டும் ஒருவகையான நடனத்தை ஆடி சம்பாதித்து தமது வீட்டு ஆண்களையும், குடும்பத்தையும் காப்பாற்றுகின்றார்கள்.

"இச்சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கு நடனத்திலும் இசையிலும் பயிற்சி தரப்பட்டிருந்தது. ஆண்களைச் சந்தோஷப் படுத்தி பணம் சம்பாதிக்கும்படி இப்பெண்கள் கட்டாயப்படுத்தப்படு கிறார்கள். ஆனால் இச்சமூகத்தின் ஆண்களோ பெண்களின் சம்பாத்தியத்தில் வாழ்க்கை நடத்தி வந்தார்கள். ஆண்கள் சுய நலத்திற்காகத் தங்களின் சகோதரிகளையும், மகளையும் நடனம் ஆட வைத்தாலும், தங்கள் மனைவிகளை அத் தொழிலுக்கு அனுமதிப்பதில்லை. குலாத்திச் சமூகத்தின் ஆண்கள் தங்கள் சமூகத்தைச்சேர்ந்த பெண்களைப் பெரும்பாலும் மணம் செய்து கொள்வதில்லை. கிராமம் கிராமமாகச் சுற்றித் தங்களுக்கு அழகாகத் தோன்றும் (மற்றச்சமூகத்தின்) இளம்பெண்களைக் கடத்தி வருவார்கள். 'மெலனி' என்ற சாதாரணச் சடங்கின் மூலம் அப்பெண்களைகுலாத்திகளாக மாற்றிவிடுவார்கள். இச்சமூகத்தை அதிகாரம் செய்துவரும் செல்விக்கான நபர்களை கொண்ட ஜாட் பஞ்சாயத்துதான் இப்பெண்களை குலாத்திச் சமூகத்திற்குள் ஏற்றுக் கொள்வ தற்கு அனுமதி தரும். அந்தப் பெண்ணுக்கு மஞ்சள் பூசி அலங்காரம் செய்யப்பட்டவுடன், அவள் இச்சமூகத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படுகிறாள். அந்த ஆண், பஞ்சாயத்தாருக்கு ஒரு குழந்தையைப் பெற்றுத் தந்த பின்னரே, அந்தக்குலாத்தி அவளை மணந்துகொள்வான். அதுவரை அவள் தப்பி ஓடிவிடுவாள் என்ற சந்தேகத்திலேயே அவன் இருப்பான்."

- சந்தியா பாண்டே

நிலவுடைமை சமுதாயத்தின் எஞ்சிய கூலிகள் அல்லது விளிம்புநிலை மனிதர்களின் ஒரு கூறாக விளங்கும் குலாத்தி சமூகத்தின் வறுமையே அக்குலப் பெண்களை இவ்வாறு நடனத்தொழிலுக்குள் தள்ளி யுள்ளது என்றும் குறிப்பிடுவர். இவர்கள் ஆடும் நடனம் தமாஷா அல்லது ஜல்ஷா என்று அழைக்கப்படுகிறது.

"குலாத்தி சமூகம், ஆண்களின் கவனத்தை கவருவ தற்காக தன் சமூகப்பெண்களை நடனமாடும்படி கட்டாயப்படுத்து கிறது. திருமணத்தில் நடத்தப்படுவதைப்போல அனைத்துச் சடங்குகளும் நடத்தப்படுகின்றது. ஆனால் அதன் புனிதத்தன்மை இல்லாத "சிராஉட்டர்ன" என்ற சடங்கின் மூலம் இளம் வயது கன்னிப்பெண்கள் ஆண்கள் வசம் ஒப்படைக்கப்படுகிறார்கள். பெண்ணின் கன்னித்தன்மைக்கு ஆண் ஒரு நிர்ணயிக்கப்பட்ட தொகையை தந்துவிடுகிறான். அந்த ஆண் அப்பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கும் வரை அவள் மேடையில் நடனமாடுவ தில்லை. மற்ற ஆண்களைப் பார்ப்பதில்லை. அவன் கைவிட்டு விட்டால், அவள் மேடையில் ஆடிச் சம்பாதிக்க வேண்டும். அந்த பணத்தையும் அவளது தந்தையும் சகோதரர்களும் பிடுங்கிக் கொள்வார்கள்"

குலாத்தி குலப் பெண்கள் ஒன்பது அல்லது பத்து வயதுகளிலேயே நடனமாடக் கற்றுக் கொள் வார்கள் அல்லது பழக்கப்படுவார்கள். பருவமடைந்த பெண்கள் சிராஉட்டர்ன என்ற சடங்கின் மூலம் ஆண்கள் வசம் ஒப்படைக்கப்படுகிறார்கள் என்று குலாத்தி வழக்கப்படி சொன்னாலும் கூட, உண்மையில் அவர்கள் நிலப்பரப்புக்கள், நிலவுடையாளர்களுக்கு, அல்லது பண்ணையாளர்களுக்கு விற்கப்படுகிறார்கள் எனவே

குறிப்பிட வேண்டும். இந்த நாவல் இதற்கு சாட்சியாக அமைகிறது. 'குலாத்தி' என்ற இந்நாவலில் வரும் சந்தகலா பாய், ஜீஜீ, சாந்தாபாய், சுசீலா மௌஷி ஆகிய பெண்கள் மாதவ்ராவ் பட்டேல், தேவ்ராஜ் ஜகதப், தாருகர், நானா, சோசன்ராவ் கோல் கேகர் ஆகிய பண வசதி படைத்த நிலவுடைமையாளர், பண்ணையாளர் அல்லது செல்வந்தர்களுக்கு "சிரா உட்டான்" என்ற சடங்கின் மூலம் விற்கப்பட்டார்கள் ஆனால் இவர் களின் யாருடைய வாழ்க்கையும் முழுமை பெற்றதா கவோ அல்லது மகிழ்ச்சியானதாகவோ அமைய வில்லை. இவர்களுக்கு வயது கட்டுப்பாடுகள் இல்லை அறுபது வயதுடைய ஒரு பணக்காரர்கூட இருபது வயதுடைய ஒரு பெண்ணை "சிரா உட்டா்ன" சடங்கை செய்து கொள்ளலாம். அல்லது வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளலாம். அதற்கு பதிலாக பெருந் தொகை பணத்தை, வயல்நிலம், சொத்து, வீடுகளை அவனின் தந்தைக்கு வழங்க வேண்டும். இதுவே குலாத்தி சமூகத்தின் பிரதான விடயம். அவர்களது பரம்பரை வரலாறும் இவ்வாறே அமைகிறது. இதிலிருந்து மாறுபட்ட வரலாற்றை நோக்கி பயணிக்க முடியாமல் போராடுகின்ற விளிம்புநிலை மனிதர் களாகவே குலாத்தி சமூகத்தினர் காணப்படுகின்றனர். இவ்வாறு நிலவுடைமையாளர்களால் வாங்கப்படும் பெண்கள்/நிலவுடைமையாளர்களுக்கு விற்கப்படும் பெண்கள் சில காலம்வரை அவர்களுடன் வாழ் கிறார்கள் பின்னர் கைவிடப்படுகிறார்கள்.

பெரும்பாலான பெண்கள். கர்ப்பமாகவே, அல்லது குழந்தைகளுடனேயே கைவிடப்படுகிறார்கள். அதனால் தான் இப்பெண்களைப் குறித்த அடைமொழி "குலாத்திப்பெண்கள் கன்னிகளாக இருக்கும் போது விற்கப படுவார்கள் கா்ப்பமாகி விட்டால் கைவிடப்படுவார்கள்" என்று அமைகிறது.

இவ்வாறு கைவிடப்பட்ட பெண்களின் பிள்ளைகள் தந்தையற்றவர்களாகவே அடையாளம் காணப்படுகிறார்கள். குலாத்தி என்பதன் பொருளும் இவ்வாறே விளக்கப்படுகிறது. இந்த பிள்ளைகளின் பெயர்களுக்கு முன்னே தந்தையின் பெயர்களை குறிப்பதற்கு பதிலாக அவர்களின் பெயர்களுக்கு பின்னே தாயின் பெயரே குறிக்கப்படுகிறது.

**ஜல்ஷா அல்லது தமாஷா நடனம்**

தமாஷா எனப்படும் குலாத்தி சமூகத்தில் பெண்கள் ஆடுகின்ற நடனத்தை பெரும்பாலனவர்கள் ஜல்ஷா என்றே அழைப்பர். ஜல்ஷா நடனத்தையும் அவர்களின் வாழ்க்கையையும் தனித்தனியே பிரித்து நோக்க முடியாது. பிறகலைகளைப்போல நடனம் இக்குலப்பெண்களின் வாழ்க்கையிலிருந்து தனியாக ஆடப்படுவதல்ல. இவர்கள் பிழைப்புக்காகவே நடன மாடுகின்றார்கள். இன்னொரு வகையில் சொல்லப் போனால் இப்பெண்களின நடத்தில்தான் குலாத்தி குடும்பங்களின் வாழ்க்கையே புதையுண்டுள்ள தெனலாம்.

இசையும் பாடலும் கலந்த வகையைச்சார்ந்து, ஆண்களின் கவனத்தை ஈர்த்து, கிளர்ச்சியூட்டக்கூடிய நடனநிகழ்ச்சியாகவே ஜல்ஷா விளங்குகிறது. டோலக் இதன் பிரதான இசைக்கருவியாகவும் ஹார்மோனியம் பயன்பாட்டுக் கருவியாகவும் காணப்படுகிறது. பெண்கள் பாடலை பாடிக்கொண்டே ஆடுவர் அல்லது பாடல் வேறொருத்தியால் பாடப்படும். பெண்கள் ஸ்நோபவுடர், கண்மை, உதட்டுச்சாயம் முதலியவற்றை பூசி தம்மை அலங்கரித்துக்கொண்டு, தலையில் பூக்களைச் சூடிக்கொண்டு கால்களில் பல சலங்கைகளை அணிந்து கொண்டு ஆடுவர். நாட்டிய அரங்கு அல்லது நடன அரங்குகளிலே ஆடப்படும் இந்நடனம் பெரும் பாலும் மாலை அல்லது இரவிலேயே தொடங்கும் நேரம் செல்லச்செல்ல இவ்வாட்டம் சூடுபிடித்து செல்லும். உணர்ச்சி பீறிட்டு கை தட்டல், கிண்டல்கள், சத்தங்கள், கூச்சல்கள் போட்டு ரசிக்கும் பார்வையாளர்கள் வெறிக் கப்பார்ப்பார்கள், நடனக்காரிகளை பார்த்து கண் அடிப் பார்கள் பணம் இடுவார்கள். இந்நடனத்தை பார்க்க வருபவர்கள் பணக்காரர்கள், நிலப்பிரபுக்கள், பண்ணை யாளர்களாகவே ஆகவே இருப்பர். இவர்கள் நடனக் காரிக்குப் பணத்தை காண்பிப்பார்கள், அல்லது பணத்தை மேடையில் வீசுவார்கள், அபிமான நடனக் காரியை மீண்டும்பாடும்படி அல்லது ஆட வலியுறுத்துவர்.

நடனக்காரிகளே பணத்தை வந்து பெற்றுச் செல்ல வேண்டும். அவர்கள் நடனத்தை நிறுத்திவிட்டு வந்து வாங்க முடியாது. அதற்காக அவர்கள் "கோடா" என்றழைக்கப்படும் குதிரை நடையினை பயன் படுத்துவர்.

கால்களை அவர்கள் மடக்கிவைத்தபடி குதிரையைப் போல துள்ளி துள்ளி வந்து பணத்தை வாங்கிச் செல்லவேண்டும். இவ்வாறு அவர்கள் வரும் போது பின்னங்கால்களும், தசையும் மிகவும் வலியை ஏற்படுத்தும், அது போலவே இன்னொரு முறையும் உண்டு. அதாவது நடனமாடுபவள் பின் புறமாக வளைந்து பணத்தை தன் நெற்றியில் ஒற்றி எடுக்க வேண்டும்.

குலாத்தி நடனக்காரிகள் தனியாகச் சென்று ஆடுவதில்லை குழுவாக வெவ்வேறு இடங்களுக்குச் சென்று அங்கு தங்கி நடன அரங்குகளில் ஆடுவர். இவ்வாறு ஆடும்போது சில இடங்களில், பல குழுக்கள் வந்து ஒரே அரங்கில் மாறி மாறி ஆடுவதும் உண்டு. இவ்வாறு மாறி மாறி ஆடும் குழுஆட்டம் இரவு பன்னி ரெண்டு ஒரு மணிவரை நடந்து முடிந்த பின்பு 'பெய்த்' என்று அழைக்கப்படும் விஷேச ஆட்டம் நடைபெறும். இதில் பார்வையாளர்கள் தமக்கு பிடித்த அல்லது அழகான நடனக்காரியை மீண்டும் குறைந்தப்பட்சம் 300 ரூபாய் காசுகட்டி ஆடச்சொல்வர் இதில் அரைவாசிப் பணத்தை அரங்கு சொந்தக்காரருக்கு கொடுக்க வேண்டும். இவ்வாட்டம் விடியும் வரை நடைபெறும் இந்த விசேச ஆட்டத்துக்கு வரும் பார்வையாளர்களும் குடித்து விட்டு அல்லது மது பாட்டில்களுடனேயே வருவர் இது பெண்களுக்கு நரக வேதனையைத் தரும் ஆட்டமாகும். விடியும் வரை ஆடிவிட்டு காலை 11 மணியளவில் தூங்கி எழுந்து குளித்துவிட்டு மீண்டும் மாலை ஆட்டத்துக்கு தயாராதல் வேண்டும்.

**குலாத்தி நாவலில் வரும் பெண்கள்.**

ஜல்ஷா நடனமாடும் குலாத்தி நடனக்காரி களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டுதான் கிசோர் சாந்தாபாய் காலே 'குலாத்தி' என்ற தன்வரலாற்று

நாவலை படைத்துள்ளார். இந்நவாலில் அவர் இவ் வாறான பல ஜல்ஷா நடனக்காரிகளையும் அவர்களின் வாழ்க்கையையும் அறிமுகப்படுத்துகிறார். லட்சுமி பாய், சந்திரகலாபாய், ஜீஜீ, சாந்தாபாய், சுசீலாமௌஷி, ரம்பா மௌஷி, பேபி மௌஷி ஆகிய இந்நாவலில் வரும் குலாத்தி சமூக பெண்கள் அனைவருமே ஜல்ஷா நடனமாடுபவர்களாகவே காணப்படுவதோடு, அவர் களின் வாழ்க்கை மிகவும் மோசமாகவே எடுத்து காட்டப்படுகிறது.

திராதரவற்ற லட்சுமிபாய் குருஸ்ண குலாத்தி என்ற நடனக்குழுவைச் சேர்ந்த ஆணிடம் தன்னை ஒப்படைக்கிறாள். அவனது மகள் சந்திரகலாபாய் ஜல்ஷா குழுவில் இணைந்து நடனமாடுகிறாள். சிறந்த நடனக்காரியான அவளுடன் வாழ்க்கை நடத்த அல்லது அவளை அடைய அதிகமானோர் வந்தனர். அதற் கெல்லாம் மறுத்து பிழைப்புக்காக ஆடிவந்தவள் வீடு, நிலம், தங்கம் ஆகியன தருவதாக வந்த ஒருவருடன் அவள் வாழ்க்கை நடத்தச் சென்றுவிட்டாள், அதன் பின்னர் நடனமாடுவதற்கு வரும் அந்த குடும்பத்தைச் சேர்ந்த கோண்டிபாவின் சகோதரி ஜீஜீ நீண்ட நாட்கள் ஜல்ஷா ஆடுகிறாள்.

ஆறு அறைகள் கொண்ட ஒரு வீட்டையும், இருபத்தைந்து ஏக்கர் நிலத்தையும் குருஸ்ண குலாத்தி என்ற ஜீஜீயின் சகோதரனிடம் கொடுத்து மாதவ்ராய் பட்டேல் அவளை வாங்குகிறார். பின்னர் கொஞ்ச காலம் ஜீஜீயுடன் வாழ்ந்த அவர் வயதானவர் என்பதால் இறந்து விடுகிறார். அதற்கு பின்னர் ஜீஜீ தனிமையடை கிறாள். மாதவ் ராவ் பட்டேல் வாழ்ந்த காலத்தில் மிகவும் செல்வாக்காக இருந்தவள். அவர் இறந்ததும் குடும்பத்தால் புறக்கணிக்கப்படுகிறாள். மீண்டும் ஜல்ஷா நடனமாடுகிறாள் அவளது தலைமையில் ஜல்ஷா குழு பல இடங்களுக்குச் செல்கிறது. அவளுடன் சாந்தா, சுசீலா ஆகிய அதே குடும்பத்தைச் சேர்ந்த இளம்பெண்கள் ஜல்ஷா ஆடுகிறார்கள். சாந்தாவும் சுஷீலாவும் அழகும் வயதும் வந்த பின்னர் பிரதான ஆட்டக்காரிகளாக மாறியதும் ஜீஜீயை வயல்காட்டில் வேலைசெய்யவும், மாடு மேய்க்கவும் விட்டு விடுகிறான் அவளது சகோதரன் கோண்டிபா

சாந்தாவின் நடன குழவினர் ஒரு ஊருக்குச் சென்று நடனமாடிக் கொண்டிருக்கும் போது மன்வத் என்ற கிராம ரௌடி அவளைத் தூக்கிச் செல்கிறான் அவனிடமிருந்து குழுவினர் காப்பாற்றுகிறார்கள் சந்திரகலாபாயும், ஜீஜீயும் தலைமையேற்று ஆடிவந்த ஜல்ஷாவை சாந்தா தலைமையேற்று ஆடியபோது பல்வேறு துன்பங்களை அனுபவிக்கிறாள். பலர் அவளை அடைய நினைக்கிறார்கள். நெர்லாவிலுள்ள சட்டமன்ற உறுப்பினர் தேவராவ் ஜக்தப் பெருந் தொகையான பணத்தை அவளது தந்தை கோண்டிபா விடம் கைளியத்து சாந்தவை ஜல்ஷா ஆடுவதிலிருந்து நிறுத்தி அவனது மனைவியாக்கிக் கொள்கிறான். ஆனால் சாந்தா கோண்டிபாவின் வீட்டில்தான் இருந்தாள். சில நாட்களில் கர்ப்பமடைகிறாள். சாந்தா கர்ப்பமடைந்ததும் தேவ்ராவ் ஜக்தப் அவளை கைவிடு கிறான். அங்கு வருவதை நிறுத்திக் கொள்கிறான். சாந்தா கைவிடப்பட்டதால் கர்ப்பமடைந்துடன் அவள் நடன மாட முடியாதென யோசித்த கோண்டிபா அவளது கருவை கலைக்க முயற்கிக்கிறான். கருக்கலையாததால் சாந்தா எட்டு மாதம் வரை கர்ப்பத்துடன் மீண்டும் நடனமாடுகிறாள். குழந்தை பிறந்ததும் குழந்தைக்கு பால் கொடுக்க முடியாது. அதன் வாயில் ஈரத்துணியை வைத்துவிட்டு நடனமாடும் அவலநிலை சாந்தா மட்டு மல்ல பல குலாத்தி பெண்களால் அனுபவிக்கப்படுகிறது.

முன்பே திருமணம் முடித்த, வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்யும் சகுர்கர் நானா சாந்தாவை அவளுடன் வந்துவிடும்படியும் வாழ்க்கை நடத்தும் படியும் தொந்தரவு செய்கிறான் இவனுக்கு பதில் கூறும் வகையில் அமையும் இக்கூற்றில் குலாத்தி சமூக மட்டுமல்லாது அனைத்து பெண்கள் தொடர்பான உணர்வுகளாக அமைகிறது.

"சகுர்கர் இப்படியே செஞ்சிட்டு இருக்காதீங்க, எங்களுக்கு கூட பிரச்சினைகள் இருக்கு எங்களைப் போல இருக்குற ஆட்டக்காரிகள் ஆசப்பட்டு இங்கு இருக்கல, வேறவழி இல்லாமத்தான் இருக்கிறோம். சொந்த குடும்பம் வேணும் சொந்த வீடு வேணும் அப்படிஙற ஆச எங்களுக்கு இருக்கு ஆனால் இந்த தொழிலை நடத்தினாதான் எங்க அப்பாக்களும், அண்ணன், தம்பிகளும் அவங்க குடும்பமும் பொழைக்க முடியும். உங்கள போல இருக்குற ஆளுங்க இங்க வந்து இனிக்கிற மாதிரி பேசி எங்களை கட்டாயப்படுத்துறீங்க, ஆனால் கொஞ்சநாளைக்கு பிறகு நாங்க சலிச்சு போயிட்டம்னு எங்களை நட்டாத்துல உட்டுடுவீங்க எங்க இளமை, எங்க குடும்பம், எங்ககனவு எல்லாத்தையும் நாங்க இழந்துவிட்டோம்"

சாந்தாபாயின் இந்த கருத்துவெளிப்பாட்டில் குலாத்தி பெண்கள் மீதான ஆண்களின் கவனமும் நோக்கமும் எவ்வாறான உணர்வு நிலைகளைக் கொண்டவை என்பது மட்டுமன்றி. அவ்வுணர்வு நிலைகளின் மறைவில் ஒளிந்திருக்கும் பெண்களின் தவிப்பும் ஏக்கமும் எவ்வாறானது என்பதையும் அறிந்து கொள்ள முடியும். இந்த வேதனைக்குரல் சாந்தாபாயுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அவளை தொடர்ந்து இவ்வடக்கு முறைகளுக்குள்ளான ஜீஜீ, சுசீலா மௌஷி, ரம்பா மௌஷி ஆகிய அடுத்த தலைமுறைப் பெண் களிடமும் ஒலிக்கின்றது.

இவ்வாறு மிகவும் சிக்கலான வாழ்க்கையை நடத்திச் செல்லும் குலாத்திப் பெண்கள் ஒரு கட்டத்தில் என்ன செய்வதென்று திக்குதெரியா நிலைக்குச் சென்று விடுகிறார்கள். தமது மகள் ரம்பாமௌஷி தமாஷா நடனத்திற்கு போகாமல் வறுமையுற்றிருந்த பொழுதில் அவளை ஆயிரம் ரூபாய்க்கு விபச்சாரத்துக்குட்படுத்தும் தந்தை யாகவே அஜோபா மாறிவிடுவது அதிர்ச்சியளிக் கும் வாழ்க்கை சம்பவமாக பதிவு செய்யப்படுகிறது.

**விளிம்புநிலை குலாத்தி சமூகத்தின் விடுதலை குரலாக கிசோர் சாந்தாபாய் காலே.**

**பள்ளிக் கல்வி**

இன்று பொருளாதார பின்னடைவு மற்றும் பல்வேறு அடையாளப் பிரச்சினைகளின் காரணமாக உலகெங்கிலும் விளிம்புநிலையினர் என்ற ஒருவகை மக்கள் வாழப்பட்டு வருகின்றனர். அவ்வாறானவர்களின் வரிசையிலேயே குலாத்திச் சமூகத்தினரும் இருக் கிறார்கள். பொதுவாக உற்பத்தியையும், பொருளாதா ரத்தையும் கைவிட்டவர்கள் அல்லது உழைப்பும்

பொருளாதாரமும் உறிஞ்சப்பட்டவர்களே இந்நிலைக்கு ஆளாகின்றனர். இச்சமூகத்தின் ஈடேற்றம் எதில் தங்கியுள்ளது என்பது பெருங்கேள்விக்குரியதாகும். ஒரு வகையில் குலாத்தி பெண்களை விற்றுப்பெறப்படுகின்ற பெருந்தொகைச் செல்வம், பொருள் நிலம் எல்லாமே குடித்தழித்தே வெறுமையாக்கப்படுகின்றன அல்லது அவற்றில் எதுவுமே முதலீடாகவும் இல்லை. இந்த ஈடேற்றத்தின் ஏக்கப்பெருமூச்சுக்கான பெறுமதி வாய்ந்த ஆயுதம் கல்வியே என்பதை இந்நாவலின் பிரதான பாத்திரமாக விளங்கும் 'கிசோர் சந்தாபாய் காலே' நிரூபிக்கிறார். ஆனால் குலாத்திச் சமூகத்தில் பிறந்த ஒரு ஆண் குழந்தை கல்வியின் மூலம் வெற்றிபெற முடியுமா? என்பது இந்நாவலின் தொடக்கத்திலேயே வாசகர் மனதில் விதைக்கப்படுகிறது. பிறந்தது முதல் உயிர் வாழ்வதற்கான போராட்டத்தினை வலிமையாக எதிர் கொள்ளத்தொடங்கி இறுதிவரையும் போராடி வெற்றி பெறும் கிசோர் சாந்தாபாய் "காலேயின் கல்வி கனவு" எவ்வாறு நிறைவேறுகிறது. என்பதையும் வாள் முனையில் நடந்து அதை அவர் அடைந்த அனுபவத்தையும் கண்டறிவது இன்னும் கல்விக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்ற வறிய சமூகங்களுக்கு படிப்பினையாக அமையும்.

தேவ்ராவ் ஐதகப் என்ற நிலவுமையாளரிடம் கர்ப்பமடைந்த சாந்தாபாய், கிசோர் கருவுற்றிருக்கும் போதே நடனமாடுகிறாள் பிறந்த இரண்டு மாதங்களில் மீண்டும் ஜல்ஷா நடனமாடுகிறாள். கிசோர் பாலுக்காக அழும்வேளையில் ஈரத்துணியை அவனது வாயில் வைத்துவிட்டு நடனமாடச் செல்கிறாள் நான்கு வயதில் அவனை விட்டுவிட்டு நானாவுடன் செல்கிறாள். ஆனால் அவள் விட்டுச்சென்ற அவளது தாத்தாவோ கிசோர் கல்வி கற்பதை விரும்பவில்லை. அஜோபா அவனை தபேலா அடிக்க கத்துக்கொள்ளும்படி சொல்கிறான். அவ்வேளையில் காவ்லி என்ற குருஜீதான் அவனை பள்ளியில் சேர்த்தார்.

தந்தை இல்லை தாய் வேறொருவருடன் கைவிடப்பட்ட நிலையில் கிசோர் முதலாம் வகுப்பில் நுழைகிறான். அஜோபா, கிசோரை ஒதுக்கி வைத்தது போலவே ஜீஜீயையும் ஒதுக்கி வைத்ததுடன் அவள் வயல் காட்டில் வேலைசெய்துவிட்டு அங்குள்ள குடிசையிலேயே தங்கிக் கொள்வாள். கிசோருக்கு அவள் மட்டுமே உதவி செய்வாள். தனது ஆரம்பக்கல்வியின் பெரும்பகுதியை வயல் காட்டிலுள்ள குடிசையிலேயே படித்து கழிக்கிறான். ஆரம்ப கல்வி படித்துக் கொண்டிருக்கும் போது வீட்டில் உள்ளவர்கள் அவனை பல்வேறு வகையில் ஒடுக்கி வேலை வாங்குகிறார்கள். சாப்பாடு கொண்டு போக வீட்டுவேலை செய்ய என்று பல சில்லறை வேலைகள், இருட்டில் வயலுக்கு சாப்பாடு கொண்டுபோய் நாயிடம் கடிபடுகிறான். வீட்டிலுள்ள இன்னொரு குலாத்தியான சுசீலாவின் எஜமானுக்கு கால் அமுத்திவிட்டு அவர் கொடுக்கும் பணத்திலும் அஜோபாவின் ஒன்றுவிட்ட சகோதரரின் வீட்டுக்கு 15 கட்டுபுல் அறுத்துத் கொடுத்தும் மூன்றாம் நான்காம் ஆண்டுகளுக்கான பாடநூல்களை வாங்குகிறான். பாடசாலைக்கு போகாமல் ஒவ்வொரு நாளும் மூன்று மணிநேரம் புல் அறுக்கிறான். குடும்பத்தில் புறக்கணிப்பு, அடி உதை, தொல்லை காரணமாக யாருக்கும் தெரியாமல் பேருந்தில் ஏறி கர்மலாவிற்கு வேலைக்கு போகிறான். இவ்வாறுதான் செல்கிறது அவனது தொடக்க கால கல்வி

மீண்டும் திரும்பி வந்தவன் நான்காம் ஆண்டு கல்வியை தொடர்கிறான். இக்காலப்பகுதியில் அறுவடைக்காலம் என்பதால் அவனுக்கு வயல்வேலை அதிகம் பாடசாலை செல்லாமல் வயல் வேலைக்குச் செல்கிறான். நான்காம் ஆண்டு பரீட்சையின் போது விழுந்து காயம்பட்டு பரீட்சை எழுதுகிறான். "ஒவ்வொரு நாளும் சாகிறவனுக்காக யார் அழுவார்கள்" என்று சொல்லிக் கொண்டே வயல் வேலை முடித்து வயல் குடிசையில் தங்கி இரவு நீண்ட நேரம் லாம்பு வெளிச்சத்தில் விழித்திருந்து படிக்கிறான். குலாத்திச் சமூகத்தில் யாரும் ஆரம்பக்கல்வியைத் தாண்டியதில்லை கிசோர் 'சாஷ்ஷா' பரீட்சை எழுதி ஐந்தாமாண்டுக்கு செல்கிறான். கடும் வேலை, தொடர்ச்சியான களைப்பு, பசி பட்டினி ஆகிய மன உளைச்சல்களுடனேயே அவனது ஆரம்பக்கல்வி தொடர்ந்தது ஒரு முறை சாந்தாபாய் சோனிபேட்டுக்கு வரும்படி அனுப்பியிருந்த கடிதத்தை கிசோர் போனால் எடுபிடிவேலைக்கு ஆளில்லையென்று மறைத்து விடுகிறான் அவனது தாத்தா அஜோபா மீண்டும் ஒருமுறை பள்ளிவிடுமுறையில் ஜீஜீயுடன் பத்து நாட்கள் சாந்தாபாயின் வீட்டில் தங்குகிறான். அப்போது அவள் இரண்டாவது குழந்தையை பெற்று வளர்த்துக் கொண்டிருக்கிறாள். அங்கு அன்பாதரவு கிசோருக்கு தன்தாயிடமில்லை. மீண்டும் நெர்லா திரும்புகிறான். ரொட்டியும் ஊறுகாயையும் கட்டிக்கொண்டு புத்தகங்களையும் சுமந்துகொண்டு எருமைகளை மேய்ப்பதற்காக தொலை தூர காட்டுக்குச் செல்கிறான். எருமைகளை மேயவிட்டு அங்குள்ள கற்பாறைகளில் அமர்ந்து கொண்டு படிக்கிறான் கடும். மழை இடிமின்னலில் அகப்பட்டு நனைந்தவாறு எருமைகளை ஒட்டிக் கொண்டு வீடு வந்து காய்ச்சலில் தவிக்கிறான். அநாதரவற்ற குழந்தைகளின் கல்வி பற்றிய சிந்தனைகள் இங்குதான் மேலெழுகிறது.

பெற்றோர் கைவிட்ட பிள்ளைகளின் பொதுவான இயல்புகளை போல கிசோரும் சிறுவயதிலிருந்தே மிகவும் கடுமையான வேலைக்களுக்கே பழக்கப்படுகிறான். எருமை மேய்த்துவிட்டு காய்ச்சலில் தவக்கின்ற போதே அவன் 5 கீலோ சோளமாவை அரைப்பதற்கு அவனது தாத்தாவால் அனுப்பட்டு பைத்திகாரியால் தாக்கப்பட்டு மண்டை பிளந்து கொண்டு வருகிறான். இவ்வாறு ஐந்தாம் ஆண்டு படிக்கும்போது பல சோதனைகளுக்கு உள்ளாகிறான். ஜீஜீ மட்டுமே அவனுக்காக பரிதாபப்பட்டு பேசுவாள் அவள் குடும்பத்துடன் சண்டை பிடிப்பாள் வயலில் கால் நடைகளை மேயவிட்டபடி ஐந்தாமாண்டு இறுதி தேர்வு எழுதிகிறான்.

தேர்வுக்கு பின்னருள்ள விடுமுறையில் மீண்டும் ரம்பா மௌஷியுடன் ஜல்ஷா நடனக்குழுவுக்குச் சென்று அங்கு எடுபிடிவேலைகள் செய்கிறான். அங்குள்ள நடனக்காரிகள் மற்றும் நடனம் பார்க்க வரும் ஆண்களுக்கு எடுபிடிவேலைகள் செய்வதால் கிடைக்கும் சிறிய பணத்தை சேர்த்துவைக்கிறான். கிசோருக்கு சிறுவயதிலிருந்தே கல்வி மீதான ஆர்வம் அதிகம் இருந்தது எப்படியாவது படித்து ஒரு ஆசிரியராக வரவேண்டுமென்ற இலட்சியமும் அவனிடமிருந்தது. பார்சியில் நடனக்குழுவுடன் சென்று தங்கியிருந்து

**குலாத்திச் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இத்தன்வரலாற்று நாவலானது ஏனைய நாவல்களில் இருந்து வேறுபட்டது. புனைவுக்கு இடம் குறைவாகவும் உண்மைக்கு இடம் அதிகமாகவும் தன்வரலாற்று நாவல்களில் காணப்படுவது இயல்பு இந்நாவலும் அதுபோலவே அமைந்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது.**

எடுபிடிவேலைகள் செய்ததில் கொஞ்சம் பணத்தை சேமித்துக் கொண்டு வருகிறான். ஆறாம் வகுப்புக்குத் தேவையான பழைய புத்தகங்களை வாங்கிக்கொண்டு மீதிப்பணத்தை ஜோமெட்ரி பொக்ஸ் முதலிய பாட சாலை உபகரணங்கள் வாங்க ஒளித்து வைக்கிறான். அந்த பணத்தை அவனுக்குத் தெரியாமல் திருடி மது பாட்டில்கள் வாங்கிவிடுகிறான் அஜோபா. கடும் கோபத்துடன் சண்டைப் போட்டுவிட்டு முதல் தடவையாக வீட்டிலுள்ளவர்களை எதிர்க்கிறான். அஜோபா மீது கல்லெறிந்துவிட்டு வெளியே போய் விடுகிறான். பக்கத்து வீட்டார் அவனுக்கு உணவு கொடுத்து ஆதரிக்கின்றார்.

சிறுவயதிலேயே கல்விக்கான வேட்கையை உருவாக்கிக் கொண்டு போராடும் கிசோரின் கல்விக் கான எல்லா பக்கங்களுமே தடையாகவே அமைந் திருந்தது. மிகவும் உளப்பாதிப்புக்குள்ளான அவன் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு நொந்துக் கொள்கிறான்.

"சாப்பிட முடியாத அளவுக்கு நான் நிலைகுலைந்து போயிருந்தேன் நான் பாயை நினைத்து ஏங்கினேன். அவளிடம் செல்ல ஆசைப்பட்டேன். ஆனால் சோனிபேட் செல்வதில் என்ன பயன்? சிறிது நாட்கள் கழித்து மீண்டும் நெர்லாவுக்கே வந்தாக வேண்டும் ஏன் என்னோட அம்மா என்னைத் தன்னுடனே வைத்துக் கொள்ள மறுக்கிறாள்? நான் அவள் மகனில்லையா? அவளுக்கு என் மீது பாசம் இல்லையா? அலைக்கழிக்கும் ஆயிர மாயிரம் கேள்விகள் என் மூளையில் மோதிக் கொண்டிருந்தன. எனக்கு பைத்தியமே பிடித்துவிடும் போல் இருந்தது"

ஏழாம் ஆண்டு படிப்பதற்கு நகரப்பள்ளிக்கே செல்லவேண்டுமென்பதால் அதற்காக தன்னை தயார்படுத்துகிறான். பண்ணையிலுள்ள சில கோழி களை விற்று புத்தகங்களை வாங்குகிறான். ஆனால் இந்த சூழ்நிலையில் சாந்தா நெர்மலாவுக்கு வருகிறாள். கிசோரை அவளுடன் இருக்க அழைத்துச் செல்கிறாள். ஏழாம், எட்டாம், ஒன்பதாம் வகுப்புகளை அவன் அங்கிருந்தே படிக்கிறான். அங்கும் அவன் வேலைக் காரனைப்போல் வீட்டுவேலை பார்க்கிறான். நாணா அவனது 'மாவுமில்லை' கிசோரை கவனித்துக்கொள்ளச் சொல்கிறான். மாவுமில்லின் கணக்கு வழக்குகளை பார்த்துக்கொண்டு வீட்டு வேலையும் செய்துகொண்டு இரவுப்பகல் விழித்திருந்து படிக்கிறான். நாணா இன்னொரு ஜல்ஷா நடனக்காரியுடன் தொடர்பு வைத்துக்கொண்டு மூன்று பேரையும் அடித்து துன்பம் கொடுக்கிறான். பல நெருக்கடிகளுக்கு மத்தியில் ஒன்பதாம் ஆண்டு பரீட்சையை முடித்துக்கொண்டு அங்கிருந்து தப்பித்து ஓடி "குண்டன் கானா" எனும் இடத்திலுள்ள அவனது நண்பனுடன் விபச்சார விடுதியில் வேலை செய்யத் தொடங்கினான்.

கிசோருக்கு சிறுவயதிலிருந்து கல்வியினூடாக தனது இட்சியத்தை அடைந்து விட வேண்டும் என்ற வெறி இருந்ததால் அதற்காக எதையும் செய்யத் துணியும் மனநிலை உறுதியாய் இருந்தது. வீட்டு வேலைகளில் முழுமையாக ஈடுபடுதல் கடினமான வயல்வேலைகளை சளைக்காமல் செய்து முடித்தல். எருமைகளை மேய்த்து வருதல், ஜல்ஷா நடனக் குழுவில் இருந்து கொண்டு விடியும் வரை விழித்திருந்து உதவி செய்தல் என்று பல கடினமான அனுபவங்களிலேயே அவன் வளர்ந்து வருவதால் பள்ளிக்கல்வியின் சவால் களை எதிர்கொள்வதில் அவனுக்கு சங்கடங்களில்லை. ஒவ்வொரு கட்டத்திலும் சவால்களிலேயே அவனது கல்விப்பயணம் தொடர்கிறது. பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் பத்தாம் வகுப்பில் சித்தியடைகிறான். கல்லூரி படிப்புக்கான சவால்கள் அவனை எதிர்கொள்ள தயாராக இருக்கிறது.

மருத்துவ கல்லூரியும் கிசோரின் வேட்கையும்.

கிசோர் பத்தாம் வகுப்புத்தேரியதும் அவனது நண்பனின் வழிகாட்டலில் ஒரு விபச்சார விடுதியில் வேலை செய்கிறான். அந்த விடுதியிலுள்ள ஹமீதா என்ற பெண்ணிடம் "மருத்துவ கல்லூரியில் படிக்க வேண்டுமென்ற" விருப்பத்தை தெரிவிக்கிறான். அவள் இங்கிருந்து இரு வரும் ஓடிவிடுவோம் நான் உன்னைப் படிக்க வைக் கிறேன் என்கிறாள். விடயம் தெரிந்த விடுதி அதிகாரி அவனை விரட்டி விடுகிறான். மீண்டும் அவன் மருத்துவ கல்லூரியில் சேர்கிறான் என்று தெரிந்ததும் நாணா கொஞ்சம் உதவி செய்கிறான். அம்பேஜோகையில் உளமருத்தவ கல்லூரியில் ஒரு வகையாக சேர்ந்து உயிரியல், இயற்பியல், வேதியல் ஆகிய பாடங்களை கற்கிறான். அங்கும் ஆங்கிலம் தெரியாமல், கல்விக்கு கட்டணமில்லாமல், டியூசன் வகுப்புக்கு செல்ல முடியாமல் பல பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றான். இச்சந்தர்ப்பத்தில் தாலே என்ற அவனது நண்பன் உதவி புரிகிறான். அவனது அறையில் இருக்கச்செய்து உதவுகிறான். அதே வேளையில் ரம்பா மௌஷி அந்த நகரத்தில் தமாஷா நடனம் ஆடுகிறாள்.

அவளை சந்தித்து அவளிடமும் உதவி பெறுகிறான். ஜல்ஷா குழுவுடன் கிசோரைக் கண்டதும் அவனது நண்பன் தாலே அவனது சாதியை தேடி அவனை புறக்கணிப்பதால் அறையை விட்டு வெளியேறி மருத்துவ கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்துகிறான். அவனது குலாத்தி குடும்பத்திலிருந்து பிரிந்து சென்று பார்ப்பானியில் வசிக்கும் அவனது சித்தியான நாஜின் என்பவளை சந்திக்கிறான். அவள் டியூசன் வகுப்புக்கு உதவுகிறாள். அதே வேளை அவனது மருத்துவ கல்லூரி படிப்பு மீண்டும் தொடங்குகிறது. இடைக்கிடையே ஜல்ஷா குழுவுடன் இணைந்து கொள்கிறான். ஜல்ஷா குழுவுடன் அவன் இணைந்திருப்பது அவன் குலாத்தி சமூகத்தை சேர்ந்தவனாயிருப்பது மற்றும் பார்பானி மற்றும், அம்பேஜோகை ஆகிய பகுதிகளில் பார்ப்பனிய ஆதிக்கம் ஆகிய விடயங்கள் கிசோருக்கு பல அவமானங்

களையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியிருந்தது. அவனுடன் படிக்கிற விலாஸ் என்ற மாணவன் நேரடியாகவே "உனது சித்தி கூப்பிட்டாள் வருவாளா" என்றும் கூட கேட்டு அவமானப்படுத்துகிறான். வட இந்திய பகுதிகளிலும் சாதிவெறியின் தாக்கம் பலவடிவாங்களில் இருந்ததையும் இது தன் வரலாற்று நாவலில் பதிவு செய்துள்ளது.

பல்வேறு துன்பங்கள், அவமானங்கள், தடைகளுக்கு மத்தியில் கிசோர் பன்னிரெண்டாம் வகுப்பில் சித்தியடைகிறான் பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் இரண்டாவதாக தேறினான் இது அவனது வாழ்வில் ஏற்பட்ட பெரும் திருப்புமுனையாக அமைகிறது. இப்போது அவனது பழைய பாடசாலையான "லோகேஸ்வரி கல்லூரி" பாராட்டு விழா நடத்துவதற்கு அழைக்கிறது. குலாத்தி சமூகத்திருந்து மருத்துவ கல்லூரிக்குச் சென்ற முதலாவது மாணவனாக கிசோர் அடையாளப்படுத்தப் படுகிறான். பம்பாய் கிரேண்ட் மருத்துவ கல்லூரியில் மருத்துவம் படிக்கின்ற ஆறு மாணவர்களில் கிசோரும் ஒருவன் அவன் மருத்துவராக படித்துக் கொண்டிருக்கும்போது கூட தனது குலாத்தி சமூகத்தையோ அல்லது ஜல்ஷா நடனக்குழுவையோ விட்டு விலகிப்போக வில்லை. மீண்டும் நடனக் குழுவுக்கு போகிறான். அங்கு ஜல்ஷா நடனக்குழு செல்வாக்கிழந்து காணப்பட்டது. பார்வையாளர் குறைவு. குறைந்த பணமே அவர்களுக்கு வழங்கப்படுவதால் பலர் பிடிப்பன்றி விலகிச் செல்கிறார்கள். மருத்துவ கல்லூரியின் வைத்தியராக படித்துக் கொண்டிருந்த போது அவன் குலாத்திச் சமூகத்தை சேர்ந்தவன் என்பதால் மாணவர்கள் அதிகம் தொல்லை கொடுத்தார்கள். அந்த நேரத்தில் அவன் ஜல்ஷா குழுவுடனும் இருந்துகொண்டே கல்லூரி படிப்பையும் மேற்கொண்டிருக்கிற சந்தர்ப்பத்தில் சிறுவயதிலிருந்தே அவனிடம் அன்பு காட்டிய அவனது கல்விக்கு உதவியாய் இருந்த ஜீஜீக்கு கடும் சுகயீனம் என அறிந்து அவளை பார்க்கச் செல்கிறான். அவளது வாழ்க்கை மிக மோசமாயிருந்தது. வயல் காட்டிலுள்ள மாட்டுப் பட்டியில் துர்நாற்றங்களுக்கிடையில் வீசப் பட்ட துணியைப் போன்று அவன் கிடக்கிறான். அவளை மருத்துவமனையில் சேர்த்து வைத்தியம் பார்க்க நினைக்கிறான். ஆனால் கோண்டிபா அதை விரும்பவில்லை.

மருத்துவ கல்லூரியில் அவனது படிப்பை முடிப்பதற்கு பெருந்தொகை செலவுகள் போவதால் அதனை சமாளிப்பதற்காக இரவு முழுவதும் தூக்கம் விழித்து ஒரு வைத்தியரின் கிளினிக்கில் வேலை செய்கிறான். அதில் கிடைக்கும் பணத்தைக்கொண்டு கல்வியை தொடர்ந்தாலும் இரவு தூக்கம் விழித்து பகலில் அவனால் படிக்கமுடியவில்லை என்பதால் அதைவிடுத்து பம்பாயிலிருந்து கல்லூரி மாணவர்களுக்கு ஆடைகள் கொண்டு வந்து விற்கிறான். இவ்வாறு தனது வைத்தியராகும் கனவை அடைவதற்காக கடுமையாக உழைக்கிறான் அவனை எல்லா வகையிலும் புறக்கணித்துவந்த நானா, முன்பு கிசோருக்கு அவனது பெயரைத்தர மறுத்திருந்தான் அவன் வைத்தியராக போகிறான் என்று தெரிந்ததும் தனது பெயரை கிசோரது பெயருடன் இணைத்துக் கொள்ள விரும்புகிறான். கிசோர் அதை மறுத்தே விடுகிறான். மருத்துவ கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போது அவனுக்கு கிடைக்கும் உதவித்தொகை பெரும் உதவியாய் இருந்தது. இடையில் உதவித் தொகையில் மோசடி இடம்பெறுகிறது. அவனது இன்னொரு நண்பன் பிரசாத் உதவிபுரிகிறான் படிப்புச் செலவு, வீட்டுச்செலவு தீபக் எல்லோரையும் கவனிக்கிறான். இன்னொரு முறை நெர்லா போய் ஜீஜீயை மருத்துவமனைக்கு கொண்டு வர முயற்சிக்கிறான். கோண்டிபா ஆயிரம் ருபா கொடுத்துவிட்டு ஜீஜீயை அழைத்துச்செல் என்கிறான். பணம் கொடுத்து அவளை மருத்துவ மனைக்கு கொண்டு சென்று ஒப்பரேசன் செய்து காப்பாற்ற முயற்சிகள் செய்கிறான். மருத்துவ மனையிலிருந்து அவள் தனது கிராமத்துக்கே போக வேண்டுமென மறுத்துவிடுகிறாள். இதேவேளை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மருத்துவ கல்லூரி இறுதித் தேர்வை எழுதி முடிக்கின்றான். அப்போதைய பணச்செலவுகளைத் தருவதற்காக நாணா மருந்து விடுவதால் பல நாள் கோபத்தை வெளிப்படுத்துகிறான். இறுதியில் பூச்சி மருந்தை குடித்து தற்கொலைக்கு முயற்சிக்கிறான் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டு உயிர் பிழைத்து விடுகிறான். மருத்துவ கல்வி பரீட்சை பெறுகள் வெளியாகிறது. பரீட்சையில் சித்தியடைகிறான். ஆனால் நேர்காணலில் பெயர் இல்லாமல் மோசடி செய்யப்படுகிறது. பல போராட்டங்களோடு வெற்றி பெறுகிறான்.

முடிவுரை

குலாத்திச் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இத்தன்வரலாற்று நாவலானது ஏனைய நாவல்களில் இருந்து வேறுபட்டது. புனைவுக்கு இடம் குறைவாகவும் உண்மைக்கு இடம் அதிகமாகவும் தன்வரலாற்று நாவல்களில் காணப்படுவது இயல்பு இந்நாவலும் அதுபோலவே அமைந்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது. 'குலாத்தி' நாவல் இருவகை வாசிப்பனுவங்களைத் தருகிறது. ஒன்று குலாத்தி பெண்களின் வாழ்க்கை நிலை மிக மோசமான பிரதிபலிப்புக்களை கொண்டிருப்பதோடு பல்வேறு ஆணாதிக்க ஒடுக்கு முறைகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளமை.

இரண்டாவது இவ்வாறான மிகவும் பின்தங்கிய ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து முன்னுதாரணமாக மேலெழும் பாத்திரமாக கிசோர் சாந்தாபாய் காலே என்ற மனிதன் பல்வேறு போராட்டங்களுக்கு தன்னை அர்ப்பணித்து வைத்தியராகி சுமார் முப்பது கிலோ மீட்டர் சுற்றளவுக்கு மருத்துவமனையோ மருத்துவரோ இல்லாத ஒரு பகுதியில் மருத்துவ சேவை செய்தார். பழங்குடி கிராமங்களில் மருத்துவ சேவை செய்கிறார். முதலாவது வைத்தியர் இவர்தான் சாலை வசதியோ தண்ணீர் வசதியோ இல்லாத இடத்தில் அவ்வசதிகள் செய்தார் மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் மருத்துவம் செய்தார் இவர் எழுதிய இந்நாவலுக்கு பின்னர் குலாத்தி சமூகப் பெண்கள் தங்களது தொழிலை கைவிட்டு குழந்தைகளை படிக்க வைக்கத் தொடங்கினர். ஆகவே இன்று கல்வியில் பின்தங்கியுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு இந்நாவல் சிறந்த படிப்பினையை தரும்.

மிருக இனத்திடமிருந்து. மனித இனத்தை வேறுபடுத்தி அடையாளம் காட்டினார் கடவுள். ஆனால் மனிதர் தனக்குள் இன்னமும் மிருகத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றனர்.

"வாங்கோ, ஏன் கேற்றுக்கை நிக்கிறியள். அட நிர்மலா ரீச்சர். வாங்கோ ரீச்சர், என்ன கேற்றிலை எழுதிக் கிடக்கிறதை வாசிக்கிறியளே?"

"ஐந்தறிவு மனிதன்" நான் தான் ரீச்சர் எழுதினனான்.

"நேற்று கேற்றுக்கை பாண் ஆட்டோவை பாத்துக் கொண்டு நிண்டனான். எங்கடை 'யூட்' அண்ணாவும் என்னோடை நிண்டவன். கையிலை கிடந்த சோக்குக் கட்டியாலை மனதிலை பட்டதை எழுதி விட்டுட்டன்."

உள்ளுக்கை வாங்கோவன். உதிலை இருக்கோ ரீச்சர்.

அதென்னெண்டா ரீச்சர் எங்கடை "யூட்" அண்ணை நேற்று பின்னேரத்திலையிலிருந்து சாப்பிடேல்லை. ஏன் எண்டால் அவருக்கும் எங்கடை அம்மாவுக்கும் பெரும் பிரகண்டம்.

அம்மாவின்ரை செல்லப்பிள்ளை தானே யூட்டண்ணா.

டே! எண்டு கூட கூப்பிடமாட்டா. வா மோனை. போ மோனை எண்டு தான் கதை காரியம் எல்லாம் எண்டாப் பாருங்கோவன்.

ஆனால் நேற்று பின்னேரம் அம்மாட்டை நல்ல பூசை வேண்டிப் போட்டார். நல்ல அடி.

அதுதான் மூஞ்சை மாடு சூப்பின பனங்கொட்டை போல சூம்பிப்போச்சு ஆளுக்கு. பங்கை சுருண்டு படுத்திட்டார்.

ரீச்சர் நான் யூட்டண்ணா எண்டு சொல்லுறது எங்கடை அண்ணா எண்டை நினைக்கிறியள். இல்லை, இல்லை, அது... அது கிட்ட வந்து சொல்லுறன் பொறுங்கோவன்.

அது நாங்கள் வளர்க்கிற நாய். சிரிக்காதேங்கோ ரீச்சர். அம்மாவுக்கு அதை நாய் எண்டு சொன்னால் அவ்வளவு தான் இண்டைக்கு இஞ்சை சூரன் போர் தான் நடக்கும்.

கோவம் வந்தால் எங்களை அப்பிடிக் கூப்பிடுவா. அவனை ஒருநாளும் அப்படிக் கூப்பிடவே மாட்டா.

உன்னாணை ரீச்சர் நீங்கள் மட்டுமில்லை எல்லோரும் உப்பிடித்தான்

# அம்மாவின் மகன்

ஆர்.எஸ்.ஆனந்தன்



நினைக்கிறவை.

ஏன் டீச்சர் சிலவேளை எங்கடை அண்ணா தன்ரை அறையுக்கே இருக்கேக்கை அம்மா யூட்டண்ணாவைப் பேசினால் தன்னைத்தான் அம்மா பேசிறாத எண்டு நினைச்சு "ஏனெனை அம்மா என்னை பேசுறாய்" எண்டு கேட்பான்.

"உன்னை இல்லையடா அது யூட்டனை" எண்டு சொல்லுவா. கேட்க வேணுமே நான் சத்தமாய் சிரித்துப்போடுவன்.

உதைவிட பெரிய சிரிப்பு ரீச்சர். உங்களுக்குத் தான் சொல்ல வேணும். உப்படித்தான் ஒருநாள் எங்கடை யூட்டண்ணாவை அம்மா பேசிப்போட்டா என்னத்துக்கெண்டு கேக்கேல்லை முத்தத்திலை கிடங்கு கிண்டிப்போட்டான். அம்மாவுக்கு கால் சுகமில்லைத் தானே, இராஇருட்டி தடக்கி விழுந்து போடுவன் ஏனெடா கிடங்கு கிண்டுறாய் எண்டு பேசிப்போட்டா.

பாருங்கோ ரீச்சர் அவற்றை அறிவை அம்மா பேசிப்போட்ட எண்டு இரவு சாப்பிடேல்லை.

பின்னை ரீச்சர் பங்கை பாருங்கோ கேற்றுக்கை நிக்கிற அந்த வேப்பம் மரத்தடியிலை கிடக்கிற கதிரையில தான் யூட்டண்ணா படுக்கிறவன்.

அம்மா சாப்பாட்டைக் கொண்டுபோய் வைச்சுக் கொண்டு "டெ யூட்டா சாப்பிடெனடா. என்ரை மோனை எல்லே சாப்பிடய்யா. இராத்திரியும் ஒரு நவக்கொடியுயில்லை, உடம்பு என்னத்துக்கெடா ஆகும். கொஞ்ச மெண்டாலும் சாப்பிடய்யா. ஆரோ முழி கரைவாளவை என்ரை பிள்ளையை கண்ணுக்கை போட்டுக்கொண்டு போட்டாளவை"

"படு பொழுதுக்கைதான் உனக்கு நாவூத்துக்குத் துடைக்க வேணும். இந்தாய்யா கருவாட்டுப் பொரிய லோடை சாப்பிடய்யா"

அம்மாவின்ரை உந்த சம்பாசனையை எங்கடை அண்ணாவின்ரை சினேகிதப்பொடியன் தெருவாலை கேட்டுக்கொண்டு போயிருக்கிறான்.

அவன் அண்ணாவை கண்ட இடத்திலை கேட்டிருக்கிறான் "உங்களுக்கு வேம்புக்குக் கீழையே வைச்சு அம்மா சாப்பாடு தாற வா" எண்டு

உந்தக் கூத்தை ஆருக்கு ரீச்சர் சொல்ல பிறகு பின்னேரம் யூட்டண்ணாவுக்கு அம்மா நாவூத்துக்குத் துடைச்சவா.

சும்மா சொல்லக்கூடாது ரீச்சர் யூட்டண்ணா விலை அயல் அண்டை வளவுக்காறர் எல்லாம் நல்ல பாசம்.

எல்லோரும் "யூட்டண்ணா" எண்டு தான் கூப்பிடுவினம்.

சின்னக்குழந்தையள் எண்டால்போதும் விளையாட்டுக்காட்டுவார்.

அதாலை இஞ்சை வாற பிள்ளையள் எல்லாம் யூட்டண்ணாவின்ரை பாட்ணர்.

கதையோடை கதை பிறகு மறந்து போடுவன், யூட்டண்ணா வலு சுத்தம். அதுவும் அம்மாவின்ரை பழக்கம் தான் ஆர் குளிச்சாலும் வந்து நிப்பான் நாலு வாளி வாத்து விட்டால் போதும் வந்திடுவான்.

இந்த முசுப்பாத்தியையும் உங்களுக்கு சொல்ல வேணும் ரீச்சர் பொறுங்கோவன் சொல்லுறன்.

அண்டைக்கொரு நாள் அம்மா சந்தைக்கு போகேக்கை யூட்டண்ணாவும் கூடப்போயிருக்கிறான்.

பொறுங்கோ கதையுக்கை கதை இதையும் ஒருக்கா கேளுங்கோவன்.

அம்மாவோடை யூட்டண்ணா தெருவாலை போகேக்கை அவனின்ரை ஆக்கள் ஆரம் சேட்டை விட்டால் சத்தம் போடாமல் நல்ல பிள்ளை மாதிரிப் போவான். அம்மாவை வீட்டிலை கொண்டு வந்து விட்ட பிறகு ஒரு றவுண்டு வெளியிலை போய்த்தான் ஆர் எண்டு காட்டிப்போட்டுத்தான் வருவான்.

பின்னை அம்மாவோடை இவர் போன கதையை எல்லே இடையிலை விட்டிட்டன்.

யூட்டண்ணா அம்மாவோடை போக உங்கை கும்பி அம்மாள் கோவில் புளிக்குக் கீழை யூட்டண்ணன்ரை ஆக்களுக்கு ஊசி போட்டுக்கொண்டு நிற்கினம்.

அம்மாவுக்கு இது சங்கதி முன்னாலை தெரிய வில்லை.

பின்னை வந்த நான் இவனுக்கும் ஊசி போடுவம் எண்டு ஊசி போடுறவருக்குக் கிட்டை போக யூட்டரும் வாலை ஆட்டிக்கொண்டு நிண்டிருக்கிறார்.

எல்லோரும் தங்கடை நாயளை சங்கிலியிலை கட்டி வைச்சிருக்கினம். நெல்லண்டை அம்மாள் கோவில் வேள்விக்காவடிச் செடில் போல எல்லா நாயளும் சும்மா என்னை விடு உன்னை விடு எண்டு இழுவையிலை நிக்க எங்கடை அண்ணர் மட்டும் சும்மா நிக்க ஊசி போடுறவர் கெடிக்கலங்கிப்போனார்.

நீங்கள் கண்டனீங்கள் தானே அண்ணரும் வாட்டசாட்டமா ஆம்பிளை தானே. ஆம்பிளைக்கு ஆம்பிளைக்கு ஆசைப்படவேணும்.

ம்... ரீச்சருக்கு சிரிப்புத்தான். பின்னை ரீச்சர் அம்மா சொன்ன "பயப்படாதேங்கோய்யா நான் பிடிக்கிறன் நீங்கள் போடுங்கோ ஊசியை" எண்டு சொல்லியிருக்கிறா.

என்னம்மா சொல்லுறியள் பங்கை பாருங் கோவன் அந்த நாயள் எல்லாம் சங்கிலியை அறுக்கிறன், பாயுறன் பந்தயம் பிடி எண்டு நிக்குதுவள்.

"நீங்கள் என்னெடாஎண்டால் உங்கடை நாயைப் பிடிக்குறன் குத்துங்கோ எண்ணுறியள்"

அதோடை அம்மாவுக்கு சன்னதம் வந்திட்டுது. யூட்டனை நாய் எண்டிட்டினம். அவன் அம்மாவின்ரை மகன் எல்லே.

"ஐயா! அதுவளைப்போல என்ரை பிள்ளை இல்லை. போடுங்கோ ஊசியை" எண்டு சொல்லிக் கொண்டு குந்தியிருந்தபடி யூட்டண்ணாவின்ரை தலையை அணைத்துப்பிடித்திருக்க ஊசி போடுறவரும். கெடிக்கலக்கத்திலை ஒரு மாதிரிக் குத்திப்போட்டார்.

அம்மா கையை விட யூட்டண்ணா என்ன செய்தான் தெரியுமே வாலை ஆட்டிக்கொண்டு ஊசி போட்டவற்றை காலை நக்கினானாம்.

"நீங்கள் சொன்னது சரிதானம்மா."

> "மிருக சாதியை குளிக்கவாத்து
> நல்ல உணவளித்து. மருந்து
> குடுத்து அதுவளின்ரை உணர்வுகளை
> புரிந்து கொண்டு பிள்ளை போல வளர்த்தால்
> அதுவளும் பிள்ளைதான்"

எண்டு சொன்னவர் யூட்டனை தடவி விட்டா ராம். கண் கலங்கிப்போச்சாம் அவருக்கு அதுக்கிடை யிலே இதை எல்லே சொல்ல மறந்து போனன். உன்னானை ரீச்சர் இதையும் கேளுங்கோவன்.

உங்களுக்கு சங்கதி தெரியாதெல்லை. அதொரு சோகக்கதை யூட்டண்ணாவுக்கு இரண்டு பிள்ளை யளும் எல்லே இருக்கு.

இரண்டு பேரும் நல்ல ஆம்பிளைச்சிங்கங்கள்.

ஒண்டு சரசக்கா வீட்டை மற்றது உங்காலை அமுதா அக்காவீட்டிலை நிக்கினம்.

யூட்டண்ணா போட்டு வருவார். பிள்ளை யளிலை நல்ல பாசம்.

அயல் அண்டை வீட்டுக்காரர் எல்லாம் யூட் டண்ணாவோடை நல்ல மாதிரி எண்டு சொன்னா னெல்லை அவரும் எல்லாம் இடமும் ஒரு றவுண்டு போட்டு வருவார். ஆனால் ஒரு இடமும் வாய் நனைக்க மாட்டான் பாருங்கோ.

அம்மா அவருக்கெண்டு வைக்கிற சில்வர் தட்டுக்கைதான் சாப்பிடுவான். என்ன திரவியமாய் இருந்தாலும் மற்ற கோப்பையளுக்கை வாய் வைக்க மாட்டான். அம்மாவோடை அடிபட்டாலும் குத்துப் பட்டாலும் அவவின்ரை கையால தான் சாப்பிடுவான்.

இஞ்சை பாருங்கோ ரீச்சர் நான் ஒரு விசரி. மறந்தெல்லே போனன். இந்த விண்ணாரத்தை சொல்ல. நல்ல பொழிப்புரீச்சர்.

யூட்டண்ணா காதல் கலியாணம் தான். லவ் பண்ணித்தான் முடிச்சவன். அதையும் சொல்லுறன்.

உப்பிடித்தான் ஒரு நாள் யூட்டண்ணாவுக்குப் பின்னாலை ஒரு வெள்ளை வெளீர் எண்ட ஒருத்தி மண்டி மண்டி வாறா.

நல்ல வடிவு ரீச்சர். குஞ்சம் போல வால், பிறவுண் கண், பசன் சோவுக்கு வாற பொம்பிளையள் போலை.

ரீச்சருக்கு சிரிப்புத்தான். சிரியாதையுங்கோ, நான் சொல்லுறதைக் கேளுங்கோவன். நல்ல வாட்ட சாட்டம் யூட்டண்ணருக்குப் பொருத்தம் தான்.

நேரை அம்மாவிட்டை கூட்டிக்கொண்டு போட்டான். அதுதான் அவற்ரை சரணாலயம். உந்த ஒட்டிலை இருந்து அம்மா புளியம்பழம் உடைச்சுக் கொண்டிருந்தவா. வெள்ளை நாயும் அவருக்கு பின்னாலை.

எனக்கு நேற்றெண்ட மாதிரி கண்ணுக்கை நிக்குது அந்த சீன்.

யூட்டர் அம்மாவின்ரை காலை நக்கிறான். அம்மாவும் இவன்ரை பம்பல் பாக்க, கவனியாத மாதிரி இருக்க, சத்தியமா ரீச்சர் நம்பினால் நம்புங்கோ அம்மாவின்ரை காலிலை தலையை வைச்சுக்கொண்டு படுத்திட்டான்.

அப்பா தடி எடுத்து வெள்ளை நாயை திரத்த ஆயத்தம். "விடுங்கோ அவையளும் மனிசர் மாதிரித் தானை எனை. அதுவளின்ரை உணர்வுகளுக்கும் மதிப்புக்குடுக்கத்தானை வேணும் அவள் வெள்ளைச்சி யும் நிக்கட்டும்.

அம்மா அதுக்கு வெள்ளைச்சி எண்டு பேரும் வைச்சிட்டா.

நான் உங்களுக்கு சொன்னன். யூட்டனுக்கு தன்ரை இனம், சனத்தை பிடிக்காததெண்டு ஆனால் வெள்ளைச்சியோடை நல்ல அன்னியோன்னியம்.

ஆனால் சாப்பாடு மட்டும், தான் சாப்பிட்ட பிறகுதான் சாப்பிடவிடும். அவளும் பாவம் அடிபடுற தில்லை விட்டுக்குடுப்பாள்.

பின்னை இதையும் கேளுங்கோவன்.

வெள்ளைச்சிக்கு இரண்டு பிள்ளை பிறந்தது. அதுதான் நான் முதல் சொன்னன் அவங்கள் தான்.

பங்கை தெரியுது பாருங்கோவன். அந்த பூவர சோடை சாத்திக்கிடக்கு பனை மட்டையள் அதக்கிடை யிலை தான் வெள்ளைச்சியையும் குட்டியையும் அம்மா விட்டு காவோலையாலை வடிவா வெய்யில் பிடியாமல் தவறாமல் அவைக்கு படியளக்கிறது. யூட்டரும் மனிசி பிள்ளையளையும் அடிக்கடி போய்ப்பார்ப்பார்.

இந்தக் கூத்தையும் கேளுங்கோவன். உப்பிடித் தான் ஒருநாள் அப்பா கடைவேலை முடிஞ்சுவர. வந்த தும் வராததுமாய் அம்மா சொன்னா "எனே! எங்கடை யூட்டன்ரை பொடியளை நீங்கள் ஒருக்கால் பாக் கேல்லை. என்னைப்பார் உன்னைப்பார் எண்டு நல்ல வடிவெனை. தேப்பனைப்போலை நல்ல குண்டு ஒருக் கால் பாருங்கோனை" என்டா.

பின்னை அப்பாவும் பாப்பம் எண்டு போக யூட்டண்ணாவும் பின்னாலை போனான்.

அப்பா கவோலையை மெல்ல திறக்க வெள்ளைச்சி குலைச்சுக்கொண்டு அப்பாவுக்கு முன்னாலை பாஞ்சு வந்திட்டுது.

என்ன புதினம் ரீச்சர் நம்ப மாட்டியள். சத்தியமா இவன் யூட்டண்ணா என்னெண்டு அப்பாவுக்கு முன்னாலை பாஞ்சு வந்தான் எண்டு தெரியாது சினிமா கிறோ போலை.

வெள்ளைச்சியை ஒரு பார்வை பாத்தான் வெள்ளைச்சி திரும்பவும் மட்டையுக்கை மண்டி யிட்டுது. அதின்ரை காது வால் எல்லாம் விறைச்ச மாதிரி. அவனை நான் ஒருக்காலும் அப்படி பாக் கேல்லை. நரசிங்க அவதாரம்.

யூட்டண்ணாவும் அப்பாவோடை வந்திட் டான். பிறகென்னண்டா ரீச்சர். அப்பா நீங்கள் இருக்கிற கதிரையிலை தான் இருந்து தேத்தண்ணி குடிக்க, இவன் அப்பாவின்ரை காலை நக்கிப் போட்டு போனான்.

கண்மூடி முழிக்க முன்னம் வெள்ளைச்சியும் யூட்டனும் அடிபட்டுக்கேக்குது. மட்டையுக்கை கிடந்த வளை, பிள்ளைப்பெத்தவள் எண்டும் பாராமல் வெளி யிலை இழுத்து வந்து தன்ரை குணத்தை காட்டுது.

பிறகு நான் தான் சமாதானப்படுத்தி விட்ட னான். அவன் எங்களுக்காக தன்ரை மனிசியோடை அடிபட்டவன். அதுதான் கடசி, எனக்கு சொல்லே லாமல் கிடக்கு ரீச்சர் கண் கலங்குது என்னெண்டா ரீச்சர் ரண்டு மாதத்தாலை அந்த புண்ணியவதி வெள்ளைச்சி யும் போய்ச் சேந்திட்டாள்.

இண்டை வரையிலை யூட்டன் தன்ரை இன சனத்தோடை சேருறதில்லை திரும்பிக்கூட பாக்கிற தில்லை.

உன்னானை ரீச்சர் உங்களுக்கும் நேரம் போகுது இதொண்டையும் கேளுங்கோ உங்களுக்குத் தான் சொல்ல வேணும்.

அம்மா ஒரு ஆடு வளத்தவா. அது குட்டிப் போட்டு ஐஞ்சாறு நாளிலை தாய் செத்துப்போச்சுது. அம்மா அதுக்கு ராசாத்தி எண்டு பேர் வைச்சு தன்ரை மடியிலை கிடத்தி பால் போச்சியுக்கை கஞ்சித்தெளிவு விட்டுப்பருக்கி வளர்த்தவா.

இண்டை வரைக்கும் யூட்டண்ணாதான் அதுக் குக் காவல். இப்ப இரவிலை அதோடை தான் படுக்கும்.

ஓம் ரீச்சர் உந்த முசுப்பாத்தியை நான் சொல்லிக் கொண்டிருக்க உங்களுக்கு நேரம் போகுது.

இதையும் சொல்லிபோட்டு விடுறன். அதென்னெண்டால் ரீச்சர், முந்த நாள் யூட்டர் காத்து வாங்க ரோட்டுக்கரையிலை , அதுதான் எங்கடை கேற்றுக்கை படுத்திருந்தவன்.

ஆரோ சயிக்கிலிலை போன பொடியள் காலாலை அடிச்சுப்போட்டாங்கள்.

பாவம் மட்டை வேலியோடை வந்து விழுந்த யூட்டண்ணாவுக்க நல்ல நோ.

அம்மா பேசிப்போட்டு "நீ வெளியிலை படாதை மோனை உந்த கிளைக்காலியள் அடிப் பாங்கள்" எண்டு சொல்லி விட்டவா.

நேற்றெண்டால் நேற்றப்பிடி மேசன் வேலை யாலை போன ஆரோபொடியள் மட்டக்கம்பாலை யூட்டனுக்கு அடிச்சுப்போட்டாங்கள்.

அது குளறிக்கொண்டு நொண்டி நொண்டி வர அதைவிட அம்மா அழுது போட்டா. "வம்பிலை பிறந்த நரகாலியள் என்ரை பிள்ளைக்கு அடிச்சுப் போட்டுப் போறாங்கள். துலை வாங்கள்," எண்டு திட்டித் திட்டி தன்ரை காலுக்குப்போடுற எண்ணையை போட்டு உருவி விட்டவா.

அது முடிஞ்சு தெல்லை ரீச்சர். அம்மாவானை எனக்கு ஆத்திர மாத்திரமாய்க்கிடக்கு.

> மனித உருவத்திலை ஊசாடுற மிருகங்கள்,
> அந்த மிருக உருவத்திலை இருந்த மனிதத்தை
> சாகடித்துப் போட்டுதுவள்.

யூட்டண்ணா இப்ப அவங்களைப்போல மாறியிட்டான். தாங்க மாட்டாங்கள்.

நேற்று மட்டக்கம்போடை வேலையாலை போன தாரையோ திரத்திக்கொண்டு போக அவங்கள் மூத்தக்காவின்ரை மதிலோடை உரஞ்சுப்பட்டு நல்ல காயம்.

இண்டைக்கு யூட்டண்ணாவைக் கண்டால் சயிக்கிள் காறர் இறங்கி பயந்து பயந்து உருட்டிக் கொண்டு போகினம். நடந்து போறவை ஒதுங்கிப் போகினம். ஆனால் யூட்டண்ணா ஒருவருக்கும் கடிக் கேல்லை வெருட்டுறான். இன்னமும் அவனிட்ட கருணை இருக்கு.

பிறகும் ஆரையோ திரத்திக் கொண்டு போக அம்மா கூப்பிட்டு கட்டிப்போட்டுட்டா. நான் சொன்னன் ரண்டடியும் வாங்கிப்போட்டார் பாவம்.

> உன்னானை சொல்லுங்கோ ரீச்சர். மனிசரை விட அதுகள் எந்த விதத்திலை குறைவு. எந்த விலங்கினம் சின்னஞ்சிறிசுகளை பாலியல் துஸ்பிரயோகம் செய்யுது வள். கேவலம் பருவமடையாத சின்னஞ்சிறிசுகளைக் கூட மனிதர்... அதுவள் மேல் நன்றி மறவாததுவள்.

கடவுளே நேரம் போட்டுது. நீங்கள் நாளைக்கு வாங்கோ ரீச்சர் நான் உங்கடை உடுப்புகளை தைச்சு வைக்கிறன்.

ஓம் ஓம். அப்ப வாங்கோ ரீச்சர்.

# மாறி வந்த காட்சி

■ பாலமுனை பாறூக்



மாரி வரும், மழை பொழியும்!
நீர் நிலைகள் எல்லாமே
நிரம்பி வழிந்திருக்கும்!
ஊரின் துரவுகளில்
ஓயாது
ஒலியெழும்பும்!
உறங்காது, உண்ணாது
தேரைகளும் தவளைகளும்
சேர்ந் திருந்து ஓலமிடும்!

மாரி வரும் போதெல்லாம்
நாம் கேட்கும்
ஓலமிது!

இப்போது–

மாறி வருவ தென்ன?
மாரி வர முன்னாலே!

தேரைகளும் தவளைகளும்
சேர்ந்திருந்து கூட்டு வைத்து
ஊரில் "சிலது"களை
உறவாக்கிக் கொண்டாடி,
பிரித்தும் "சிலது" களை
பிய்த்தெறிந்து வசைபாடி...
ஓலமிடக் காரணமேன்...?

மாரிவரப் போகிறதோ?
மழை தானோ?
மாறிவந்த காட்சி இதோ...?

மழை,மழையாம்
மழை வருமாம்
"தேர்தல்"மழை!

ஈழத்து இலக்கிய உலகில் எழுத்தாளராக, பதிப்பாளராக,ஊடக முகாமையாளராக நன்கறியப்பட்ட உன்னத ஆளுமை புலோலியூர் ஆ. இரத்தினவேலோன். சிறந்த பல சிறுகதைகளை ஈழத்து இலக்கியத்துக்கு தந்துள்ளதோடு, மீரா பதிப்பகத்தின் ஊடாக இவர் இதுவரை யில் 104 நூல்களை பதிப்பித்து வெளியிட்டு எழுத்தாளர்களை ஊக்குவித்ததோடு, ஈழத்து எழுத்தாளர்களது படைப்புகளை தனது பத்தி எழுத்துக்களின் ஊடாக வெளியுலகிற்கு கொண்டு வரும் அரும் பணியையும் ஆற்றி வருகின்றார். பழகுவதற்கு இனிமையானவராகவும் இலக்கிய உலகில் நேர்மைத் தன்மை வாய்ந்தவராகவும் இலக்கியவாதிகளுடன் நல்ல உறவைப் பேணுவதிலும் இவரின் பண்புகள் உயர்ந்து நிற்கின்றன.



# புலோலியூர் தந்த அருங்கொடை புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

க.பரணீதரன்

ஈழத்து இலக்கிய வரலாற்றின் புகழ்பூத்த பல எழுத்தாளர்கள் புலோலியூரில் பிறந்தவர்கள். தற்போது வாழ்ந்து கொண்டிருப்பவர்களுள் புலோலியூர் எழுத்தாளர் என்றால் உடனடியாக நம்நினைவுப் பொறியில் தட்டுப்படுபவர் புலோலியூர் ஆ.இரத்தினவேலோன். ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவர் பதித்து வருகின்ற இலக்கிய தடம் பாராட்டிற்கும் தனித்துவத்திற்கும் போற்றுதலுக்குமுரியது.

25.12.1958 இல் புலோலியில் பிறந்த இரத்தினவேலோன் அவர்கள் சிறுவயது முதலே வாசிப்பிலும் இலக்கியத்திலும் தீவிர ஈடுபாடு உடையவராக விளங்கினார். அவரது ஊர் அவருக்குள் இயல்பாகவே இலக்கிய தாகத்தை உண்டு பண்ணி ஈழத்தில் சிறந்த படைப்பாளுமையாக அவரை எமக்கு தந்துள்ளது. "புரளும் அத்தியாயம்" என்னும் சிறுகதையை தனது 19 ஆவது வயதில் தினகரன் பத்திரிகையில் 1977 ஆம் ஆண்டு எழுதி இலக்கிய உலகில் பிரவேசித்தார். இலக்கிய உலகில் எழுத்தாளராக, பதிப்பாளராக, பத்திரிகை ஆசிரியராக, தேர்ந்த விமர்சகராக விளங்கியவர் என்பதற்கு மப்பால் மூத்த, இளம் படைப் பாளர்கள் அனைவருடனும் சம மரியாதையுடன், மமதையற்ற இயல்பான மனிதநேயம் மிக்க மனிதராக பழகி வருபவர். மூத்தோர் படைப்பு முதல் இளையோர் படைப்புகள் வரை தன் வாசிப்பிற்கு உட்படுத்தி அவற்றை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தி வருகின்றார். முரண்பாடுகள் அற்ற நேர்மையான மனிதர் என்பதே இரத்தினவேலோனின் தரமான படைப்புகளுக்கு காரணம். வீரகேசரி பத்திரிகையில் பத்து ஆண்டுகளுக்கு மேல் விளம்பரப் பகுதியில் பணியாற்றிய இவர், கே.ஜீ. இண்டஸ்ரீஸ் கணக்கியல் பகுதியில் ஐந்தாண்டுகள் பணியாற்றி, தினக்குரல் பத்திரிகையில் ஊடக முகாமையாளராகவும், உதவி விளம்பர முகாமை யாளராகவும் பணி புரிந்து ஓய்வு பெற்றுள்ளார்..

**சிறுகதையாளராக..**

இதுவரை 44 சிறுகதைகளை எழுதியுள்ள இரத்தினவேலோன் அவற்றில் 41 கதைகளை ஐந்து தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். அத்துடன் ஐம்பதிற்கு மேற்பட்ட கவிதைகளையும் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பிற இலக்கியவாதிகளுடன் இணைந்தும் சிறுகதைகளை எழுதியுள்ளார். அந்த வகையில் கோகிலா மகேந்திரன் அவர்களுடன் இணைந்தே இவரது முதற் சிறுகதைத் தொகுதி "அறிமுக விழா" 1984 இல் வெளியானது. இதில் இவரது மூன்று கதைகளும் கோகிலா மகேந்திரனின் மூன்று கதைகளும் இருவரும் இணைந்து எழுதிய "அந்தரங்கம் நினைவுகளில்" கதையும் இணைக்கப் பெற்று வெளியானது. தொடர்ந்து புதிய பயணம்,(1996, 2011 2ம் பதிப்பு), விடியட்டும் பார்ப்போம்(1997), நிலாக் காலம்(2002), நெஞ்சாங்கூட்டு நினைவுகள்(2006), காவியமாய்... நெஞ்சில் ஓவியமாய்(2011) ஆகிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவரது பல கதைகள் மீள் பிரசுரம் கண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவரது சிறுகதைகள் மல்லிகை, வீரகேசரி, தினகரன், சுடர், ஈழநாடு, தாரகை, தினக்குரல், ஞானம், ஜீவநதி, மேகம் போன்ற பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளியாகி வருகின்றன. இரத்திவேலோனின் சிறுகதைகள் அனைத்துமே மனிதாய உணர்வோடு எழுதப் பட்டவை; சமூகப்பிரச்சினைகளை முன்னிறுத்துபவை. இவரது சிறுகதைகளின் நடை, மொழி, வீச்சு தனித்துவமானதும் வாசகர் மனதை கட்டிப்போடும் தன்மை வாய்ந்ததுமாகும். நிலாக்காலம், நெஞ்சாங் கூட்டு நினைவுகள் தொகுதிகள் வடமாகாண சாகித்திய விருதைப் பெற்றவை. இவற்றை விட இவரது சிறுகதைகள் கனகசெந்தி கதாவிருது, தகவம் விருது போன்றவற்றையும் சில போட்டிகளில் பரிசுகளையும் வென்ற கதைகள். எடுத்த எடுப்பில் இவர் சிறுகதை களை

எழுத மாட்டார்; வாசகர் உள்ளங்களை ஈர்க்க வல்ல வகையிலேயே தனது கதைகளை படைப்பார்.

#### பதிப்பாளராக...

ஈழத்து இலக்கிய சூழலில் பதிப்பாளர்களது நிலைமையை நாம் நன்கறிவோம் இருப்பினும் அழகிய வடிவமைப்புடனும் நேர்த்தியான கட்டமைப்புடனும், எழுத்துப் பிழைகளற்ற தட்டச்சு ஆகியவற்றால் சிறந்து விளங்கிய மீரா பதிப்பகத்தின் ஊடாக ஈழத்து படைப்பாளர்களது 104 நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளார். இவற்றில் சிறுகதைகள், குறுநாவல்கள், கவிதை, நாடகம், பத்தி எழுத்துக்கள், அறிவியல், நலவியல், அழகில், சினிமா என பல்துறை சாரந்த நூல்களும் அடங்கும். எம்.கே.முருகானந்தன், கே.எஸ்.சிவகுமாரன் போன்ற புலமையாளர்களின் பல நூல்கள் மீரா பதிப்பக வெளியீடாக வெளி வந்தமையும் குறிப்பிடத் தக்கது.

#### பத்தி எழுத்தாளராக...

சிறுகதைத்துறையில் தன் காலை ஆழப்பதித்த புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் விமர்சனத்துறையிலும் குறிப்பிடத்தக்கவராக காணப்படுகின்றார். இந்த வகையில் தனக்கு கிடைத்த புத்தகங்களில் தன் மனதை ஈர்த்த முக்கியமான படைப்புகளைப் பற்றிய தன் விமர்சனங்களை பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தொடர்ந்து பதிவு செய்து வருகின்றார். ஞாயிறு தினக்குரலில் "அண்மைக்கால அறுவடைகள்" எனும் மகுடத்தில் தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்கு மேலாக இவர் எழுதிய பத்தி எழுத்துக்கள் பலரது கவனத்தை இவர்பால் ஈர்த்தது. ஈழத்து படைப்பாளிகள் பலருக்கு இரத்தினவேலோனின் விமர்சனத்துக்கு தமது நூலும் உட்பட வேண்டும் என்ற பேராவா காணப்படுகின்றது. பத்தி எழுத்துக்கள் நிறைந்த நான்கு விமர்சன நூல்களை வெளியிட்டுள்ளார்.

1. புதிய சகத்திரப் புலர்வின் முன் ஈழத்துச் சிறுகதைகள்
2. அண்மைக்கால அறுவடைகள் : தொகுதி 1
3. அண்மைக்கால அறுவடைகள் : தொகுதி 2
4. புலவொலி

"புதிய சகத்திரப்புலர்வின் முன் ஈழத்துச் சிறுகதைகள்" என்னும் தொகுப்பு வாயிலாக விமர்சனத் துறையிலும் நூலை வெளியிட்டார். 26 விமர்சனக் கட்டுரைகளைத் தாங்கி இந்த நூல் வெளியானது. ஈழத்தின் புகழ்பூத்த எழுத்தாளர்களது நூல்கள் பற்றிய 25 கட்டுரைகளும் தொண்ணூறுகளின் இறுதியில் சிறுகதைகள் என்னும் விமர்சனக் கட்டுரையும் இந்நூலை அலங்கரித்துள்ளன.

ஈழத்தில் 90களில் வெளிவந்த ஈழத்துச் சிறுகதைத்தொகுப்புகள் இருபதின் மீதான விமர்சனக் கருத்தை முன் வைக்கும் "அண்மைக்கால அறுவடைகள்: தொகுதி 1" இனை மீராபதிப்பக வெளியீடாக 2001 இல் வெளியீடு செய்தார். சம்பந்தன், செங்கை ஆழியான், இளம்பிறை எம்.ஏ. நுஃமான், அங்கையன் கயிலாசநாதன், அன்ரன் செல்வகுமார், புர்கான் பீ இஃப்திகார், ந.பார்த்தீபன், சோ.ரமேஷ்வரன், லெ.முருகபூபதி, வ.அ.இராசரத்தினம், ச.அருளானந்தம், ராணிசீதரன், ஆ.மு.சி.வேலழகன், நீர்வை பான்னையன், வண்ணை சே. சிவராசா, த.கலாமணி, திக்குவல்லை கமால், புலோலியூர் க.சதாசிவம், கெக்கிறாவ ஸஹானா ஆகிய படைப்பாளர்களால் எழுதப்பெற்ற தொகுப்புகள் மீதும் பதின்மூவர் கதைகளின் தொகுப்பையும் உள்ளடக்கி 20 கட்டுரைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன. விமர்சனத்துறையில் இருந்த தேக்கத்தை நீக்கி நேரான ஆழ்ந்த விமர்சனத்தை முன் வைக்கக்கூடிய ஒருவராக இந்த தொகுப்பில் இடம்பெற்ற விரிவான பார்வையை முன் வைத்துள்ள இரத்தினவேலோன் அவர்களை கருத முடியும். விமர்சனம் என்பது இரசனையோடு ஒட்டிப் பிறந்தது என்பார்கள். இந்த ரசனையானது வாசகர்களுக்கு வாசகர் வேறுபடும். இருப்பினும் பொதுநிலையாக நின்று விமர்சனம் செய்யக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர் இரத்தினவேலோன் அவர்கள். ஒரு படைப்பாளியின் படைப்பின் பல்பரிமாணங்களையும் அலசி ஆராய்ந்து படைப்பாளி, வாசகர் மனநிலைகளை புரிந்த விமர்சனமாக இவரது விமர்சனங்கள் வெளியாவதை அவதானிக்க முடிகிறது. இந்த விமர்சனங்கள் ஊடாக படைப்பாளியின் பலம், பலவீனம், படைப்பின் ஸ்திரத்தன்மை என்பவற்றை குறிப்பிடுவதோடு படைப்பாளி பற்றிய அறிமுகத்தினையும் மேற்கொள்கின்றார். ஈழத்தின் பல்வேறு பிரதேசங்களை சேர்ந்த படைப்பாளிகளின் படைப்புகளையும் இங்கு பதிவு செய்துள்ளார்.

2006-2009 வரையான காலப்பகுதியில் வெளியான 20 சிறுகதைத்தொகுதிகள் மீதான விமர்சன கட்டுரைகள் நிறைந்ததாக "அண்மைக்கால அறுவடைகள்: தொகுதி 2" இனை வெளியிட்டார். இத்தொகுப்பில் வெளியான 20 கட்டுரைகளும் ஞாயிறு தினக்குரலில் வெளியானவை. மூத்த எழுத்தாளர்கள் முதல் இளம் எழுத்தாளர்கள் மீதும் தன் தெளிந்த விமர்சனத்தை இத்தொகுப்பிலும் முன் வைத்துள்ளார். தெணியான், தாட்சாயணி, ஆனந்தமயில், ஏ.எஸ்.உபைத்துல்லா, இலண்டன் போட்டிக்கதைகள், நெலோமி, கமலினி சிவநாதன், சிவனு மனோகரன், தமிழ்ப்பிரியா, வதிரி இ.இராஜேஸ்கண்ணன், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், திக்குவல்லைகமால், தி.ஞானசேகரன், பவானி சிவகுமாரன், யாழ்பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் சிறுகதைகள், புலோலியூர் க.குகநாயகி, செங்கை ஆழியான், ஆனந்தி, பிரமிளா செல்வராஜா, த.கலாமணி படைப்புகள் மீதான விமர்சனக்கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. 20 நூல்கள் பற்றிய விமர்சனமும் அந்த நூல்களின் அடி ஆழத்திற்கு சென்று ஆய்வு செய்யப்பட்ட விமர்சனக் கருத்துக்களை கொண்டுள்ளன. அந்த வகையில் இந்த விமர்சன நூலை வாசிக்கும் வாசகன் நிச்சயம் இந்த நூற்பிரதிகளை தேடி வாசிக்க முனைவான் என்பதை நிச்சயமாக கூறிக் கொள்ள முடியும். இரத்தினவேலோனின் சிறுகதைக்கான மொழி நகர்வு வாசகர் பரப்பில் ஏற்படுத்திய தாக்கம் அற்புதமானது, அதேபோல அவரது விமர்சன அணுகுமுறையும் குறிப்பிடற்பாலானது. அதை இந்த தொகுப்பில் உள்ள கட்டுரைகள் மீதான பார்வைகள் நிச்சயப்படுத்துகின்றன.

2019 இல் ஜீவநதியின் 121 ஆவது வெளியீடாக "புலவொலி" என்னும் தலைப்பில் 16 கட்டுரைகளை

உள்ளடக்கிய தொகுப்பை வெளியிட்டுள்ளார். இந்த தொகுப்பை இரண்டு பிரவாக பிரித்து நோக்கமுடியும்.

1. படைப்பாளர்களது படைப்பு பற்றிய விமர்சனக்கட்டுரை

2. ஆளுமைகள் குறித்த எண்ணப்பதிவுகள்

நூலுக்கு மகுடம் வைத்த நீண்ட கட்டுரையாக அமைவது "புலவொலி புலோலியூரின் இலக்கிய கர்த்தாக்கள்" என்னும் கட்டுரை. வடமராட்சியில் புகழ் பூத்த கிராமங்களில் ஒன்றாக திகழ்வது புலோலி. இந்த புலோலியில் பிறந்த இலக்கிய கர்த்தாக்கள் தமிழுக்கு ஆற்றிய, ஆற்றி வருகின்ற பணியானது மகத்தானதும், உலகிற்கு தமிழின் முக்கியத்துவத்தை பறைசாற்று பவையும் ஆகும். அந்த வகையில் ஆரம்ப காலம் தொடக்கம் இற்றை வரையான பல இலக்கிய கர்த்தாக் கள் பற்றிய பல தகவல்களை உள்ளடக்கி இந்நூல் வெளியாகியுள்ளது. புலோலியூர் நா.கதிரைவேற் பிள்ளை, குமாரசுவாமிப்புலவர், தில்லைநாத நாவலர், தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை, சு.சிவபாத சுந்தரனார், வே.சிவக்கொழுந்து, போராசிரியர் க. கணபதிப்பிள்ளை, இ.பத்மாசனி அம்பாள், தாவீது அடிகள், வ. கணபதிப்பிள்ளை, கந்த முருகேசனார் போன்றவர்கள் பற்றிய அரிய தகவல்களை வழங்கி யுள்ள இக்கட்டுரை மேற்குறிப்பிட்ட ஆளுமைகள் காலத்தால் அழியாத தடத்தினை விட்டுச் சென்றுள்ளமையை ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளார் இரத்தினவேலோன். அடுத்த தலைமுறையினரான கவிஞர் பசுபதி, இலக்கிய கலாநிதி க.சச்சிதானந்தன், குமரப்பர் பெரியதம்பி, என்.கே.ரகுநாதன் போன்ற ஆளுமைகளின் இலக்கிய செயற்பாட்டையும் பின்னைய காலத்தில் தோன்றிய இலக்கிய கர்த்தாக் கள் அவர்கள் வெளியீடு செய்த நூல்கள் பற்றிய விரிவான தகவல்களை தரவல்ல ஆய்வுக்கட்டுரையாக இக்கட்டுரை மலர்ந்துள்ளது.

சிறுகதை வளர்ச்சியில் ஈழத்தில் வெளியான சஞ்சிகைகளின் பங்களிப்பு அளப்பெரியது. அந்த வகையில் "மறுமலர்ச்சி முதல் மல்லிகை, சமர், அலை வரை சிறுகதை வளர்ச்சிக்கு துணை நின்ற சஞ்சிகைகள்" என்னும் தலைப்பில் விரிவான ஆய்வை செய்துள்ளதோடு இச் சஞ்சிகைளில் வெளியான சிறந்த சிறுகதைகளை இனங்கண்டு சுட்டிக்காட்டி யுள்ளதுடன் இந்த இதழ்கள் ஊடாக வெளி வந்த சிறுகதையாளர்களையும் இனங்காட்டியுள்ளார். கால ஓட்டத்திற்கு, இலக்கிய சூழலுக்கு ஏற்ப படைப்பாளி களின் கதையின் கரு பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

சிறுகதையாளர், நாவலாசிரியர், கட்டுரை யாளர் என பல்துறை சார்ந்த விற்பன்னர் சாகித்திய ரத்னா தெணியானின் சிதைவுகள் குறுநாவல் தொகுப்பு பற்றிய பார்வையையும் முன் வைத்துள்ளார். பரம்பரை அகதிகள், சிதைவுகள் என இரண்டு குறுநாவல்களை தாங்கி வந்த இக்குறுநாவல் தொகுப்பு மூலம் தெணியானின் இன்னொரு முகத்தையும் படைப்பின் வல்லமையையும் இனங்காட்டியுள்ளதோடு தெணியானின் குறிப்பிடத்தக்க பிற படைப்புகள் பற்றிய தன் பார்வையையும் முன் வைத்துள்ளார்.

சாஹித்திய ரத்தினா விருது பெற்றவர்களை பற்றிய தகவல்கள் நிரம்பிய தி.ஞானசேகரன் அவர்களின் கட்டுரைத்தொகுதியை முன்னிறுத்திய தன் விமர்சனத்தையும் இந்நூலில் முன் வைத்துள்ளார்.

த.கலாமணியின் மணிவிழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட அம்மாவின் உலகம் (சிறுகதைத் தொகுப்பு), ஏனிந்த தேவாசுரயுத்தம்(கவிதைத் தொகுப்பு), இளையோர் இசை நாடகம் (நாடகம்), புதிய பார்வைகளும் புதிய கண்ணோட்டங்களும் (விமர்சன கட்டுரைகள்), மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல்(கல்விக்கட்டுரைகள்) ஆகிய 5 நூல்களைப் பற்றிய தன் விமர்சனத்தை முன் வைத்துள்ளதன் மூலம் தனது பல்பரிமான திறனை நிரூபித்துள்ளார். இந்த ஐந்து வகையான நூல்களும் ஐந்து துறை சார்ந்தவை அவற்றை பற்றிய தெளிவான விமர்சனத்தை முன் வைத்துள்ளார்.

படிப்போரின் மனச்சாட்சியை உலுப்பி, சிறுகதை யில் அடுத்தகட்ட நகர்விற்கு அடித்தளமிட்ட படைப்புகள் தந்த சுதாராஜின் "காட்டில் இருந்து வந்தவன்" நூல் பற்றிய விமர்சனம் மூலம் சுதாராஜின் கதைகளின் முக்கியத்துவத்தையும் அவரது படைப்பு மொழியையும் பற்றிய தன் கருத்துகளையும் முன் வைத்துள்ளார்.

என்னால் மேற்கொள்ளப்பட்ட 29 நேர்காணல் களின் தொகுப்பாகிய "இவர்களுடன் நான்" நேர்காணல் தொகுப்பு பற்றிய தன் விமர்சனத்தை முன் வைத்துள்ள தோடு ஒவ்வொரு நேர்காணல் வழி வெளிப்படும் கரு வினை சரியாக இனங்கண்டு விமர்சித்திருந்தமை மெச்சத்தக்கது.

புலோலியூர் சதாசிவம், தெளிவத்தை ஜோசப், கோகிலா மகேந்திரன், மண்டூர் அசோகா, தாமரைச்செல்வி, ச.முருகானந்தன், எம்.கே.முருகானந்தன், சிதம்பரப் பிள்ளை போன்ற ஆளுமைகள் பற்றிய தன் மனப்பதிவை முன்வைத்துள்ளதோடு அவர்களின் படைப்பிலக்கிய செயற்பாடுகள், சமூக செயற்பாடுகள், நூல்கள் பற்றிய தகவல்கள், தனக்கும் அவர்களுக்கு மான இனிய உறவு என்பவற்றை சுவை தர இயம்பி யுள்ளார். இந்த ஆளுமைகள் குறித்த பதிவினூடாக இரத்தினவேலோன் அவர்கள் ஏனைய படைப்பாளிகள் மீது கொண்டுள்ள மதிப்பையும், ஏனைய படைப்பாளர் களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தையும் அறிய முடிகின்றது.

**நிறைவாக**

ஈழத்து இலக்கிய உலகில் தன் கால்களை அகலப்பதித்த இரத்தினவேலோன் அவர்களின் சிறு கதைகள் பற்றிய ஆய்வு யாழ்பல்லைக்கழக மாணவி எம்.திருமகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புலோலியூர் இரத்தினவேலோன் அவர்களின் படைப்பு முயற்சிகளுக்கான அங்கீகாரம் இது. 1977 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இலக்கிய ஊழியம் புரிந்து வரும் புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் அவர்களின் இலக்கியச் செயற்பாடுகள் மலைப்பைத் தருகின்றன. இலக்கிய நேர்மையுள்ள சமூக ஊடாட்டமுள்ள, சமூகப் பற்றுள்ள இலக்கிய ஆளுமையினாலேயே இது முடியும். சிறந்த ஆளுமையுள்ள, மானிடநேயமுள்ள புலோலியூர் இரத்தினவேலோன் அவர்கள் "ஜீவநதியை" மதிக்கின்ற ஒருவராகவும் எம்மிடம் நட்புப் பாராட்டுகின்ற ஒருவராகவும் இருப்பது எமக்குப் பெருமை தருவதே.


புலர்ந்தும் புலராத அந்த அதிகாலைப் பொழுதில் லண்டன் மாநகரை மூடியிருந்த பனிப்போர்வை இன்னும் அகலவில்லை. தடித்த கம்பளிப் போர்வையால் உடலைப்போர்த்தியவாறு படுக்கையில் படுத்திருந்த அருண் தொலைபேசி சிணுங்கிய சத்தம் கேட்டு வாரிச் சுருட்டி எழுந்து கொண்டான். இரவு முழுவதும் தூங்காமையால் தலையிடி மண்டையை பிழந்தது. தொடர்ந்து இரண்டு நாட்களாக தூக்கமில்லை. தள்ளாடியவாறு தொலைபேசியருகில் சென்றவன் அதனை எடுத்து காதருகில் கொண்டு சென்றான். எதிர் முனையில் சரணின் குரல், "அருண்... நேற்று நாங்கள் போய் கதைச்ச ஆள் போன் எடுத்தவர் ரிக்கெற் எல்லாம் றெடியாம் நாளைக்கு எட்டு மணிக்கு பிளைட். நீ றெடியா இரு நான் வந்து பிக்கப் பண்ணுறன்..." கூறியவன் தொலைபேசியைத் துண்டித்தான்.

நல்லூரிலே இருக்கும் ஆனந்தன் அடிக்கடி தன் நண்பன் அருணுடன் தொலைபேசியில் உரையாடுவது வழக்கம். இரண்டு நாட்களுக்கு முன் அருணுடன் உரையாடும்போது அவன் கூறிய செய்தியே தூக்கத்தைக் கெடுத்திருந்தது. நிம்மதியின்றித் தவித்த அருண் உடனேயே ஊருக்குச் செல்ல வேண்டுமென்று தீர்மானித்தான். அவனது இன்ப துன்பங்களில் எப்போதும் உடனிருக்கும் நண்பர்கள் சரணும் ஆனந்தனும் தான். சரண் இலண்டனிலே இருக்கின்றான். ஆனந்தன் இலங்கையிலே இருக்கின்றான் அவனுடைய வீடு நல்லூரிலே இருந்தது.

அவன் உயிர் நண்பனான ஆனந்தன் கூறிய விஷயத்தை மனம் அசை போட்டது. "அருண் நான் சொல்லிற விஷயத்தைக் கேட்டு நீ அதிர்ச்சியடையக் கூடாது உனக்குச் சொல்லாமலும் இருக்கேலாது நான் எனக்குத் தெரிஞ்ச ஆள் ஒருவரைப்பார்க்கிறதுக் கெண்டு கைதடியில இருக்கிற முதியோர் விடுதிக்குப்போனான் அங்க உன்ர அம்மாவைப் பாத்தனான். அம்மாவோட போய் கதைச்சனான். அவ மருகளும் அவவின்ர தாயும் தானாம் இங்க கொண்டு வந்து விட்டவை எண்டு சொல்லிக் கவலைப் பட்டவ. உனக்குச் சொல்ல வேண்டாம் எண்டு சொன்னவ. நான் அங்க வேலை செய்யிற எனக்குத் தெரிஞ்சவரிட்டை அம்மாவைக் கவனமாகப் பார்க்கச்சொல்லி சொன்னனான்.." ஆனந்தன் இவ்வாறு கூறியதும் "என்ன அம்மா முதியோர் விடுதியிலையோ... என்னடா சொல்லிறாய் நான் உடன ஊருக்கு வாறன்...." கூறிய அருணுக்கு அதன் பின்னர் தூக்கம் வரவில்லை.

# நினைவகலா நெஞ்சம்

இராஜினிதேவி சிவலிங்கம்



உடனடியாகவே சரணுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசயத்தினைக் கூறினான். சரண் உடனடியாகவே அருணின் வீட்டிற்கு வந்தான். நண்பனைக் கண்டதும் கதறி அழுதான் அருண். "டேய் அப்பாவும் இல்லாமல் என்னை வளர்க்க அம்மா பட்ட கஷ்ரம் எனக்குத்தான்ரா தெரியும். கூலி வேலை செய்து தான்ரா என்னை படிப்பிச்சு ஆளாக்கினவ. நாட்டுப் பிரச்சினையால தான் அவ என்னை இலண்டனுக்கு அனுப்பினவ அது கூட எங்கன்ர காணியை வித்துத்தான் என்னை அனுப்பினவ. அந்தக் கடன் எல்லாம் நான் அனுப்பின காசில மீண்டு இப்பதான் கொஞ்சம் வசதியாய் இருந்தவ. போன ஓகஸ்ரில தான் தானே பாத்து என்னை கூப்பிட்டு கலியாணம் செய்து வைச்சவ என்ன நடந்ததெண்டு ஒண்டுமே புரியேலை யடா சரண். நான் அம்மாவைப் பாக்கிறதுக்கு ஊருக்குப்போக வேணும்... தன்னைக் கட்டிக் கொண்டு கதறி அழும் அருணைத் தேற்றினான் சரண்.

ஆற்றாமையாலும், துயரத்தாலும் கலங்கி நிற்கும் அருணிடம் "டேய் நீ வீட்டுக்கு போன் எடுத்தனியோ அம்மாவோட நீ கதைச்சு எவ்வளவு நாளிருக்கும்" கேட்ட சரணிடம் "போன வெள்ளிக் கிழமை எடுத்து அம்மா கன நாளாய் கதைக்கேலை எண்டு சுதாவைக் கேட்க அவ வவுனியாவுக்கு கோதை யக்கா வீட்டை போட்டா. கோதையக்கா வந்தது இங்க. அவவோட போய் கொஞ்ச நாளைக்கு இருந் திட்டு வர எண்டு போட்டா எண்டு சுதா சொன்னதை நான் நம்பிவிட்டனடா..." தவிப்புடன் கூறினான் அருண்.

"அருண்... நீ எதற்கும் கலங்காதவன் எந்த விசயத்தையும் உன்னாலை சமாளிக்கத் தெரிந்தவன். அம்மாவுக்குப் பிரச்சினை எண்டதாலை தான் நீ தடு மாறி நிக்கிறாய். முதல் ஊருக்குப் போய் நிலமையைப் பார்த்து எந்த முடிவையும் எடுக்காலம் தானே...!" நண்பனுக்கு ஆறுதல் கூறிய சரண் அவன் வேலை செய்யும் கடையின் முதலாளியுடன் கதைத்து அருண் ஊருக்குப் போக வேண்டிய அவசியத்தைக் கூறி அவரது அனுமதியையும் பெற்றுக் கொண்டதோடு அவன் செல்வதற்குரிய அனைத்து நடவடிக்கைகளை யும் மேற்கொண்டான்.

மறுநாள் அருணை அழைத்துக் கொண்டு விமான நிலையம் சென்று அவனை விமானத்தில் ஏற்றி நாட்டிற்கு அனுப்பிய பின்னரே சரணால் நின்மதிப் பெருமூச்சு விட முடிந்தது. ஆனாலும் அருணுடைய அம்மாவிற்கு என்ன நடந்திருக்கும் என்பதை எண்ணி அவனது மனமும் தவிப்பதை அவனால் உணர முடிந்தது.

விமான நிலையத்திலிருந்து வீட்டிற்கு புறப்பட்ட சரணுடைய சிந்தனையில் அருணுடைய தாயுடன் கழித்த அந்த இனிய காலங்கள் நிழலாடின மகிழ்ச்சியாக வாழ வேண்டிய இளம் வயதில் கணவனை இழந்து தன் மகனை வளர்ப்பதற்கு அந்தத் தாய் பட்ட கஷ்ரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

சிறு வயது தொடக்கம் சரணும் அருணும் ஆனந்தனும் இணை பிரியாத நண்பர்கள். அருணின் தாய் வீட்டிலே காலையில் தயாரித்துத் தரும் இடியப்பம், தோசை,பிட்டு அவர்களது வீட்டிற்கு அண்மையிலுள்ள சாப்பாட்டுக் கடைக்கும் மூவரும் கொண்டு சென்று கொடுத்து விட்டே பாட சாலைக்குச் செல்வார்கள் அவர்களுடைய பெற்றோர்களும் பிள்ளை களின் விஷயத்தில் தலையிடுவதில்லை. நண்பர்கள் இருவருக்கும் காலைச்சாப்பாடு அருணுடைய தாயாரின் கையால் பரிமாறப்படும். மூவரையும் பிரித்துப் பார்க்க முடியாது. அந்த அன்புத் தொடர்பை வளர்த்த அந்த அன்பு அன்னையை முதியோர் விடுதியில் விட்டிருக் கின்றார்கள் என்ற செய்தியை சரணாலேயே ஜீரணிக்க முடியவில்லை. தானே நேரில் ஊருக்குச் சென்று நிலமையைச் அறியத்துடித்தான். தனக்கே இவ்வாறு மனம் கொதித்தால் பெற்ற தாயின் நிலையறிந்த அருணுடைய மனம் எவ்வளவு கொந்தளிக்கும் என்பதைப் புரிந்து கொண்டே அவனை நாட்டிற்கு அனுப்பும் முயற்சியை தானே மேற்கொண்ட சரணுக்கு இப்போதுதான் நின்மதியாக இருந்தது.

விமானத்தின் இருக்கையில் அமர்ந்த அருண் கண்களை மெதுவாக மூடினான். தாயின் பரிதாபமான முகம் அவனை யாசிப்பது போல இருக்க அவன் கண்கள் பனித்தன. அம்மா... அம்மா என்று மனம் ஓலமிட்டது. ஊருக்கு போனவுடன் எடுக்க வேண்டிய முடிவுகளை தீர்க்கமாக எடுத்த பின்னரே அவன் ஊருக்குப்புறப் பட்டான். மனைவி சுதாவுக்கோ கோதை யக்காவுக்கோ தான் வருவதைப் பற்றிக் கூறவில்லை.

ஆனந்தனுக்கு மட்டுமே தான் வரும் விஷ யத்தைக் கூறியதுடன் அவனை விமான நிலையத்திற்கு வரும்படி கூறியிருந்தான். விமான நிலையத்திற்கு கிரிதரனின் ஹயஸ் வாகனத்தில் ஆனந்தன் வந்திருந்தான். சென்ற வருடமும் ஆனந்தன் கிரிதரனின் வாகனத்திற் தான் விமான நிலையத்திற்கு வந்திருந்தான். அருண் திருமணத்திற்காக வந்திருந்தான். எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. அவனது பிரயாணம். ஒரு வருடத்தில் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது.

சுங்கப் பரிசோதனைகள் யாவும் முடிவடைந்து வெளியே வந்தவன் ஆனந்தனைக் கண்டவுடன் ஓடி வந்து கட்டி அணைத்து அவன் தோளில் முகம் புதைத்து கதறி அழுதான். அவனைத் தழுவிய ஆனந்தனும் கண் கலங்கினான். "அருண் இப்ப என்ன நடந்ததெண்டு நீ அழுகிறாய்... எல்லாரும் பாக்கினம் இப்ப அம்மாவை நீ போய் வீட்டை கூட்டிக்கொண்டு போகலாம் தானே அழதையடா... அருணைத் தேற்றியவன் அவனை அழைத்துக் கொண்டு வாகனத்தை நோக்கி விரைந்தான்.

இயல்பாகவே அமைதியான அருண் யாருடனும் அதிகம் பேச மாட்டான். நண்பர்களான ஆனந்தனு டனும் சரணுடனும் தான் கலகலப்பாக பேசுவான். அம்மாதான் அவனது உலகம். எந்த விஷயத்தையும் அவன் தனது தாயிடம் மறைத்ததில்லை. தாயின் மீது உயிரையே வைத்திருந்த அருணுடைய உணர்வுகளை ஆனந்தனால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

"ஆனந்... நாங்கள் வவுனியாவுக்குப்போய் கோதையக்காவையும் கூட்டிக்கொண்டு போவம். வீட்டுக்கு நேர போக வேண்டாம். உங்கன்ர வீட்டை போய் "பாக்" எல்லாத்தையும் வச்சிட்டு அம்மாவைப் போய் பாத்து அவவை கூட்டிக் கொண்டு தான் வீட்டிற்கு போக வேணும்..." மூச்சு விடாமல் கூறினான் அருண்.

"சரி அருண் கோதை அக்கா வீட்டுக்கு முதல் போவம் நீ கொஞ்ச நேரம் நித்திரை கொள்ளடா இரண்டு மூண்டு நாளா நீ நித்திரையே கொள்ளேல்ல

எண்டு சரண் சொன்னவன். நீ கொஞ்ச நேரம் தூங்கடா"

இருக்கையில் தலையைச் சாய்த்தவனுடைய நெஞ்சில் பழைய நினைவுகள் நிழலாடின.

அருணுக்கு எட்டு வயதாக இருக்கும் போது அவன் தந்தை கனகரத்தினம் காலமாகி விட்டார். அவர் உயிரோடு இருக்கும்வரை மனைவி தவமணியை யும் மகன் அருணையும் தன் கண்ணிற்குள் வைத்துப் பாதுகாத்தார். அன்பான அந்தக் குடும்பத்தில் கனகரத் தினம் திடீர் மறைவு பேரிழப்பாக அமைந்து விட்டது.

விவசாயத்தை நம்பி வாழ்ந்த கனகரத்தினத்திற்கு பொருளாதார நிலை ஓரளவு கஷ்ரமில்லாமல் குடும்பத்தை நடாத்துவதற்கு போதுமானதாக இருந்தது. ஒருவரிடமும் கடமைப் படாத அவர், தன் மனைவியையும் மகனையும் எந்தக் குறையுமில்லாது பார்த்துக் கொண்டார்.

வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்த தவமணியின் அழகில் மனதைப்பறிகொடுத்த கனகரத்தினம் அவளை விரும்பி மணந்து கொண்டார். நீண்ட நாசியும் காதளவு நீண்ட கண்களும் நீண்ட பிருஷ்டி பாகம் வரை தொங்கும் அலைபோன்ற கூந்தலும் அவளைப் பார்த்தால் கண்களை திருப்பி எடுக்க முடியாது. பொது நிறமாக இருந்தாலும் அழகியாக விளங்கிய அவளை சீதனமில்லாமல் கனகரத்தினம் திருமணம் செய்ததை அவர் அண்ணி கனகம் விரும்பவில்லை.

கனகம் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது சகோதரர்கள் எல்லோரும் பிரான்சிலே இருந்தமையால் ஒரேயொரு சகோதரியான கனகத் திற்கு பொருளாதாரத்தில் எந்தக் குறையும் இருக்க வில்லை. அவளையும் குடும்பத்தையும் தம்முடன் வைத்துக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த கால கட்டத்தில் தான் கனகரத்தினம் தவமணியைத் திருமணம் செய்து வீட்டிற்கு அழைத்து வந்திருந்தார்.

பெற்றோர்களை இழந்த கனகரத்தினம் அண்ணன் சுந்தரமூர்த்தியுடனேயே இருந்து வந்தார். தாயைப் போன்ற அன்பு அண்ணி கனகத்திடமிருந்து கிடைக்காது விட்டாலும் கனகரத்தினத்தின் பொறுமையும் சுந்தரமூர்த்தி அவரிடம் காட்டிய பாசமும் அந்த வீட்டில் அவரை வாழ வைத்தன.

அண்ணன் சுந்தரமூர்த்திக்கும் தவமணியை மிகவும் பிடித்து விட்டது. அவளது அழகும் பொறுமை யும் அவரது மனதையும் கவர்ந்து விட்டதால் தம்பியின் திருமணத்திற்குப் பச்சைக் கொடி காட்டி விட்டார்.

பருத்த சரீரமும் எலிவால் போன்ற கூந்தலையும் கொண்ட கனகத்திற்கு தவமணியின் அழகு பொறாமையை ஏற்படுத்தியது. தவமணியின் நீண்ட கூந்தலை பார்த்து கணவனின் காதில் "கொண்டை பெருப்பது கொண்டவனுக்கு கூடாது... அந்தப் பிள்ளையின்ரை தலைமயிரை இடுப்புக்கு கீழ விடாமல் வெட்டச் சொல்ல வேணும்..." அவளது மன வோட்டத்தைப் புரிந்து கொண்ட சுந்தரமூர்த்தி புன்னகைத்துக் கொண்டார்.

தவமணிக்காக அவர் ஏதாவது கதைத்தால் சந்தேகத்துடன் அவரிடம் "உங்களையும் அவள் தன்ர அழகைக் காட்டி மயக்கிப் போட்டாள் போல கிடக்கு..." என்று கூறும் மனைவியை முறைத்துப் பார்த்து விட்டு வெளியேறி விடுவார் சுந்தரமூர்த்தி.

அண்ணியின் குண இயல்பை நன்கு அறிந்து கொண்டவர் தங்கள் தோட்டத்திற்கு அருகில் சிறிய வீடு ஒன்றை அமைத்து அந்த வீட்டிற்கு மனைவியை அழைத்துச் சென்று குடியேறினார்.

கனகத்தின் சகோதரர்கள் முயற்சியால் சந்தரமூர்த்தி குடும்பத்தவர்கள் பிரான்சிற்குச் சென்று விட்டார்கள். கனகரத்தினத்திற்கும் தவமணிக்கும் அருண் பிறந்த மகிழ்ச்சியில் வாழ்க்கை இன்பமாக நகர்ந்தது. சுந்தர மூர்த்தி அடிக்கடி கனகரத்தினத்துடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு அருண் பற்றியும் தவமணி பற்றியும் விசாரித்துக் கொள்வார்.

கனகத்தின் குணத்தை நன்கு தெரிந்தமையால் சுந்தரமூர்த்தி உதவி செய்யவிரும்பிய போதெல்லாம் மறுத்து விடுவார். நெஞ்சு வலி என்று சொன்ன கனகரத்தினம் தவமணி ஓடிச் சென்று சுடுநீர் காண்டு வருவதற்கிடையில் நிலத்தில் சாய்ந்தார். அவரின் மறைவால் தவமணியும் அருணும் நிலை குலைந்து போயினர்.

தம்பியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்த சுந்தரமூர்த்தியும் கனகமும் அதற்கான செலவு முழுவதையும் பொறுப்பேற்று நடாத்தினர். சந்தர மூர்த்தி தம்பியின் மனைவியிடமும் மகனிடமும் காட்டிய அனுதாபத்தை பொறாமைக் கண்களுடன் பார்த்த கனகத்தின் செய்கைகளை கண்டு சுந்தரமூர்த்தி கொதித்துப் போனார்.

"உங்கன்ர தம்பி போனது உங்களுக்கு நல்ல வசதியாய் போச்சு. இப்ப நீங்கள் அந்த மேனி மினுக்கியின்ர வலையில நல்லா விழுந்தீட்டிங்கள்..." கனகத்தின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டு தவமணியும் எட்டு வயது நிரம்பிய அருணும் திகைத்து விட்டனர். கலங்கி நின்ற தவமணி மனதைத் திடப்படுத்திக் கொண்டவள் தீர்க்கமான முடிவை எடுத்துக் கொண்டாள். கணவன் காரியங்கள் யாவும் முடிந்தவுடன் வங்கியில் கனகரத்தினம் தனது பெயரிலும் மனைவியின் பெயரிலுமாக போட்டு வைத்த ஐந்து லட்சம் ரூபாவை எடுத்து வந்தாள்.

சுந்தரமூர்த்தி தனது மைத்துனன் முறையிலான நடராஜன் மூலமாகவே செலவு முழுவதையும் செய்ய வைத்தார். வழமையாகவே அவர்தான் ஊரிலே நடைபெறும் காரியங்களை நடத்துபவர். அவர் மூலம் சுந்தரமூர்த்தி எவ்வளவு செலவழித்தார் என்ற விபரத்தை அறிந்து கொண்டவள் அவர் குடும்பத்தவர்களுடன் புறப்பட ஆயத்தமான போது அவரிடம் கனகத்தின் முன்னிலையிலேயே தன் கணவரின் இறுதிக் கிரிகையின் போது அவர் செலவழித்த முழுப் பணத்தையும் அவர் மறுத்தும் பிடிவாதமாகக் கொடுத்தாள்.

தன் மகனை வளர்ப்பதற்கு யாரிடமும் கடமைப்படாது தன் உடலை வருத்தி உழைத்து மகனை படிக்க வைத்ததுடன் நாட்டுப்பிரச்சினை காரணமாக தங்களது விவசாயம் செய்த காணியை விற்கு லண்டனுக்கு அனுப்பினாள். இத்தகைய துணிச்சலும் தன்னம்பிக்கையுமுள்ள அம்மாவா இன்று முதியோர் விடுதியில். பொங்கி வந்த துயரை அடக்க முடியாது விம்மினான் அருண். கண்களிலிருந்து வடிந்த கண்ணீரை துடைக்கக்கூட மறந்திருந்த அருணை அணைத்து ஆறுதல் படுத்தினான் ஆனந்தன்.

வவுனியாவில் கோதை அக்காவின் வீட்டிற்கு திடீரென வந்து இறங்கிய அருணைக் கண்டவுடன் ஆச்சரியத்தில் திகைத்தவள் இன்புடன் தம்பியை அணைத்துக்கொண்டாள். உறவு முறையில் பெரியம்மா முறையானவரின் மகளாக கோதை அருண் வெளி நாட்டிற்குச் செல்லும் போது அவனுடைய அம்மா வுடன் உதவிக்குவந்து தங்கியிருந்தவள். தவமணியை தன் பெற்ற தாயைப்பார்ப்பதுபோல் கவனமாகப் பார்த் தவள். அருணின் திருமணத்தின் பின் வவுனியாவில் கணவன் தொழில் பார்க்கும் இடத்திற்கு வந்து விட்டாள்.

கோதை அக்காவிடம் தாயின் நிலையைக் கூறி கண் கலங்கிய அருணிடம் "அருண் நானும் வாறன் அம்மாவைப் போய் கூட்டிட்டு கொண்டு வந்து என்னோடை விட்டிட்டு நீ போ நான் சின்னம்மாவைக் கவனமாகப் பாப்பன் நீ கவலைப்படாத..." கூறியவள் அருணை அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

கோதையின் கணவனிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட அருணும் ஆனந்தனும் கோதை யும் கைதடியிலுள்ள முதியோர் விடுதியை அடைந்தனர்.

ஆனந்தன் தன் நண்பனுடன் கதைத்து தவமணியைப் பார்ப்பதற்கு மகன் அருண் வந்திருப்ப தாகக் கூறவே அவர் மேலதிகாரியுடன் கதைத்து தவமணியை அழைத்து வர ஊழியரை அனுப்பினார்.

நெஞ்சம் படபடக்க தாயின் வரவை எதிர் நோக்கி காத்திருந்த அருண் அவரைக் கண்டதும் ஓடிச் சென்று கட்டியணைத்துக் கதறினான். கண்களில் இருந்து பெருகிய கண்ணீரைத் துடைத்தவள் அருணை அணைத்து அவன் தலையைக் கோதினார். தாயிடம் நடந்த சம்பவங்களைக் கேட்டறிந்த அருண், மனைவி சுதாவைத் தூண்டி விட்டு தாயை முதியோர் விடுதிக்கு அனுப்பியவர் தனது மாமியார் என்பதை தெரிந்து கொண்டான். தவமணியையும் கோதையையும் ஆனந்தனின் வீட்டிலே விட்டு விட்டு வாகனத்தில் தனது வீட்டிற்கு அருண் வந்தான்.

தொலைக்காட்சி நாடகத்தைப்பார்த்து கலகலப்பாக சிரித்தபடி இருந்த சுதாவும் அவள் தாய் சுமதியும் வாகனச்சத்தம் கேட்டு வெளியே வந்தனர். அருணைக் கண்டதும் செய்வதறியாது திகைத்து நின்ற அவர்களிடம் "சுதா நீ லண்டனுக்கு வாறதுக்கு எல்லா ஒழுங்கும் செய்திட்டன் உன்னை என்னோடையே கூட்டிக்கொண்டு போகப் போறன் உடனேபோக வேணும் உன்ரை சாமான்கள் எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு உடனே வெளிக்கிட்டு வா... மாமி நீங்களும் உங்கன்ரை வீட்டுக்கு வாங்கோ அங்க போய் மற்ற ஒழுங்குகளைச் செய்யலாம்..."

மகிழ்ச்சி ஒரு புறம். அருண் தாயைப்பற்றி ஒன்றும் கேட்காதது மனதை நெருடிய போதும், தாய் கோதை அக்கா வீட்டில் இருப்பதாக நான் கூறியதை அருண் நம்பிவிட்டான் என்று எண்ணியவள் தனது பொருட்களை அவசரமாக எடுத்துக்கொண்டு வாகனத்தில் ஏறிக்கொண்டாள். அவளுடன் அவளது தாயும் வந்து வாகனத்தில் ஏறி அமர்ந்ததும் அருண் றைவரிடம் "தம்பி வாகனத்தை கொழும்பு துறைக்கு விடு..." கூறியவன் தன் மனைவி சுதாவையும் அவள் தாயையும் திரும்பிப் பார்த்தான். அவளது முகம் இறுகியிருந்தது. அவனது உணர்வை புரிந்து கொள்ள முடியாது இருவரும் அவனை வெறித்தனர்.

## பெண்ணே நீ எங்கிருக்கிறாய்?

பெண்ணே நீ எங்கிருக்கிறாய்?
சின்ன வயதிலிருந்தே முன்னிற்கும் ஆற்றலும்
திறமையும் தைரியமும் உன்னிடம் குடிகொண்டிருந்தன
அப்பாவின் நாஸ்திக வாதத்தைக் கேட்டுக் கேட்டே வளர்ந்ததால்
இறைபக்தி உன்னிடம் குறைவுதான்
மூட நம்பிக்கைகளையும்
சாஸ்திர சம்பிரதாயங்களையும் பேய்களையும்
நீ எப்போதும் நம்புவதில்லை
இதனால் நீ மற்றப் பெண்களிலிருந்து மாறுபட்டவள் தான்
முனைப்புடன் கற்றாய் பட்டம் பெற்றாய் பதவி அடைந்தாய்
காதல் செய்து மணம்புரிந்து மகவு ஈன்று இனிது வாழ்ந்தாய்
பெண்ணே! கால ஓட்டத்தில் உனக்கு வேலைப்பளுக்கள்
அதிகரித்தன
உன் கொள்கைகளுடன் நீயும் காணாமல் போனாய்
சுய விருப்பென்பது உனக்கு இல்லாமல் போனது
கணவனின் விருப்பப்படியே எதையும் செய்யப் பழகினாய்
சிக்கனமும் நேர்த்தியும் உன்னிடம் குறைவுதான்
என்றாலும் நீ
ஊதாரியுமில்லை அழுக்கானவளும் இல்லை
பிறர் மத்தியில் இதற்காக நீ அவமதிக்கப் படும் பொழுது
பல தடவைகள் அழுதிருக்கிறாய் என்றாலும் அது உனக்குப்
பழகிப் போய்விட மௌனியானாய்
இதை உணராதோர் உன்னை ரோசமற்றவள் என்றனர்
ரோசம் பார்க்கில் குடும்பம் இல்லை
வசதி வாய்ப்புக்களில் உனக்குக் குறையேதும் இல்லை
வாழ்வில் பல தடவைகளில் நீ மகிழ்வுடன் இருக்கிறாய்
என்றாலும் நீ காணாமல் போய் விட்டாய்
அன்பானவனின் கொள்கைப்படி வாழ முயற்சிக்கிறாய்
உன்னால் அது முடியவில்லை
நீ தவறு செய்ததாய்க் கருதும் ஒவ்வொரு வினாடியும்
குருடியாய் செவிடியாய் கழுதையாய் மாடாய்
வர்ணிக்கப்படுகிறாய்
இவ் வர்ணனைகளின் போது நீ ஆவேசமும் கொதிப்பும்
அடைகிறாய்
என்றாலும் நீ அடங்கி விடுவாய்
செத்துவிட மனசு துடிக்கும் ஆனாலும் நீ
அடங்கி விடுவாய் உன் பிள்ளைகளுக்காய் சமூகத்துக்காய்
வெளியில் பிறர் உனக்கு அளிக்கும் அந்தஸ்தும் கௌரவமும்
வீட்டிலில்லை
பெண்ணே!
நீ அடங்கிப் போனாய்
உன் குடும்பத்துக்காய்
வாழ்க்கைக்காய்
உன் பிள்ளைகளுக்காய்
உன் சுயம் எங்கோ காணாமல் போனது
பெண்ணே!
இப்போது நீ எங்கிருக்கிறாய்

– வானதி பகீரதன்

## வேண்டும் எங்கள் வாழ்க்கையில்

வேண்டும் எங்கள் வாழ்க்கையில் மெய்யறிவு – நாங்கள்
வாழ்வோம் இந்தப் பூமியில் நல்லுறவால்

பூத்துக் காய்த்துக் கனிந்து ருசிக்கும்
கண்ணில் தெரியும் கனியின் அழகும்
பூத்துக் காய்த்து கனிய வைக்கும்
கண்கள் காணா கனிம அழகும்
கலந்து பகிர்ந்து படைக்கும் இயல்பை
பார்த்துப் படித்து அறியும் அழகும்– இயற்கை
பருவம் பார்த்துப் படைக்கும் நோக்கம்
அறிந்து வாழும் மனித அழகும்

வேண்டும் எங்கள் வாழ்க்கையில் – நாங்கள்
வாழ்வோம் இந்தப் பூமியில் – மெய்யறிவு
வேண்டும் எங்கள் வாழ்க்கையில் – நாங்கள்
வாழ்வோம் என்றும் இந்தப் பூமியில்

வேண்டும் எங்கள் வாழ்க்கையில் மெய்யறிவு – நாங்கள்
வாழ்வோம் இந்தப் பூமியில் நல்லுறவால்

## வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்


வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்
வாழும் உயிர்கள் யாவும் உலகில்
வாழ்கவென வாழ்கவென
வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோமே

தாயின் மடியில் பிறந்தோம் – பூமித்
தாயின் மடியில் தவழ்ந்தோம்.
இயற்கை வளத்தில் வளர்ந்தோம்
இயற்கையுடன் இயற்கையாக மிளிர்வோம் – எங்கெங்கும்
இயற்கையுடன் இயற்கையாக வளர்வோம்.

இன்பமான வாழ்க்கையினைப் பகிருவோம்
ஏற்றத்தாழ்வு எவையெனினும் அகற்றுவோம் – எல்லா
மனிதர்களும் மனிதரென வாழுவோம் – எங்கும்
இன்பம் பொங்கும் உலகை ஆக்கி மகிழுவோம்

உலகம் எல்லாம் எல்லோருக்கும் உரியதே
உயிர்கள் எல்லாம் இயற்கை மடியில் பெரியதே
உயிர்கள் பல உலகில் வாழ்வது உண்மையே
உலகம் எல்லோருக்கும் உரியதென்பது உண்மையே

எல்லோரும் இன்புற்றிருக்கும் அரிய உலகமே
எல்லோருக்கும் இயற்கைதந்த இனிய இல்லமே.



## ஔவைக்கான பாடல்

நிலவுக்குச் சொந்தக்காரர் யாரம்மா?
நிலவுதான் சொந்தம் எவருக்கும் தானம்மா!

ஔவைக்குச் சொந்தக்காரர் எவரம்மா?
ஔவைதான் சொந்தம் பார் எமக்கம்மா!

பாட்டியென்று அவளைத்தான் படைத்தவர் யார்?
பாட்டிலுள்ள படியென்றால் அவள் இளையவள்தான்

மன்னருக்கு மதியுரைக்கும் மாண்புடையாள்
பொது மக்களுக்கும் வழியுரைக்கும் சால்புடையாள்

கல்வி கேள்வி வல்லவளாய் அவள் திகழ்ந்தாள்
கள்ளுண்டு கருத்தாடும் வழக்குடையாள்
(பாட்டியென்று...)

நட்புக்கு இலக்கணமாய் அவள் திரிந்தாள்
மன்னன் அதியனிடம் நெல்லிக்கனிதான் பெற்றிருந்தாள்


போர் முனையும் மன்னரையே பொறுக்கச் செய்வாள்
பொது மக்கள் குரலெனவே ஔவை வாழ்ந்திருந்தாள்
(பாட்டியென்று...)

சி.ஜெயசங்கரின் மூன்று கவிதைகள்

# முல்லைப்பாட்டு

சித்ரா சின்னராஜன்

கார்காலம் பிறந்து மலர்கள் மலர்ந்தன
காற்று தென்றலாய் வீசத் தொடங்கியது
போர்க் கோலம் பூண்டு சென்ற
தலைவன் இன்னும் வரவில்லை
"முல்லையும் கொன்றையும் மலரும்
கார்காலத்தில் வருவேன்" என்று
உண்மையை உரைத்துச் சென்ற
என் தலைவரின் வரவை
இன்னும் காண முடியவில்லையே....?
நான் எத்தனை பொழுதுகள்
அவரை எதிர்பார்த்தது... எதிர்பார்த்து....
ஆற்றொணாத் துயரில்
காத்து இருப்பது" என்று
தலைவி ஏங்கித் தவிக்கின்றாள்
தலைவனைக் காணாத் துயரில்
அவள் துவண்டு கிடக்கிறாள்
அவளது அழகிய கைகள் மெலிந்து விட்டன
தங்க வளையல்கள் கழன்று விழுகின்றன
ஏழடுக்கு மாளிகையில் தன்னை
ஏற்றி வைத்த தலைவனை
நினைந்து.... நினைந்து...
அங்க மிங்கும் நடக்கிறாள்
அதோ! கார்காலத்து மழைநீர் பொழிகிறது!
அதன் ஒலியும் நன்றாய்க் கேட்கிறது!
பாவை விளக்கின் ஒளியும்
மாடம் முழுவதும் தெரிகிறது!
தலைவி, பஞ்சணைமீது புரள்கின்றாள்
பொன்மணி மாடத்தில் தவிக்கின்றாள்
அம்புபட்ட மயிலாக
அவள் நடுங்கித் துடிக்கின்றாள்!
இதனைக் கண்ட பெருமுதாட்டி
தலைவியை அழைத்தாள்
மாயோன் கோயிலை மனதில் நிறுத்தி
தலைவியோடு கடுகி நடந்தாள்
நெல்லையும் அழகிய முல்லை மலரையும்
சமர்ப்பணம் செய்து வழிபா டியற்றினர்
ஆங்கு இருந்த ஆயர் மகளோ
உணர்வு பொங்கிவழிய நின்று
நற்சொல் என்னும் கட்டுச் சொல்ல
ஆலய முன்றில் வந்து உரைத்தனள்
"அன்னையே! எங்கள் தலைவியே!
நின் கவலையை ஒழிக!
உன் கணவர் போரில் வெல்வார்!
வெற்றி வாகை சூடிக் கொண்டு
விரைந்து வருவார் கவலை ஒழிக!
என்று திருவாய் மலர்ந்து அருளினள்!
"இனி விரைந்து வருவாரா...?
ஆறுதல் எனக்குத் தருவரா...?
அவர் நினைவில் உள்ளம் மலரட்டுமே...!"
என, பிரிவிலும் அமைதி தேடினாள்



பாசறை வீட்டில் படைகளும் அரசனும்
போரினை நோக்கி விழித்து நின்றனர்!
வீரம் செறிந்த மெய்க் காவலர்
கண் துஞ்சாது காவல் காத்தனர்!
மறக்குல மகளிர் உடைவாளுடன்
பாவை விளக்கினைத் தூண்டி எரித்தனர்!
மன்னனின் சிந்தனை நாளைய போரினை
எண்ணி எண்ணியே சுழன்ற போதிலும்
நேற்றைய போரின் வீர வடுக்களைக்
கண்டதும் மனதில் கவலை கொண்டான்!
காயப்பட்ட யானைகள் குதிரைகள்
செஞ் சோற்றுக் கடன் தீர்க்க
போர்க்களம் புகுந்து களமாடிய
மாவீரரின் புகழ் உடல்கள்
கண்டதும் மன்னவன் கவலை கொண்டனன்
மீண்டும் துணிவுடன் எழுந்து நின்றனன்
"எதிரிகளின் பாசறையை நோக்கிச் செல்லுங்கள்!
எங்கள் பூர்வீக மண்ணை மீட்டுக் கொள்ளுங்கள்!"
மன்னவனின் கட்டளையைப்
பெற்றுக் கொண்டதும்
நாற்படையும் போர்க்களத்தைச்
சுற்றி வளைத்தன!
வெற்றிமேல் வெற்றிக்கனி
பெற்றுக் கொண்டன!
வாகைமாலை சூடிக் கொண்டு
விரைந்து வந்தன!
மன்னனின் மகிழ்ச்சி
பொங்கி வழிந்தது
மாணிக்கத் தேர்
மாளிகை நோக்கி
விரைந்து சென்றது
வீதிகள் தோறும்
பூரண கும்பம்!
அஞ்சனம் போன்ற
காயா மலர்கள் !
பொன்னைப் போன்ற
கொன்றைப் பூக்கள்!
உள்ளங் கைபோல்
வெண்ணிறக் காந்தள்!
மன்னனின் வெற்றியில்
மலர்ந்து சிரித்தன!
வெண்சங்குகள் முழங்கி ஒலித்தன!
வெற்றிக் கொடிகள்
உயர்ந்து அசைந்தன!
வீர முழக்கம் வானைத் தொட்டது!
தலைவனின் தேரோசை எழுகிறது!
தலைவியின் காதில் கேட்கிறது!
அவளின் உள்ளம் மகிழ்கிறது!
முகத்தில் புன்னகை தவழ்கிறது!
கூந்தலில் முல்லை மலர்கிறது!

"ஏய் மொக்கத வுனோ.... அனே... கப்பளா..", என்ற சப்தமும் சீனாக்காரர் களும் தம்பங்கிற்கு தேனீக்கள் போல தம்பாஷையில் கத்தியவாறு அங்குமிங்கும் பார்வையைத் திருப்பினர். இவர்களுக் கிடையில் வேறு உலகத்தில் யோசனையில் ஆழ்ந்திருந்த நகுலன் மீண்டும் நினைவுக்கு வந்தவனாய் ரயில் நிறுத்தப்பட்டிருப்பதை யும் சில இளைஞர்கள் தண்டவாளப்பாதை யில் இரு மருங்கிலும் இறங்கி பின்நோக்கி ஓடுவதைக்கண்டு ஆச்சரியத்தோடு என்ன நடந்தது என்று தெரியாமல் பக்கத்தில் இருந்த வாட்டசாட்டமான இளைஞனைப் பார்த்தான். சிங்களமாக இருக்க வேணும் என நினைத்துக்கொண்டவன் வேறுபக்கம் பார்வையைத் திருப்ப முன்னர் அந்த சிங்கள இளைஞன் "பெட்டிய தம்மத"? எனக் கேட்டான். ஒன்றும் விளங்காத நகுலன் எந்த பக்கம் தலை அசைக்க என குழம்பிப் போய் "அது....அது" என இழுக்க பக்கத்தில் இருந்தவர் "நஹ தாமநா" எனப் பதிலளித்தார். அந்த ரயில் கொழும்பி லிருந்து பாணந்துறைக்கு செல்லும் ரயில். அதில் தமிழர்கள் பெரிதளவில் இருக்க வில்லை சிங்களவர்களும் இலங்கைத்தீவை சுற்றிப் பார்க்க வந்த சீனக்காரர்களுமாக நிரம்பியிருந்தனர். இதனால் நகுலனுக்கும் உடனடியாக நிலவரத்தை அறியமுடிய வில்லை எனினும் அவனின் ஆர்வம் விடுவதாய் இல்லை. பல தசாப்தங்களுக்கு முற்பட்ட ரயிலாக அது இருக்க வேண்டும். சீற்றுக்கள் எதுவுமின்றி எங்கட யாழ்ப் பாணத்தில முன்னம் ஓடிய தட்டிவான் போல சுற்றிவர மட்டும் சீற்றுக்கள் இருக்க நடுப் பகுதியில் சனங்கள் கம்பியைப் பிடித்தவாறு தொங்கிக்கொண்டு நின்றனர். சிறு இடை வெளியால் புகுந்து கொண்ட நகுலன் துருப் பிடித்த அந்தக் கண்ணாடி யன்னலுக்குள் தலைவிட்டு வெளியே பார்த்தவன் அதிர்ந்து போனான். அய்யோ ரயிலில் அடிபட்டு துண்டங்களான ஒரு முதியவரின் உடலை வெள்ளவத்தை கடற்கரையில் நின்ற ரயில்க் கடவை ஊழியர்களும் பொலிசாரும் ரயில் பெட்டிக்குள் தூக்கிப் போடுவதையும் கண்டவன் சற்று நிலை தடுமாறித் தான் போட்டான். கொழும்பில இது சகசமானது தான் ஆனால் யாழ்ப்பாணத்தில விவசாயக் கிராமத்தில் பிறந்து வளர்ந்து இயற்கையோடு ஒன்றிய நகுலனுக்கு இந்த விபத்தும், அது தொடர்பாக யாரும் அலட்டிக் கொள்ளாத தும் அவரவர் தம் அடுத்த கட்ட வேலையை தொடங்கிவிட்ட நகர வாழ்க்கை ஆச்சரிய மாகவும் ஓராயிரம் கேள்விகளுக்கு விடை தெரியாதவனாய் ஒரு பைத்தியக்காரன் போல்

# தம்பி ஏன் பாணந்துறைக்கு போனவன்?

ஜெயம் நதியன்



மீண்டும் அந்த நெரிசலுக்குள் போக விருப்பமில்லாது அந்த யன்னலோர இடைவெளியில் கம்பியைப் பிடித்தவாறு நின்றுவிட்டான்.

முதியவரின் துண்டாடப்பட்ட உடல் ரயில் பின் பெட்டியில் ஏற்றப்பட்டதும் ரயில் புறப்படத் தொடங்கியது. கொழும்பின் கரையோரமாக வளைந்து நெளிந்து புறப்படத் தொடங்கிய ரயில் வானுயர்ந்த கட்டிடங்களையும் தெருக்களையும் கடந்து வந்த ரயில் தற்போது கடற்கரையோடு புறப்பட்டு சிறு குடிசைகள் நிறைந்த ஓர் கடற்கரை கிராமத்துக்கு குறுக்காகவும் புகுந்து கொண்டது. காட்போட் மட்டைகளால் பொத்தல் போட்ட சிறு கூடாரங்களில் வாழும் அந்த சிறுவர்கள் வேடிக்கை பார்த்தவாறு ரயில் பயணிகளுக்கு வணக்கம் வைக்க தம் கையில் இருந்த பிஸ்கட் பையை நாய்க்கு எறிவது போல் அந்த சீனாக்காரி எறிந்துவிட அதை எடுப்பதற்காக முண்டியடித்துக் கொண்டு பிள்ளைகள் ரயிலோடு ஓடிவருவதையும் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு மேலும் பொரி கிடைத்தது போல் தனக்குள்ளே தர்க்கித்துக்கொண்டான். "இவ்வளவு பெரிய இந்த நகரத்திலே இவ்வாறான வறுமையான மக்களும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மனிதர்கள் தன் ஒரு வயிற்று சோற்றுக்காக உலகம் முழுவதும் போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்கள் சாதி பார்ப்பதில்லை, இனம் பார்ப்பதில்லை, மொழி பார்ப்பதில்லை, காரணம் அவர்களுக்குத் தேவை யானது உணவு மட்டும்தான். ஏன் இந்த ரயிலில் அடிபட்ட முதியவர் கூட ஒரு பிச்சைக்காரனாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் எல்லோரும் கொஞ்ச வருடங்கள் தான் உயிருடன் வாழப் போகின்றோம். அதுவரைக்கும் தமக்குப் பிடித்தவற்றை வாழாமல் ஏதோ ஒரு பொய்யான கௌரவத்திற்காகவும் தங்களைச் சுற்றி ஒரு வேலி போட்டுக் கொண்டு அதற்குள் வாழும் மந்தைகள் போல ஏன் வாழ வேண்டும்?. அதற்கு சமயம், இனம், மொழி , சாதி என காரணமே இல்லாத காரணங்களை ஏன் கூற வேண்டும்?" என சலித்துக் கொண்டவன் அவன் மனசு பொறுக்க முடியாமல் அவன் கண்களில் இருந்து வழிந்த ஓரிரு கண்ணீர்த் துளிகளை யாரும் பார்க்க முன்னர் புறங்கையால் துடைத்துக்கொண்டான் நகுலன்.

எங்கட சனங்களின்ர சாதிப்பாகுபாட்டையும் இனபேதங்களையும் நினைத்து அழுது கொள்ளு மளவிற்கு அவன் ஒரு சமூக சீர்திருத்தவாதி இல்லை. ஒரு சிங்களப் பெண்ணிடம் மனதைப் பறிகொடுத்து விட்ட காதல்வாதி. இப்பகூட அவன் புறப்பட்டுக் கொண்டிருப்பதுவும் அவன் காதலி லக்மாலியை சந்தித்துக்கொள்வதற்காக இரவு முழுவதும் பயணம் செய்து களைப்படைந்து விட்டாலும் தன் காதலியை பார்க்கும் உற்சாகத்தில் சாப்பாடு, உறக்கம் இவையெல்லாம் பெரிதாக தெரியவில்லை. ஏனென்றால் அவன் நாடி, நாளங்களில் ஓடிக்கொண்டிருப்பது லக்மாலியின் நினைவலைகள். போன் சற்று சிணுங்கவே எடுத்துப்பார்த்தவன் " நான் இப்ப பாணந்துறை ரயில்வே நிலையத்தில நிக்கிறன்" என்று தூய தமிழில் வந்த லக்மாலியின் குறுந்தகவலைப் பார்த்தவன் புன் சிரிப்போடு ஓகே.ஓகே. என்று ஆங்கிலத்தில் பதில் அனுப்பிவிட்டு தன்னை நொந்து கொண்டான். எனக்காக தமிழை எழுதப்படிக்க தொடங்கிவிட்ட லக்கமாலியின் காதலின் வலிமையையும் கட்டிபோட்டு கடலுக்க போட்டாலும் சுத்தமாக சிங்களம் பேச வராதே எனக்கு... சீ..நான் மட்டும் ஏன் இப்படி..? என புறுபுறுத்துக் கொண்டவன். சரிசரி கல்யாணத்துக்குப் பிறகு லக்மாலியோட பேச பழக எல்லாம் சரியாகும் என தனக்கு தானே சமாதானப்படுத்திக் கொண்டு சார்ஜ் இறங்கி விட்ட போனை பவுத்திரமாக பொக்கட்டுக்குள் வைத்தான்.

நகுலனுக்கு யாழ்ப்பாணத்தை விட்டு வெளி உலகம் தெரியாது. அவன் சாதாரண ஒரு ஏழ்மைக் குடும்பத்தில் தான் பிறந்தவன். தான் படிக்காவிட்டாலும் தன் மகன் படிக்க வேணும் என்ற நகுலனின் தாய் கனகமணியின் வைராக்கியம் தோற்றுப்போகவில்லை. கம்பேசுவரைக்கும் படிக்க வைக்கும் வரை நகுலனின் தாய் வீட்டில் இருந்தவாறு ஆடு, மாடு, கோழி வளர்த்துதான் படிக்க வைச்சவா. தன்ர பிள்ளையும் ஒரு அரசாங்க வேலை பார்க்கணும் அதை கண் குளிர பார்த்திட்டுதான் சாகணும் என்ற ஒரே ஒரு ஏக்கம்தான் அவள் மனசில் இருந்தது. நகுலனும் அதற்கேற்றாற் போல் தாயோடு பாசமாகத்தான் இருந்தான். தன் தாய்க்காக உயிரைக் கூட பணயம் வைக்க அவன் யோசிப்பதில்லை. எல்லா அம்மாக்களும் போல நகுலனின் அம்மா கனகமணியும் தன்பிள்ளைக்கும் பெண்ணு பார்க்க தொடங்கிவிட்டாள்.

"இப்ப என்ன அவசரம்...இன்னும்வேலை கிடைக்கேல, கிடைச்சாப்பிறகு பார்ப்பம்" என நகுலன் தட்டிக்கழித்துக் கொண்டிருந்தான். "உங்க பதினெட்டு வயசிலையெல்லாம் குழந்தை குட்டிகளோடு திரியுதுகள். நீ என்னென்னா இருபத்தெட்டு கடந்தும் சின்னப் பிள்ளைக்கு நடிச்சுக்கொண்டு திரியுறாய்" என செல்லமா கோவிச்சுக்கொண்டு தன்மகன் பக்கம் இருக்கும் வேலையில்லை என்ற நியாயத்தையும் ஏற்றுக்கொண்டு அமைதியாகி விடுவாள் கனகமணி.

நகுலன் கம்பேசு முடிந்து மூன்று வருடங்களாகுது இன்னும் வேலை கிடைக்கேலை வார அரசாங்கமும் தேர்தல் வரெக்க ஒருக்கா சொல்லுவினம் எல்லா பட்டதாரிகளுக்கும் வேலை கொடுக்கிறம் எண்டு. பிறகு எந்த கதையுமில்லை நகுலன் போகாத ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதங்கள் இல்லை. அப்படியொரு ஆர்ப்பாட்டத்துக்கு கொழும்புக்குப் போகேக்கேதான் பொலிஸ் கண்ணீர்ப் புகைக்குண்டு அடிச்சு ஆர்ப்பாட்டம் செய்த பட்டதாரிகளை கலைக்கும்போதுதான் கலைந்துபோய் பாதை தெரியாமல் தனித்த நகுலனுக்கு உதவி செய்து அறிமுகமானவள்தான் இந்த லக்மாலி. இவளும் ஒரு பட்டதாரிதான். பேராதனை கம்பேசில படித்தவள். தமிழ் கொஞ்சம் தெரியும். இதால நகுலனோட பேசிக் கொண்டாள். இவளின் உதவியும் பக்குவமான பேச்சும் இவளோடு நட்புத் தொடர விரும்பிய நகுலன்தன் முகப்புத்தக விபரத்தை மட்டும் கொடுத்து விட்டு பயத்தோடு அந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிட்டான். அவனின் நட்பு முகப்புத்தகத்தில் தொடர்ந்தது. ஓரிரு வருடம் கழிந்து தொலைபேசி குறுஞ்செய்திகளுக்கும் இடம் மாறியது. இது நட்பின் அடுத்த கட்ட நகர்வுக்கு அடித்தளமிட்டது.

நகுலன் சிங்களம் கற்கத்தொடங்கினான்.

லக்மாலி தமிழ் புத்தகங்களை தேடத்தொடங்கினாள். இருவரும் ஒருவருக்கொருவர் தம் இன்ப துன்பங்களை பகிரத் தொடங்கினார்கள். அதன்பின் மூன்று வருடங் களில் அவர்களுக்கு வேலையும் கிடைத்துவிட்டது. இதனால் தொலைபேசியில் குறுஞ்செய்தி குறைந்ததே தவிர அவர்கள் இருவருக்குமான ஈடுபாடு குறைய வில்லை. இருளும் பொழுதுகளில் குறுஞ்செய்திகளுக் காக இருவரும் காத்திருக்கத் தொடங்கினார்கள். காலப்போக்கில் விடியும் பொழுதில் இரவுக்காகவும் காத்திருந்தனர். இந்த நேரத்தில்தான் நகுலன் பயங் கொண்டான். தன்னை அறியாமல் லக்மாலியை காதலிப்பதாக உணர்ந்தான். அதனால் தாய்க்குத் துரோகம் இழைத்துவிடுவேனோ எனவும் பயந்தவன் தன்னைக் கட்டுப்படுத்தி ஓர் வட்டத்தில் நின்று கொண்டாலும் நான்காவது வருடத்தில் லக்மாலி கூறி விட்டாள் "நான் உன்னைக் காதலிக்கிறேன், இல்லை உன் நினைப்போடு வாழ்ந்து இறந்து விடுகிறேன்" என்று, பல தடவை எடுத்துக்கூறினான் நகுலன் "நான் தமிழ் நீ சிங்களம், சரியா பேச முடியாது அதோட சிங்கள ஏரியாவில நான் இருந்து அரசாங்க வேலை பாக்கிறதும் சிரமம், அம்மா அப்பாக்கு நான் ஒரே பிள்ளை அவர்களை நான்தான் பார்க்கனும், யாழ்ப் பாணத்தை தாண்டி வெளியில வரமுடியாது, உங்கட கலாசாரம், சமய அனுட்டானங்கள் வேற அதோட பிறக்கிற பிள்ளைகளுக்கும் இரண்டுங்கெட்டான் நிலைதான். அதான் லக்மாலி நீ நல்லா யோசி" எண்டு புத்திமதி சொல்லிப்பார்த்தான்.

"ஏண்டா என்னைப்பிடிக்கலையா உனக்கு? நான் தமிழ் ஏரியால வந்து இருப்பன், எங்கட பிள்ளை கள் தமிழா வளரட்டும் எனக்குப் பரவாயில்லை, LTTE பொலிஸ்ல பொறுப்பாளராக இருந்த நடேசன் சிங்கள பொம்புள்ளையைத்தான் கலியாணம் செய்தவர், உங்கட அன்ரன் பாலசிங்கம் ஒரு வெள்ளைக் காரியைத்தான் கலியாணம் செய்தவர், எங்கட வீட்டுக்குப் பக்கதில ஒரு அண்ணா கொழும்பு வெள்ளவத்தைல ஒரு தமிழ் அக்காவ லவ் பண்ணிதான் கலியாணம் செய்தவர். அவையெல்லாம் சந்தோசமாத் தானே இருக்கினம். நீ மட்டும் பயந்து சாகிறியே, தமிழ் ஆம்பிலயல் வீரமான வங்க..குடும்பத்தை நல்லா வச்சுப்பார்ப்பினம் எண்டு எங்கட அப்பா ஆமியில இருக்கிற நேரம் சொன்னவர். நானும் அக்காவும் சின்னபிள்ளைகளா இருந்தாலும் அப்ப சொன்னது இப்பவும் ஞாபகம் இருக்கு. அதான் முடிவு பண்ணான் கலியாணம் செய்தா ஒரு தமிழனை தான் செய்யனு மெண்டு, உன்னைப்பார்த்தும் எனக்கு பிடிச்சிருந்தது. நீ பொம்புள்ள பிள்ளைகளைக்கண்டு விலகிவிலகிப் போன போது உன்ர சுபாபம் பிடிச் சிருந்தது. அதான் லவ் பண்ணினான்" இப்படி அவளிடம் இருந்துவந்த காதல் வார்த்தைகளுக்கு புதைஞ்சுதான் போட்டான். நகுலனும் சாதாரண மனிதன் தானே அவனுக்கும் ஒரு மனசு அதில் ஆசாபாசங்கள் இருக்குத் தானே தன்னை தாயிற்கு பிறகுநேசிக்கின்ற ஓர் பெண்ணின் அன்பை அவனால் எப்படி நிராகரிக்க முடியும்.

லக்மாலி நகுலன் இருவரும் தாம் திருமணம் செய்ய வேண்டும் அதுவரைக்கும் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். மூன்று மாதங்களோ அல்லது இருமாதங்களிற்கு ஒரு தடவை ஒரு பொது இடத்தில் ஒரு மணித்தியாலம் சந்தித்துவிட்டு உணவருந்தி பிரிந்து விடுவார்கள். என்றோ ஒருநாள் தம் காதலைப் பெற்றோர் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு, ஆனால் இருவரும் பெற்றோருக்கு துரோகம் இழைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொள்ள ஒரு தடவைகூட நினைத்ததில்லை. இல்லை காலம் பூராகவும் நினைப்போடும் இந்த பயங்கரமான சமூகத்தோடும் வாழ்ந்துவிட்டு மரணித்துவிடுவோம் என்ற உறுதியோடு அவர்களின் காதல் நகர்ந்தது.

ஒவ்வொரு தடவையும் லக்மாலியை சந்திக்கும் போது தனது தாய்க்கு துரோகம் செய்வதுதான் அவன் மனதுக்கு வந்து போகும். இப்பகூட பாணந்துறை ரயில் நிலையத்தில் இறங்கியவன் காதலி லக்மாலியை தேடாமல் "இப்ப ஒன்பது மணியாகிப்போட்டுது அம்மா இப்ப சாப்பாடு செய்துபோட்டு ஆடு, மாடுகளுக்கு புல்லுப்புடுங்க தோட்டப்பக்கம் போயிருப்பார்." என நினைத்துக்கொண்டு தன்னுடைய துரோகத்தை நோவதா இல்லை, தன் தாய் கனகமணிக்கு உண்மையாக இருந்து தன்னை உயிராக காதலிக்கும் லக்மாலியை மறந்துவிட்டு சாத்திரங்கள் சம்பிரதாயங்களுக்கு வேசம் போட்டு அம்மா பார்த்த பெண்ணை கலியாணம் செய்து கொள்வதா…? எப்படிப்பார்தாலும் யாரோ ஒருவருக்கு துரோகம் இழைப்பதென்பது உறுதியாகி விட்டது" என குழம்பிப் போனவன் "இந்த உலகத்தில எல்லாரையும் திருப்திப்படுத்த முடியாது. திருப்திபடுத் துற மாதிரி நீண்ட காலம் நடிக்க முடியாது என்றோ ஒருநாள் வேசம் கலைக்கப்பட்டுத்தானே ஆகவேண்டும் என்றாலும் காலம்தான் தக்க மருந்து கொஞ்சக் காலம் பொறுத்திருந்துதான் பார்போமே ஏதோ ஒரு மாற்றம் உண்டாகும் அது கெட்டதாகவோ, நல்லதாகவோ அமையலாம் ..ம்ம்ம்ம்…..பார்ப்பம்" என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு இருந்த நகுலனுக்கு கண்கள் இருட்டிக்கொள்ள கைகால்கள் சோர்ந்து போக உடல்முழுவதும் வியர்த்துக்கொட்ட ஏதோ நடக்கப் போகுது என பயத்தோடு ரயில் நிலையத்தில் இருந்த மரவாங்கில் தட்டுத்தடுமாறி அமர்ந்து கொண்டு நிலைமையை சுதாகரித்துக்கொண்டு பையில் இருந்த தண்ணீர்ப்போத்தலை எடுக்க முற்பட்டவன் அப்படியே வாங்கில் மயக்கமுற்று சாய்ந்து விட்டான்.

தோட்டத்துக்கு போய்வந்த கனகமணிக்கு என்றும் இல்லாதவாறு களைப்பாகவும் சோர்வாகவும் இருந்தது மனக்கண்ணில் தன் ஆசைமகன் நகுலனின் விம்பம் விழுந்து மறைந்தது. "என்ர பிள்ளைக்கு ஏதோ நடந்து போட்டுது போல கிடக்கு, இஞ்சரப்பா ஒருக்கா தம்பிக்கு போன் பண்ணுங்கோ" என தலைச்சுற்றில படுத்துக்கிடந்த பிறசர் நோயாளியான தன் கணவருக்கு கட்டளையிட்டாள். "இந்த வீட்டுல மனுசர் வருத்தம் என்டாலும் நிம்மதியா இருக்கேலாது.." என நகுலனின் அப்பா நச்சரித்துக்கொண்டு சார்ஜில கிடந்த போனை ஞாபக மறதியால வீடுபூராத்தேடி கடைசில மேசையில கண்டெடுத்தார். இந்த போன் ஒரு இடத்தில இருக்காது" என பேசிக்கொண்டு நகுலனுக்கு பல தடவை கோல் எடுக்கப்பட்டதன் பின் பதிலளிக்கப்பட்டது. ஆனால் எதிர்முனை உரையாடல் நகுலனின் அப்பாக்கு புரிய வில்லை. தமிழைத்தவிர வேறெந்த மொழியிலும்

பரீட்சையம் இல்லாததால் அவருக்கு புரிந்திருக்க வாய்ப்பில்லை. எதிர்முனையில் சிங்களத்தில் உரையாடியவர் போனை வேறொருவருக்கு கைமாற்ற விசயம் பரிமாறப்பட்டது. "இந்த போன் வைச்சிருந்தவர் உங்களுக்கு யாரு.? அது..அது..என்ர மகன், ஓம் அவர் இப்ப பாணந்துறை கொஸ்பிற்ரல இருக்கார்..., ஐயோ என்ர மகனுக்கு என்ன நடந்தது??? பதட்டத்தில் போன் கைநழுவி கீழே விழுந்தது. "உங்களுக்கு வரவர பதட்டம் கூடிப்போச்சு" வழமைபோல் கனகமணி புருசனைக் கடிந்து கொண்டாள். "இல்லையடி தம்பி பாணந்துறை ஆஸ்பத்திரியிலையாமெண்டு யாரோ சொல்லினம்", " ஐயோ என்ர மகனுக்கு என்ன நடந்தது, ஏன் அவன் பாணந்துறைக்குப் போனவன்...?, பாணந்துறை எங்க இருக்கு..? இவை எல்லா கேள்விகளுக்கும் "அது சிங்கள நாட்டுல கொழும்புப் பக்கம் இருக்க வேணும்" என்ற பதிலை மட்டும் சொல்ல முடிந்தது. ஆனால் தம்பி ஏன் பாணந்தறைக்கு போனான் என்ற கேள்விக்கான பதில் மட்டும் புதிராக இருந்தது.

"மசமசவெண்டு நிக்காம ஓடிப்போய் கிடாய் குடுத்த காசு சுந்தரம் இண்டைக்குதான் தாறனெண்டு சொன்னவன் போய் வாங்கிக் கொண்டு வாங்கோ ஒருக்கா" கதையோடு வீட்டுக்குள் புகுந்தவள் துணிமணி மடிக்க தொடங்கினாள் பாணந்துறைக்கு போற அவசரத்தில, ஆனால் தம்பி ஏன் பாணந்துறைக்கு போனான்? என்ற கேள்வி மட்டும் நிமிடத்துக்கொரு தடவை சுழன்றுகொண்டிருந்தது. "என்ர பிள்ளை மற்ற பிள்ளைகள் மாதிரியோ? ஏதோ காரணத்தோட தான் போயிருக்கும், இல்ல ஒப்பிசால தான் அலுவலா போயிருப்பான், என்ன அவசரம் போய் கேட்போம்" ஆயிரம் ஆறுதல் தனக்குதானே சொல்லிப்பார்த்தவள் ஏதோ ஏமாந்த உணர்வு...பிள்ளைகளின் ஆசைகள் நிறைவேற வேண்டும் அவர்கள் சந்தோசமாக இருக்க வேண்டுமெண்டா எந்த தாயும் எத்தனை தடவையும் தோற்றுக்கொண்டு வாழவும் செத்துக்கொண்டு வாழவும் பின்னிப்பதில்லை. நகுலனின் தாய் மட்டும் விதிவிலக்கா, உதிரத்தை உழைப்பாக்கி வளர்த்தவளுக்கு பிள்ளையின் துரோகம் வேல்கொண்டு கிழித்து விடவா போகின்றது. "அண்ணே பாணந்துறைக்கு இரண்டு டிக்கற்" பஸ் புறப்படத்தயாராகின்றது. நகுலனின் வாழ்க்கை என்னும் பேரூந்தும்தான்...

கதை இல்லாக்கதைகள் 01

# ஸ்பீக்கர் பிடிச்சால் நல்லது



அந்தச் சனசமூக நிலையத்தைச்சேர்ந்த இளைஞர்கள் கலை, இலக்கிய, கலாசார நிகழ்வுகளை நடாத்துவதில் ஆர்வமிக்கவர்களாக இருந்தார்கள். ஆண்டுக்கொருமுறை பெரியளவில் முத்தமிழ் விழா நடாத்துவதோடு நிற்காமல் மாதந்தோறும் பௌர்ணமி விழா என்ற பெயரில் ஊர் மட்டத்தில் நிலைய முன்றலில் நிகழ்ச்சிகளை நடாத்தி வந்தார்கள்.

வெளியூரிலிருந்து விஷேடமாக ஒருவரை ஒரு தொனிப்பொருளில் உரையாற்ற அழைப்பார்கள். கவியரங்கம், பட்டிமன்றம், சிறுவர்களுக்கான நிகழ்வுகள் போன்றன நடைபெறும். இரவு எட்டு மணிக்குத் தொடங்கி 9.30மணிக்குள் நிகழ்வுகள் நிறைவுபெற்று விடும். நிறைவின் பின் சிலர் வீடுகளுக்குச் சென்று விடுவார்கள். வேறு சிலர் குழுக்குழுவாக ஆங்காங்கே நின்று கதைத்து நிகழ்வுகளின் தரம், சரி பிழை, மற்றும் பலதும் பத்தையும் கதைத்து விட்டு வீடுபோய் சேர்வார்கள். மாதத்தில் ஒருமுறை ஒரு பொன் மாலைப்பொழுதாக -ஒரு ஒன்று கூடலாக அந்த பௌர்ணமி இரவு மகிழ்ச்சியாகக் கழிந்துவிடும்.

மேலும் சிறப்பாக இருக்கட்டுமே என்று பேசித்தீர்மானித்து இம்முறை ஒலிபெருக்கியை வாடகைக்குப்பிடித்து நிகழ்ச்சியை நடத்தினார்கள். மேலும் அதிகளவான சனத்தை எதிர்பார்த்தார்கள்.

வழமையாக நூற்றுக்கு குறையாமல் ஊர்ச்சனங்கள் கலந்து கொள்கின்ற நிகழ்வுக்கு இம்முறை எண்ணி முப்பத்தேழுபேர் மட்டுமே வந்து கலந்து கொண்டார்கள். இளைஞர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை காரணம் தெரியவில்லை.

இரத்தினம் வாத்தியார் சொன்னார்

"அடே தம்பிகளா..! இந்தச் சின்ன நிகழ்ச்சிக்கு நீங்கள் ஸ்பீக்கர் பிடிச்சதுதான் பிழைச்சுப்போச்சு. நீங்கள் கவிதை வாசிக்கிறது. பேசுறது எல்லாம் தங்கட வீட்டில இருக்கவே கேட்குதுதானே பிறகேன் வாசிகசாலையடிக்கு மினக்கெட்டுபோவான் எண்டு சனங்களெல்லாம் தங்கடை தங்கடை வீட்டிலை இருந்தே கேட்டுக்கொண்டு இருந்திட்டுதுகள் அவ்வளவுதான்."

கொற்றை பி.கிருஷ்ணானந்தன்

**வ**ழமைபோல் இரவு எட்டு மணிக்கு வகுப்பு முடிந்து எல்லோரும் வெளியே வந்தபோது மேலும் ஒரு பதினைந்து நிமிடமளவு தாண்டியிருக்க வேண்டும்.

மழை தூறாதா... குளிர்க்காற்று வீசாத... வானம் இருண்டு போயிருக்காத ஒரு கால நிலை நிலவ வேண்டுமென்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பு. ஏனென்றால் ஓரிருவரைத்தவிர மற்ற எல்லோருமே மோட்டார் சைக்கிள் பயணிகள்.

அவர்கள் இருவரும் பைக்கிள் ஏறித் தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

இருவரும் ஒரே ஊர்ப்பகுதி. ரோட் பஸ்ஸில் பயணிப்பதாயின் இரண்டு பஸ் மாற வேண்டும். கொஞ்சம் நடக்கவும் வேண்டும். இரவுப் பயணம் போய்ச்சேரும் வரை மனப்பதற்றம் வேறு.

வாரம் ஒரு நாள் வகுப்பு என்ற வகையில் மூன்று வகுப்புக்கள் கடந்த பின்னர் தான் அந்தப் பாட நெறியில் இணைந்து நாற்பது பேரதும் பெயர் - விபரங்கள் அவர்களது கைகளுக்கு எட்டியது. அதை அவதானித்த போதுதான் பைக்கின் பின்னால் அமர்ந்திருவருக்கு தமது ஊர்ப்பகுதியை சேர்ந்த இன்னுமொருவன் சம்பந்தப்பட்டிருப்பது தெரிய வந்தது. இப்படித்தான் அவர்களிடையே தொடர்பு ஏற்பட்டு பின்பு நட்பாக மலர்ந்தது.

"நீங்க எப்படி வாரீங்க?"

"பைக்லதான்... நீங்க"

"ரோட் பஸ்"

" இனி என்னோட வாங்க எனக்கும் உதவியா இருக்கும்"

"அதவிட எனக்குதான் பெரிய உதவி. போக்குவரத்துப் பிரச்சினால் பேசாம கோஸ விட்டு விடுவோமா என்று கூட யோசித்தன்"

"இனிப் பிரச்சினயே இல்ல. ஒரு ஹெல் மெட் மாத்திரம் தேடிக்கொண்டால் போதும்"

"ஹெல்மெட்டா...?"

உண்மையில் அவனுக்கு தலைக்கவசமொன்று இரவல் வாங்கக்கூட யாருமில்லை.

"பரவாயில்லை நானே கொண்டு வாரன்"

சில வாரங்கள் கடந்த பின்பு ஒரு நாள்...

" இங்க பைக் சும்மாவா ஓடுது செலிவில பாதி..."

"அப்படியெல்லாம் நீ யோசிக்கிறேன்னா இனி என்னோட வராதே"

இப்படித்தான் அவர்களது நெருக்கம் வலுப்பெற்றது.

வாகன நெருக்கடிக்குள் பைக் சீராக ஓடிக் கொண்டிருந்தது. எப்படியும் ஒன்பது மணியிருக்கும் இன்னும் பிரதான வீதிக்கு வந்து விடவில்லை.

அவர்கள் செல்லும் தனியார் கற்கை நிலையம் துணை மருத்துவ சேவை சார்ந்த பாடநெறிகளைக் கொண்டது குறைந்த பட்சம் விஞ்ஞானத்துறையில் உயர்தரம் சித்தி பெற்றிருக்க வேண்டும் ஒரு தடவைக்கு எந்தப் பாட நெறிக்கும் நாற்பது பேருக்கு மேல் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. எல்லா வசதிகளையும் கொண்ட நாற்பது பேரை உள்ளடக்கக் கூடிய மூன்று விரிவுரைக் கூடங்கள் இருக்கின்றன. செயன் முறை ஆய்வுகூடம், கணினிப்பிரிவு, நூலகம் முதலான வசதிகளுமுண்டு இதற்கேற்ப ஒழுக்கக் கோவையும் பண அறவீடும் உச்சம். இந்நிறுவனத்தின் துறைசார் சான்றிதழ்கள் அரச அங்கீகாரம் பெற்றவை.

பைக் ஒருவாறாகப் பிரதான வீதியை வந்தடைந்துவிட்டது. நவீன மயப்படுத்தப்பட்ட பாதையாக இருந்ததால், எத்தனை வாகனம் ஓடினாலும் தைரியமாகச் செல்ல இயலும் இன்னும் இருபது கிலோ மீற்றராவது செல்ல வேண்டும்.

மருந்தியல் துறையிலான அவர்களது பாட நெறி ஓராண்டு காலத்தைக் கொண்டது. நிறுவனத்தின் சான்றிதழுக்கு மேலாக அரச மருத்துவப் பரீட்சை ஒன்றுக்கும் முகம் கொடுக்க வேண்டும் அதையும் தாண்டிவிட்டால் வருமானத்திற்கு பல்வேறு வழிகள் திறந்த மாதிரிதான்.

இதற்கிடையில் தான் நாட்டில் பெரிய அமளிதுமளி ஏற்பட்டு எல்லாமே ஸ்தம்பித்துப் போய் விட்ட நிலை. எவருமே எதிர்பாராத இக்கட்டு. தேவால யங்கள் உல்லாச ஹோட்டல்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் அவலமும் சோகமும் அநியாயமும் சொல்லுந்தரமன்று. இதைத் தொடர்ந்து மெல்ல மெல்ல உருவான பன்முகம் கொண்ட மறுதாக்குதலால் ஒரு சாரார் கொல்லாமல் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தனர். எல்லாவற்றிலுமே குறை காண்பதும், குற்றம் சாட்டுவதுமே வேலையாகிப் போய் விட்டது. நடுநிலை நியாயங்கள் மௌனவிரதம் பூண்டிருந்தன.

இதனால் இரண்டு வாரங்களாக பாட நெறிகள் எதுவும் நடைபெறவில்லை. இருவரும் ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ளவுமில்லை. இரண்டும் கெட்டான் நிலை.

கைபேசி சும்மா இருக்குமா? ஒலித்தது.

"ஹாலோ நாளக்கி கிளாஸ் என்ன"?

"என்னதான் நடந்தாலும் கிளாஸ் கட்பண்ண முடியாது போவோம்."

# இருப்பதும் இல்லாததும்

## திக்குவல்லை கமால்



பிரச்சினையின் பின் முதற் தடவையாக சென்று வகுப்பு முடிந்து வரும் சந்தர்ப்பம் தான் இது. ஆனால் நாட்டு நடப்பு பற்றி அவர்கள் எதுவுமே கதைத்துக் கொள்ளவில்லை. அப்படிக் கதைக்க நேரம் வாய்க்கவுமில்லை.

ஒரு வித பதற்றமும் பயமும் எல்லாத்தரப் பினரையும் துரத்திக் கொண்டிருந்தது. ஒருவரை யொருவர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலை. எல்லோருமே ஏதோவொரு செய்தி ஊடகத்தைப் பார்க்கும் நிர்ப்பந்தம். என்ன நடந்துவிடுமோவென்ற தூக்க மற்ற இரவுகள். காவி உடைகளின் காவல். நடை அவ்வப்போது ஆயுதமேந்திய ராணுவ ஊர்திகளின் உறுமல். வீடுவீடாகத் தேடல். வாகனங்களை இடை நிறுத்திச் சோதனை. அவசரகாலச் சட்டம். திடீர் திடி ரென்று ஊரடங்கு அறிவிப்பு. கைதுகள்... கைதுகள்.

அப்பாடா என்று ஆறுதல். தப்பி வந்துவிட்ட பெருமிதம் பத்து மணிக்கும் ஐந்தோ பத்தோ நிமிடங்கள் இருக்கும்போது இன்றும் ஊரை அடைந்து விடலாம். பிரச்சினைக்குப்பின் முதற் பயணம் என்பதாலோ என்னவோ பலமுறை கைபேசி ஒலித்தது வீட்டிலிருந்து தான்!

வீட்டை அடைந்து விட்டது போன்ற உணர்வோடு இருவரும் ஊர்வீதிக்குத் திரும்பி அரை நிமிடம் கூடக் கழியவில்லை. கும்மிருட்டைத்தோற்று விக்கும் பெருமரங்கள் அடர்ந்த இடம் அது. இருந்தும் மரக்கிளைக்களுக்கூடாக நிலவு வானத்தின் மெல்லொளிக்கசிவு.

ஒரு விசில் சத்தம் கூடவே "நிப்பாட்டு" என்ற குரல்.

இரண்டு மூன்று காக்கிச் சட்டைகள் ஆயதங்களோடு...

"இந்த இருட்டுக்குள்ள... ஹெல்மட்டும் போட்டிருக்கன்... அதுக்குள்ள என்ற குஞ்சு தாடி தெரிந்து விட்டதா...?" என்று பயத்தோடுதான் அவன் பைக்கை நிறுத்தினான்.

நண்பர்கள் இருவரும் இறங்கி நின்றனர். இருவருக்கும் சுமாராக இருபத்தைந்து வருட இளவயது இருவருமே தலைக்கவசம் அணிந்திருந்தனர்.

"எங்கிருந்து வாரீங்க?" டோர்ச் அடித்து பைக் இலக்கத்தைப் பார்த்தபடி ஒருவன் கேட்டான்.

அவர்கள் பொலிஸா? ஆமியா? என்று இருவருக்கும் தெரியவில்லை மெல்லிய கிடுகிடுப்பு காரணமில்லாமல் காரியம் நடக்கும் காலமல்லவா?

"கிளாஸ் போயிட்டு வாறம்."

"பொய் சொல்லாதீங்க. இந்தப் பத்துமணிக்கு என்ன கிளாஸ்?"

இருவரும் கற்கை நிலைய அடையாள அட்டையை வெளியெடுத்தனர்.

ஓட்டி வந்தவனின் அட்டையைப் பார்த்தவன் இருவரது முகங்களையும் மாறிமாறிப் பார்த்தான் முகங்களில் சாந்தம் தெரிந்ததோ என்னவோ!

"பையில என்ன இருக்கு?"

ஒருவனிடம் ஒரு குறிப்புப் புத்தகம் மாத்திரமே இருந்தது. அடுத்தவனிடம் மனித இதயத்தின் உருவ உள்ளமைப்பைத் தாங்கிய ஆங்கிலச் சஞ்சிகை ஒன்றிருந்தது. அவர்கள் பிழையானவர்கள் அல்ல என்பது உறுதியாகிவிட்டது போலும் இருந்தும் இன்று ஒருவர் கூட மாட்டிக்கொள்ளவில்லையே என்ற ஆதங்கம்.

"லைசன்ஸ் இன்சூரன்ஸ் எல்லாம் எடுங்கோ" அப்படி இலேசாக விடமாட்டோம் என்பது போல் அடுத்த கட்டத்திற்கு வந்தான்.

தோளில் தொங்கிய ஆயுதத்தைச் சரிசெய்தபடி மூன்றாமவன் அவர்களையும் பைக்கையும் ஒரு சுற்றுச் சுற்றி வந்தான்.

எல்லாம் சரியாகவே இருந்தன. இருந்தும் அந்தப் பெயரை அவன் மனதுக்குள்ளால் உச்சரித்துப் பார்த்தான்.

இந்த எல்லா விசாரிப்புகளுக்குப் பின்னரும் இரண்டாவது காக்கிக்கு இன்னொரு ஐடியா வந்தது போலும்!

"ரெண்டு பேரும் ஐடின்டிய எடுங்க"

மூன்றாம் காக்கியின் குரல் யார் விட்டாலும் நான் விடமாட்டேன் என்று சற்று கடுமையாகவே விழுந்தது.

"டிரைவிங் லைசன்ஸ் இருக்குத் தானே போதும்! பரவாயில்லை எதுக்கும் கொண்டு போவம் என்று அறிமுக அட்டையையும் பேர்ஸில் திணித்துக் கொண்டான் அவன். நல்லதாய் போய் விட்டது எடுத்து நீட்டினான்.

அவனது முகத்துக்கு டோர்ச் அடித்து விட்டு ஐஸீயைப் பார்த்தான் நிழலும் நியமும் ஒன்று தான். சற்றே சிரமப்பட்டு மற்றவர்களுக்கும் கேட்கக்கூடிய தாக வாசித்தான்.

"செய்யது முகம்மது அபூ ஐஸ்வான்"

அட்டையைக் கொடுத்துவிட்டு அடுத்த வனிடம் வேண்டினான். முன்பு போல் நிழலையும் நியத்தையும் முதலில் சரிபார்த்துக்கொண்டான். பின்பு பெயரை வாசிப்பதில் அவனுக்கு சிரமமிருக்கவில்லை.

"பியசேனலாகே சந்ரதாஸ"

சில கணங்கள் கனத்த அமைதி.

"சரி ரெண்டு பேரும் போங்க"

எந்தக் காக்கியென்று தெரியவில்லை. அனுமதி கிடைத்துவிட்டது.

நீண்ட காலம் ஜெயிலுக்குள்ளிருந்து மீண்டது போன்ற சுதந்திரத்துடன் இருவரும் சைக்களில் ஏறி ஸ்டாட் செய்தனர்.

இன்னும் ஒரு கிலோ மீற்றர் சென்றால் சந்ரதாஸவின் வீடும், மேலும் ஒரு கிலோ மீற்றர் சென்றால் ஆஸாத்புரவும் வந்துவிடும்.

***

மூன்று காக்கிச்சட்டைக்கார்களும் ஒரு வார்த்தைக்கு வக்கின்றி ஒரு சில கணங்கள் இடிந்துபோய் நின்றனர்.

மனதுக்குள்ளிருந்து ஏதோ சூழன்று சூழன்று வெளிப்பரவி அவர்களை அள்ளிச் செல்லப் போவது போன்ற பிரமை.

அவர்களில் ஒருவன் தாழ்ந்த குரலில் "இருக்கிற ஒன்ற இல்லாமல் பண்றோம் போல எனக்குத் தெரியிது" என்றான்.

" ம்... இல்லாத ஒன்ற உருவாக்கப் போறோம் போல எனக்குத் தெரியிது" - இது இரண்டாமவன்"

"உண்ம உண்ம" - மூன்றாம் குரல்

இலக்கியக் கூட்டங்கள் அவ்வப்போது நடைபெறுகின்றன. 25 – 30 பேர், சிலவேளை சுமார் 50 – 60 பேர்வரை வருகை தருகின்றனர். ஆர்வமுள்ளோரின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. ஒவ்வொருவருக்கும் தேர்வு செய்யும் உரிமை உள்ளது; விருப்ப வேறுபாடுகள், வேறு அலுவல்கள், நேரப் பிரச்சினை போன்றவையும் வருகையைத் தீர்மானிப்பதில் தாக்கம் செலுத்துகின்றன. ஆனால், "அந்த மூத்த எழுத்தாளர் கூட்டங்களுக்கு வருவார்; இந்த மூத்த எழுத்தாளர் வருவதில்லை" எனக் குற்றப் பத்திரிகை வாசித்த 'அரசியல் பத்தி எழுத்தாளர்'களையும், நான் சென்ற பல கூட்டங்களில் காணவில்லை! நேரத்துக்குக் கூட்டங்கள் தொடங்குவதில்லை; பேச்சாளரில் பலர் பொறுப்புடன் உரையாற்றுவதுமில்லை. இப்படித்தான் சில மாதங்களின் முன் மாகாணப் பண்பாட்டுத் திணைக்களம் ஒழுங்குசெய்த மூன்று நூல்களின் வெளியீட்டுக் கூட்டத்துக்குச் சென்றிருந்தேன். குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு ஒரு மணித்தியாலம் பிந்தியே நிகழ்ச்சி ஆரம்பமாகியது; மண்டபத்தில் நூற்றுக் கணக்கானோர் சலிப்புடன் காத்திருந்தனர். பிரதம விருந்தினரான உயர் அலுவலர் வரப்பிந்தியமையே காரணம்; அவர் தனது உத்தியோகக் கடமையைத் 'தவிர்க்க வியலாத் தாமதத்'துக்குக் காரணமாகத் தெரிவித்தார். எதிர்பாராமல் நிகழும் இவ்வாறான சூழலில் – பார்வையாளர் பாதிப்புறா வகையில், பொறுப்பான மற்றொருவர் நிகழ்ச்சியை ஆரம்பித்து நடத்துவதே முறையானது; பிந்தி வருபவர் நிகழ்வில் பிறகு இணைந்து கொள்ளலாம்.

இதே கூட்டத்தில் கலைச்செல்வி கதைகள் (198 கதைகள்) நூல் பற்றிப் பேசிய எழுத்தாளர், 12 நிமிடங்கள் பேசினார்; ஆனால் நூல்பற்றிப் பேசியதோ நான்கு நிமிடங்கள்! ஏனைய 8 நிமிடங்கள் அவர் பேசியது, கலைச்செல்வி இதழுக்கும் தனக்குமான தொடர்பு பற்றி! அடிப்படை விடயம் முக்கியம் பெறாமல் நழுவவிடப் பட்டமை ஏமாற்றம் தந்தது!

***

# பனைமீன் நாடன் பக்கம் - 6

26. 10. 2019 சனிக்கிழமை காலை, முன்னாள் போராளியான வெற்றிச்செல்வியின் குப்பி சிறுகதைத் தொகுதியின் அறிமுக நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. மழைச் சூழலில் சுமார் 35 பேர்வரை வருகை தந்தனர். தலைவரும் நூல்பற்றி உரையாற்றிய ஏனைய இருவரும், விடயச் செறிவுடன் உணர்வுபூர்வமான கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்தினர். நூல்பற்றியும் ஆசிரியர் பற்றியும் தெளிவான சித்திரம் பேச்சுக்களால் வரையப்பட்டது!; இத்தனைக்கும் இவர்கள், இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர்களல்லர்! இறுதியில், பார்வையாளரின் கருத்து முன்வைப்புக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. குறிப்பாக முன்னாள் போராளிகள் சிலர் – ஆசிரியரின் ஆளுமை, இலக்கியச் செயற்பாடுகள், அவருக்கும் தமக்குமிடையிலான ஊடாட்டம் பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்தனர். திரிக்கப்பட்டும் மறக்கடிக்கப் பட்டும் வரும் "முந்தியகாலச் சூழலின் அனுபவப் பகிர்வுகள், நெஞ்சைத் தொட்டன! எல்லாப் பகிர்வுகளும் இதயத்தின் ஆழத்திலிருந்து உணர்வுபூர்வமாய், எளிமையுடன் வெளிப்பட்டன. நூலாசிரியரின் சுருக்கமான ஏற்புரை, தனது படைப்பனுபவத்தையும் வலிகளையும் சந்தோஷத்தையும் நன்றியையும் பகிர்வதாக அமைந்தது. "நினைவுகள் சுமந்த / கனவுகள் கலந்த / தைரியங்கள் நிறைந்த /கதைகளின் தொகுப்பு." என்பது அவரது வரிகள்!



ஏற்கெனவே 9 . 00 – 11. 00 மணி வரை என அறிவித்திருந்தாலும், 11. 10 இற்கு கூட்டம் நிறைவுற்றது. சிறப்பான பேச்சுக்கள், பார்வையாளர் கருத்துப் பகிர்வு, நேர முகாமைத்துவம் என, ஒழுங்கமைப்பு பாராட்டப்படவேண்டியதே! மகிழ்ச்சியும் நிறைவும் தந்த ஓர் இலக்கியக் கூட்டம் இதுவென்று சொல்லலாம்!

***

அண்மைய நாள்களில் இதற்கு முன்னர், இன்னொரு நூல் வெளியீட்டுக் கூட்டத்துக்கும் சென்றிருந்தேன். நல்ல மழை!; கொஞ்சப் பேரே வந்திருந்தனர்; தவிர்க்கவியலாமல் 30 நிமிடத் தாமதத்தின் பின் கூட்டம் ஆரம்பமானது. பிறகு மெல்ல மெல்லச் சிலர் வந்தனர் எல்லாமாக சுமார் 25 பேர் சமுகமளித்திருந்தனர்.

தலைவரில் தடுமாற்றம் தெரிந்தது. நிகழ்ச்சி ஒழுங்கு விபரம் சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லைப் போலும்! அடிக்கடி நூலாசிரியரிடம் கதைத்தே அறிவிப்புகளைச் செய்தார்! மதிப்பீட்டுரைகளை நான்கு பேர் ஆற்றுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஒருவரின் பேச்சில் வெளிப்பட்ட – குறைபாடுகள் பற்றிய மெல்லிய சுட்டுதல்களைத் தவிர்த்தால், உரைகளெல்லாம் மிகையான நயப்புரைகளாகவே இருந்தன. இரண்டு நூல்களில் ஒன்றை முழுமையாகவும், மற்றையதில் சில கவிதைகளையும் ஏற்கெனவே படித்திருந்தமையால் தான் இவ்வாறான எண்ணம் எனக்கு ஏற்பட்டது. பேச்சாளர்கள் ஒருவித 'அனுதாப அலை'யில் சிக்குப் பட்டுள்ளார்களோ என்ற உணர்வும் தோன்றியது. நூல்களின் வெளியீட்டு / அறிமுகக் கூட்டங்களில் விமர்சனங்களை முன்வைப்பதற்குச் சில எல்லைப்பாடுகள் உள்ளன என்பதைப் புரிய முடிகிறது. ஆயினும், பலவீனங்கள் / குறைபாடுகள் போன்றவற்றைச் சுருக்கமாகவேனும் அங்கு பகிர்ந்து கொள்வதே முறையானது; இல்லையாயின், உரைகளைக் கேட்போர் மனதில் திரிபுபட்ட பதிவுகள் தான்

ஏற்படும்! பார்வையாளர் மட்டுமல்ல, நூல் ஆசிரியரும் (பிழையான) மிகை மதிப்பீட்டுணர்வுக்கு உள்ளா வார். இவையெல்லாம் நமது இலக்கிய வளர்ச்சிக்கு உதவியாக அமையமாட்டா.

இவ்வாறான செயல் களினால்தான், பின்னர் வெளியில் - வேறிடங்களில், யாராவது சுட்டிப் பான கருத்து முன்வைப்புகளுடன் நேர்மையாக விமர்சனம் செய்யும் போதும், நூலாசிரியர் பலரால் அவற்றைத் தாங்கிக் கொள்ள இயலாமலுமுள்ளது. அதுமட்டு மன்றிச் சில எழுத்தாளர், அவ்வாறு விமர்சனம் செய்யும் சிலரை, "சூழல் மீதும் சுற்றவுள்ள சிருஷ்டியாளர் மீதும் / விமர்சகராய், / கருநிறப் போர்வை போர்த்தியபடி/ குரூர மாகத் தாக்குதல் நடத்துகிறார்கள்." என, (சுட்டிப்பான உதாரணம் ஏதுமின்றி) 'வன்முறையாளர்' களாக (!!!) சித்திரித்து - குற்றமுஞ் சுமத்துகிறார்கள்!

உதாரணங்களுடன்கூடிய விமர்சனங்கள் எப்போதும் நமக்குத் தேவை; அவை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் பண்புடனும் செய்யப்படவேண்டும்; வளர்ச்சி நிலைக்கு அவை துணையாகும். அத்தகைய விமர்சனங்களை எதிர் கொள்ளும் 'திராணி', நமது எழுத்தாளர்/ கவிஞர்/ கலைஞரிடம் இருக்கவேண்டும்! அவ்வாறான திராணியற்ற 'நோஞ்சானாக' யாராவது இருப்பாரானால், அவர் பெருமைப்படுவதற்கு ஒன்றுமே இல்லை என்றாகிவிடும்!

*2*

குணசேன விதான சிங் களத்தில் எழுதிய ஐந்து சிறுகதை களைத் தெரிவுசெய்து, மடுளுகிரிய விஜேரத்ன தமிழில் மொழியாக்கம் செய்ய, அவற்றை ஒரு தொகுதியாக - பாலம் என்னும் பெயரில், எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிடட் நிறுவனம், 2013 ஆடியில் வெளியிட்டுள்ளது. அத்தொகுதியில் 'ஆடு பிடித்தல்' என்னும் சிறுகதை யும் உள்ளது; அக்கதை எழுதப் பட்ட காலம் தரப்படவில்லை. வேறு சில குறைபாடுகளும் அதில் இருந்தா லும், ஒன்று மிக முக்கியமானது.

இன்னும் பதினேழு வயதா காத கோபால் என்னும் மாண வனைப் புலிகள் "கடத்தி"ச்சென்று, போராளியாக இணைக்கின்றனர். ஒரு நாள், சண்டையில் அவன் இறந்துவிட்டதாகச் சொல்லி, சீல் பண்ணப்பட்ட பெட்டியில் அவனது சடலத்தைக் கொண்டுவந்து, வீட்டாரிடம் கொடுக்கின்றனர். ஏன் சீல் பண்ணப்பட்டுள்ளதெனக் கோபாலின் தகப்பன் சிவதாசன் கேட்கிறார்.

"அங்கிள்! கோபாலின்ர சடலத்தை அழுகிய நிலையில்தான் கண்டெடுத்தனாங்கள். அது அதி கமா பழுதடைந்து நாற்றமடிக்குது. அதுதான் ஈழ நீதிமன்றம் சீல் வைத்து அடக்கம்செய்யச் சொல்லி தீர்ப்பளித்திருக்கு.

... அங்கிள்! இது நீதி மன்றத்தின் சட்டம் பாருங்கோ. அதை மீற முடியாது. அந்த உரிமை உங்களுக்கு கிடையாது." - பக். 68

என, "புலி இராணுவத்"தின் ஒருவர் சொல்கிறார். சிவதாசன் புலிப் போராளியுடன் வாக்குவாதப்படுகிறார் பின்னர் வீட்டுக்குள் சென்று கோடரி யொன்றைக் கொண்டு வருகிறார். புலிப்போராளிகள் வாகனத்தில் ஏறிச்செல்வதற்கு முனைந்தபோது,

//சிவதாசன் சீல்வைத்த பெட்டியை கோடரியால் அடித்து உடைத்தார். பெட்டி உடைந்து சிதறியது. அதனுள் கோபாலின் சடலத்தைக் காணவில்லை. பதிலாக இரண்டு வாழைத் தண்டுகள் கிடந்தன. மகனின் சடலத்தைப் பெட்டி முழுவதும் பிறாண்டிப் பிறாண்டித் தேடினார். // - பக். 69

இது, போராளிகளைக் கொச்சைப்படுத்தும் பொய்யான சித்திரிப்பாகும்; அவரவர் கருத்து நிலைக்கேற்ப விமர்சனங்களை யாரும் வைக்க முடியும்; ஆனால், யதார்த்தத்தைத் திரிப்பது சரியான தொன்றல்ல! இறந்த போராளியின் சடலத்தையோ காயப்பட்ட போராளியையோ சண்டைக் களத் தில் மீட்பதற்கு, அவர்கள் எடுக்கும் துணிகரச் செயல்கள் பற்றிப் பல பதிவுகள் ஏற்கெனவே உள்ளன. இறந்த மாவீரருக்கும் அவர்களின் பெற்றோருக்கும் கொடுக்கப்படும் கௌரவம் பற்றியும், நமது மக்களுக் குத் தெரியும். மூத்த சிங்கள எழுத் தாளர் - அதிலும் கொம்யூனிஸ்ட் கட்சியில் நீண்டகாலம் செயற்பட்டு, முற்போக்கு எழுத்தாளரெனவும் புகழ்பெற்ற ஒருவர் இவ்வாறு எழுதுவது, வெறுமனே நகைப்பை மட்டும் தரவில்லை!; மாறாக - சிங்கள முதலாளித்துவக் கட்சிகள் சார்ந்தோரைப் போலவே, 'இடது சாரிகள்' என்னும் 'லேபல்' சூடி யுள்ள பலரும், தமிழர் போராட்டம் பற்றித் தவறான செய்திகளைத் தான், (உள்நோக்கத்துடன்) சிங்கள மக்களிடம் பரப்புகிறார்கள் என்ற புரிதலையும் ஏற்படுத்துகிறது!

சென்ற இதழில், பிரசன்ன விதானகேயின் புறஹந்த களுவர (பௌர்ணமியில் இருள் - 1997) பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். அத்திரைப் படத்தில், இறந்த இராணுவ வீரனின் சடலம் சீல்வைக்கப்பட்ட பெட்டியில் குடும்பத்தினருக்குக் கொடுக்கப் படுகின்றது; பெட்டியைத் திறக்கக் கூடாது - திறந்தால் ஓர் இலட்சம் ரூபா கொடுப்பனவு கிடைக்காது எனவும் அறிவிக்கப்படுகிறது. மகன் இறந் திருக்கமாட்டான் என நம்பும், பார்வை இழந்த முதிய கிராமவாசி யான "வன்னிஹாமி", இரவில் சென்று - சவப்பெட்டி புதைக்கப்பட்ட இடத்தைத் தனியே தோண்டுகிறார்; உறவினர் சிலர் வந்ததும் அவர்களே தோண்டிச் சவப்பெட்டியை எடுக் கின்றனர். பெட்டி உடைக்கப் பட்டபோது அதனுள் - வாழைத் தண்டும் பெரிய கல்லும் காணப்படு கின்றன! சிங்கள மக்களை அர சாங்கம் எவ்வாறு ஏமாற்றுகின்றது என்பதை நெறியாளர் வெளிக் கொண்டு வருகிறார்; அதனால் அரசாங்கம் இத்திரைப்படத்தைத் தடைசெய்தது; பிறகு நீதிமன்றம் சென்றே திரையிடும் உரிமையைப் பெற்றார் பிரசன்ன விதானகே! சிங்களப் பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் நடந்துள்ளன. இதனுடன் சமப்படுத்துவது போலவே குண சேன விதானவின் கதையும் புனையப் பட்டுள்ளது! யதார்த்த எழுத்தாளரான இவர், இவ்வாறு போலி யதார்த்தக் கதையை ஏன் எழுதினார்? இனப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடும் போது, சிங்களப் பேரினவாதத்தையும் ஒடுக்குமுறைகளுக்குள்ளாகும் தமிழ்த் தேசிய இனத்தின் செயற்பாடுகளை யும் சமப்படுத்தி, ஒரேவிதமாக விமர்சிக் கும் தவறான போக்கு, இடது சாரிகள் பலரிடம் தொடர்வது வரலாறு! இந்த எழுத்தாளரும், அந்த வழியில் தான் சென்றுள்ளாரெனவே, தோன்றுகிறது!

ஒருநாள் பகல் பொழுதில் இனம் தெரியாத ஒரு சப்தம் அவளது காதுகளில் விழுந்தது. யன்னலின் பக்கம் நோக்கினாள். பத்து வயது மதிக்கத் தக்க ஒரு பையன் அடிப்பாதையால் வந்து கொண்டிருந்தான். சூரிய ஒளியில் அவனது முகம் தங்க நிறத்தில் ஜொலித்தது. நீல நிற சட்டையும் கபில நிற கால் சட்டையும் அணிந்திருந்த அவன் கால்களில் செருப்பு அணிந்திருக்கவில்லை.

அவள் ஜன்னல் சட்ட கம்பியில் தலை சாய்த்த வண்ணம் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது கண்களில் இன்னும் தூக்கக் கலக்கம் நீங்கியிருக்க வில்லை. அந்தப் பையனை எங்கோ பாத்திருக்கிறேனே? எங்கே என்பது தான் நினைவில் இல்லை.

அருகே வந்தவன் இந்த நாய் கடிக்குமா? நடையை நிறுத்தி அவளைக் கேட்டான். அவளது நாய் வீட்டுத் தோட்டத்திலிருந்து வீட்டுக்கு வரும் படிக்கட்டில் படுத்துக்கிடந்தது.

"யார் நீ?" அவள் கேட்டாள். அவன் பதிலளிக்கவில்லை. அவனது அந்தப் புன்னகை ஏதோ ஒரு நினைவைத்தூண்டியது. அப் பொழுது "அவன் யார்?" என்பதை அவளால் நினைவுக்குக் கொண்டு வர முடிய வில்லை.

"காவல்காரன் என்ன தூங்கிக் கொண்டிருக்கிறானா? ஏன் பிச்சைக்காரர் களுக்கு இங்கே வர முடியாது என்பது உமக்குத் தெரியாதா?"

" நான் பிச்சைக்காரனல்ல?" - அவன் பதிலளித்தான்.

"அப்படியானால் நீ யார்?" அவள் மீண்டும் கேட்டாள்.

"நான் அண்ணி"

"அண்ணி?"

" ஆம்"

"அண்ணியா?" அவளுக்கு ஆச்சரியம் தாளவில்லை தனது கணவனின் செல்லப் பெயரும் "அண்ணி"தான். அவரை மாத்திரம் குறிக்கும் பெயர் தான் அது. அந்த ஊரில் பலரும் சிறிது காலம் சொல்லச் சொல்ல அவருக்கே உரித்தான பெயராக அது மாறி விட்டது.

"எனக்குத் தெரியாது" என்று சொன்னவள் யன்னலை மூடினாள்.

எந்த ஒரு மாற்றமும் இடம் பெற வில்லை இன்னும் அவள் வெளியே நின்று கொண்டிருந்தான். அவள் மீண்டும் கதவைத் திறந்து கொண்டு விராந்தைக்கு வந்தாள். நாய் இன்னும் அதே இடத்தில் படுத்துக் கொண்டிருந்தது. ஈ ஒன்று சப்தத்துடன் பறந்து சென்றது. அப்பொழுது பையன் தனது கைகளைத் தலையணையாக்கி மரத்தின் நிழலில் படுத்துக் கொண்டிருப் பதைத் கண்டாள்.

"ஏன் போக வில்லையா?" அவள் அவனைக் கேட்டாள். அவன் "இல்லை" என்பதை உணர்த்தும் வகையில் அவனது தலையை அசைத்தான்.

"ஏன் போக மாட்டேன் என்கிறாய்?,"

"எங்கே போவது?" அவன் கேட்டான். அவனது தலையில் காய்ந்த இலை ஒன்று ஒற்றிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

"காவல்காரன் எழுந்து வந்தான் என்றால் நீ போக வேண்டி வரும். அதனால் நீ இப்பவே போய்விடு பிச்சைக்காரர்களுக்கு இங்கே இடம் கிடையாது."

"நான் பிச்சைக் காரனல்ல"

"உனக்கு என்ன வேண்டும்?" அவன் பேசவில்லை. அப்படியானால் உனக்கு ஐம்பது சதம் தருகிறேன்" மெதுவாகச் சொன்னபடியே திரும்பி வீட்டுக்குள் சென்றாள். "உள்ளே வா ஏதாவது சாப்பிட்டு விட்டுச் செல்லலாம்" அவள் வீட்டுக்குள் போகும்போது சப்தமிட்டாள்.

பையன் வீட்டுக்குள் நுழைந்தான். இருளுக்குப் பயந்தவன் போல் நின்று கொண்டிருந்தான்.

" இந்த இடத்தில் நல்ல இருட்டாக இருக்குது என்ன?" அவன் கேட்டான்.

"நான் யன்னலை மூடியே வைத்திருக்கிறேன். எனக்கு வெளிச்சத்தைப் பார்க்க முடியாது கண்கள் சரியில்லை. எனது கண்ணாடியைப் பார் எவ்வளவு கனதியாக இருக்கிறது என்று"

அவன் சிரித்தான் சிரிக்கும் போது அவனது கன்னங்களில் குழி விழுவதை அவள் அவதானித்தாள்.

நீ ரொம்ப அழகாய் இருக்கிறாய். அவள் மகிழ்ச்சி பொங்கக் கூறினாள். எனக்கு பிள்ளைகள் இல்லை. எனக்கு ஒரு பையன் இருந்தான் உன்னைப் போல் இருப்பான். ஏனென்றால் எனது கணவரும் அப்படித்தான் சிரிக்கும்போது கன்னத்தில் குழி விழும். அதே போல்த்தான் தலை முடியும் சுருட்டையாக இருக்கிறது.

அவன் வரண்டாவில் சிவப்பு கம்பளத்தில் அமர்ந்து கொண்டான். கதிரையில் அமராமல் தரையில் அமர்ந்து

# அண்ணி

மலையாள மூலம் - கமலதாஸ்
சிங்கள மொழி மூலம் :- சமன் புஷ்பா குண சேகர
தமிழாக்கம் - கலாபூசணம் மாவனல்லை எம். எம் மன்ஸூர்



கொண்டது அவனது எளிய குணத்தைக் காட்டியது. அப்பொழுது அவளுக்கு அவன் மீது அனுதாபத்தையே ஏற்படுத்தியது.

"கதிரையில் அமர்ந்து கொள் எனக்கு ஆட்சே பனை இல்லை. எனது வீட்டில் ஏழை பணக்காரன் பேதமில்லை உனக்குத் தெரியாதா?"

அவள் உள்ளே சென்றாள். சிறிது நேரத்தில் அவள் தட்டில் வைத்து கொண்டு வந்த சிற்றுண்டி களுடன் காணப்பட்ட சூடான பால் கிளாஸிலிருந்து ஆவி பறந்து கொண்டிருந்தது.

"இந்தா இதனைச் சாப்பிட்டு விட்டு புறப்படு எனது கணவர் மெட்ராஸ் விமான நிலையத்தில் இருந்து இன்னுமும் ஒரு மணி நேரத்தில் வந்து விடுவார் உன்னைக் கண்டால் அவருக்கு கோபம் வரும்".

கிளாஷில் இருந்து வாயை எடுக்காமலே கண்களை உருட்டி பெரிதாக்கி அவளைப்பார்த்தான்.

"உன்னோடு அவருக்கு எந்தக் கோபமும் கிடையாது ஏன் பையனை உள்ளே அழைத்துக் கொண்டாய் என்று ஒன்றும் கேட்கவும் மாட்டார். அவர் எந்த நாளும் பயணம் போகிறார் அவர் கஸ்டப்பட்டு வேலை செய்து விட்டு அலைந்து களைத்து வீடு வந்து சேரும் போது கோபம் வருகிறது"

பையன் தட்டில் இருந்த சிற்றுண்டிகளை எல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டு நகங்களைச் சுத்தம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து அவள் சந்தோஷப்பட்டாள்.

எனினும் பையன் எதுவிதத் தயக்கமும் இன்றி அவளது படுக்கை அறைக்குச் சென்றான்.

"நீ எனக்கு தொந்தரவு தருகிறாய்; நான் சொல் வது எதனையும் கேட்பதில்லை" அவள் சொன்னாள்.

அவன் மௌனமாக இருந்தான்.

அவன் அறையில் இருந்த கண்ணாடி மேசைக்கு முன்னால் அமர்ந்து கொண்டான்.

"குளம் மாதிரி. வெள்ளைக்குளம் மாதிரி"

"என்ன என்ன குளம் மாதிரியா? இது கண்ணாடி"

அவள் அவனது கையில் இறுகப் பிடித்தாள். "இந்தா நீ இப்பவே போ வேணும் வேண்டுமானால் நாளைக்கு வா"

"இப்பொழுது எனது கணவர் வருகின்ற நேரம். அவர் களைப்போடு வருவார்"

பையன் சிரித்தான்.

அவள் சொல்வது பொய் என்பதை அவன் அறிந்து கொண்டு விட்டான் என்பதை அவள் புரிந்து கொண்டாள்.

"நான் பொய் சொல்லவில்லை எதற்காக நான் பொய் சொல்ல வேண்டும்?" அப்பொழுது அவளது கண்கள் நனைந்தன. அவன் அவளது கைகளைத் தட்டிவிட்டு கட்டிலில் அமர்ந்து கொண்டான். பிறகு அவன் கால்கள் இரண்டையும் தாளத்துக்கு ஆட்டத் தொடங்கினான்.

"நீ யார் எனக்கு ஏன் இப்படி தொல்லை தருகிறாய்?"

யாரோ வேகமாக தட தடவென முன் கதவைத் தட்டுகிற சப்தம் கேட்டது. அவள் பையனின் பக்கம் திரும்பினாள்.

"கேட்குதா? எனது கணவர் தான் வந்திருப்பார். அவர் தெரிந்து கொண்டால் ஒரு பிச்சைக்காரனுக்கு அறைக்குள் வர இடமளித்தது ஏன் எனக் கேட்டுப் பிரச்சினைப்படுத்துவார்."

"நான் பிச்சைக்காரனல்ல எத்தனை முறை சொல்வது" அவள் தாமதிக்காது கதவருகே சென்றாள். கதவைத் திறந்து பார்த்தாள். வந்திருப்பது கணவரல்ல. அவரது செயலாளர். அவரது முகத்தில் கவலையின் ரேகைகள் படர்ந்து இருந்தன.

"மேனன் மெடம்?" அவர் பேசினார்.

"மெடம் விமான விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது"

"இறந்து விட்டாரா, இறந்துட்டாரா?" அவளது உடற் பலம் முழுவதும் குறைந்து கொண்டு போவதை அவள் உணர்ந்து கொண்டாள். அவள் அழவில்லை. அவள் நினைத்தாள் அவளுக்கு இன்னொரு பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று. அவளுக்கு முடிவு ஒன்றும் தேவைப்பட்டது.

அவள் அவசரமாய் அறைக்குத் திரும்பினாள். பையன் இன்னும் உணர்வின்றி கட்டிலில் கிடந்தான். அவனை அவள் கட்டிலில் இருந்து கிழே உருட்டு விட்டாள். அவளது கண்கள் எரி மலையைக் கக்கியது.

" இங்கிருந்து சென்று விடு" - அவள் கத்தினாள்.

அவன் இன்னும் அப்படியே.

"நான் சென்னேன் அல்லவா உனக்கு, நல்ல குணத்தோட இங்கிருந்து போய் விடு என்று? எனது கணவர் இறந்து விட்டார். நான் திருமணம் முடிக்கும் போது எனக்கு வயது பதினைந்து அவர் என்னைத் திருமணம் முடிப்பதாகக் கூறியது அவருக்கு பத்து வயதாயிருக்கும் போது. அப்பொழுது அவரை அண்ணி என்று அழைத்தார்கள். நானும் அண்ணி என்றே அழைத்தேன்" - அவள் பேசிக்கொண்டே போனாள் பையன் சுவரில் சாய்ந்த வண்ணம் அவளைப்பார்த்துக் கொண்டே இருந்தான்.

"நீ இன்னும் போகவில்லையா?" அவள் சத்தமிட்டாள். "நீ இங்கு வராவிட்டால் எனது கணவர் வந்திருப்பார்." அவள் பலம் கொண்ட மட்டும் அவனைத் தள்ளினாள். அவன் கீழே விழுந்தான் எனினும் எழுந்து நிற்க அவன் தெண்டிக்கவில்லை. அவள் அவனை இடது காலினாள் உதைத்தாள்.

"வெளியே போய் விடு" மீண்டும் கத்தினாள்.

"இல்லாவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன்" அவள் மிரட்டினாள்.

பையன் ஒரே தடவையில் எழுந்து நின்று அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு முன் கதவை மூடிக்கொண்டு வெளியில் வந்தான்.

அவள் படுக்கையில் சாய்ந்து கொண்டாள். அவள் "அவனைத்திருமணம் செய்து கொண்டால் என்ன?" என்று கேட்பதைப்போன்றதொரு உள்ளுணர்வு ஏற்பட்டது.

அவள் எழுந்து ஜன்னலுக்கு அருகில் வந்தாள். நீல நிற சட்டை அணிந்து கொண்டிருந்த பையன் கேட்டைத் தாண்டி தூரத்தே மறைந்து போனான்.

காவல்காரன் இன்னும் வாங்கின் மீது ஆழ்ந்த உறக்கத்தில் நித்திரையை காவல் செய்து கொண்டிருந் தான்.

# தொலைத்த தன் அடையாளத்தைத் தேடிப் பயணிக்கின்ற எவரும் அறியாத ஒரு சிறுமி...

- கெக்கிறாவ ஸுலைஹா -

ஒரு சாயங்காலப் பொழுதில் அவள் இந்திய நாட்டின் தெருவொன்றில் நடக்கிறாள். தெருவோரத்தே அமர்ந்து மருதாணி அலங்காரங்களை வாடிக்கையாளர்கள் கையில் இடும் ஒரு இளம் பெண்ணிடம் அவளும் கைகளை நீட்டுகிறாள். அழகான மயில்களது அலங்கார உருவங்கள் அவளது உள்ளங்கைகளெங்கிலும் அச்சிறுமியால் தீட்டப்படுகின்றன.

தன்னைப்பற்றிய தேடலாய் நீள்கிறது 'An Unknown Girl' "எவரும் அறியாத ஒரு சிறுமி" என்கிற மொனிஷா அல்வியின் கவிதை. தான் முழுமையான பிரித்தானியவாசியாகவும் இல்லாமல், முழுக்க பாகிஸ்தானிய வாசியாகவும் இல்லாமல் இருப்பதை உணர்ந்து தன் கலாசார அடையாளத்தைத் தேடி அவள் தனக்குள் போரிடுகிறாள். இந்தக் கவிதையிலே இந்தியா மற்றும் அதுபோன்ற ஆசிய நாடுகளின் அழகியல் கலைகளாய் வடிவம் பெற்ற மருதாணியிடுதல் பற்றிய கவிஞையின் மனப்பதிவுகள், பதில்கள், கேள்விகள், அவாக்கள் யாவும் கோர்க்கப்படுகின்றன. 1954 இல் ஒரு பாகிஸ்தானிய தந்தைக்கும், பிரித்தானியத் தாய்க்கும் பிறந்த மொனிஷா அல்வி பாகிஸ்தானிய - இங்கிலாந்து கவிஞையும் எழுத்தாளருமாவார். அவள் லாஹூரில் பிறந்து ஓரிரு மாதங்களிலேயே தந்தையோடு பிரித்தானியாவுக்குச் சென்று குடியேறி விடுகிறாள். மொனிஷாவின் முதல் கவிதை நூல் 'The Country at my Shoulder' வெளியான பின்னர்தான் அவளால் பாகிஸ்தானுக்கு மறுபடி விஜயம் செய்ய முடிந்தது. சிறிது காலம் கல்லூரி ஆசிரியையாய் பணிபுரிந்த பின் மறுபடி எழுத்துத் துறைக்கே செல்லும் மொனிஷா அல்வி, தன் கணவர் ரொபர்ட்டுடன் பிரித்தானியாவில் வாழ்கிறாள். மொனிஷாவுக்கு ஒரு மகள் உள்ளாள். இதுவரை அவளது நான்கு கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. ருட்ரியாட் கிப்ளிங்கின் எழுத்தால் கவரப்பட்டு அவள் ஒரு சிறுகதைத் தொகுதியும் வெளியிட்டிருக்கிறாள். 'Presents from my Aunts in Pakistan' "பாகிஸ்தானிலிருக்கும் என் அத்தைமார்களின் அன்பளிப்புகள்" எனும் தலைப்பில் மொனிஷா எழுதிய முதல் கவிதை வெளியாகையில் கூட அவள் பாகிஸ்தானுக்குத் திரும்பியிருக்கவில்லையாம். "அந்தக் கவிதையில் வருகின்ற பதின்மூன்று வயதான சிறுமி சிலபோது நானாகவே இருக்கக் கூடும். பாகிஸ்தானியப் பின்னணியுடனான கவிதைகளை எழுதுவதூடாக என் சொந்த மண்ணோடு தொடர்பில் இருப்பதை நான் அவாவினேன்" என்கிறாள் மொனிஷா அல்வி.

## எவரும் அறியாத ஒரு சிறுமி (An Unknown Girl)

ஆங்கிலத்தில்: Moniza Alvi
தமிழில்: கெக்கிறாவ ஸுலைஹா

நியோன் விளக்குகளுக்குள்
தன்னைத் தொலைத்த
சாயங்காலத் தெருவொன்றின்
மூலையில் அமர்ந்து
எவருமறியாச் சிறுமியவள்
பட்டாடைக்குள் பாதி மூடிய
தன் செம்மஞ்சள் வண்ண
முழங்கால்களில் கை ஊன்றி,
கூம்பின் உச்சி வழி ஈரமென
கபில நிறக் கோடுகளாய்
குளிர்மைப்பூக்க மருதாணி பீய்ச்சுகிறாள்
என் உள்ளங்கைகளில்.

அந்தச் சாயங்காலத் தெருவில்
சில சில்லறைக் காசுக்காய்
எவருமறியாச் சிறுமியவள்
என் உள்ளங்கைகளில்
மருதாணி பீய்ச்சுகிறாள்.
என் நிழல் பின்னிய சல்வார்கமீஸை
ஊடறுத்து மென்காற்று மேனியில் தவழ,
கோடுகளாய் மயிலொன்றின் உரு
வண்ணமாய் வந்து பரவி விரிகிறது
என் உள்ளங்கைகளில்.

தெருவை நிறங்கள் நீங்கிச் சென்று
பலூான்களின் அசைவுகளுள்
தொலைக்கின்றன.
கடைகளின் முன்பகுதிகளில் சாய்ந்தபடி
நிற்கும்
மேற்கத்தேய பொய்முடி தரித்த
மாடல் பொம்மைகள் எனைப்பார்த்து
வெறிக்கின்றன.
திரைச்சீலைகளின் துணிகளாய்
சோஃபா செட்டுகளின் விரிப்பாய்,
"மிஸ் இந்தியா1993" பதாகை என்னை
மறைக்கிறது.
என்னிடம் உள்ளவை
புதிய கபில நிற நரம்புகள் ஆகும்.

அந்தச் சாயங்காலத் தெருவில்
கைவந்த கலையாய்
எவருமறியாச் சிறுமியவள்
என் உள்ளங்கைகளில்
மருதாணி பீய்ச்சுகிறாள்.
நான் அந்த கோடுகளாய் நிலைத்த மயிலில்
மனம் தொங்கிக் கிடக்கிறேன்,
சனக்கூட்டம் மிகைத்த ரயில்வண்டியின்
வெளியில் தொங்கும் மனிதர்களைப்போல.

தெருவின் சப்தங்கள் ஓய்ந்து
அமைதி பூத்திருக்கிறது.
நத்தையின் ஈர ஊர்வலமென என் உள்ளங்கை
அடியில் இருக்கும் அந்த மென்பறவையின்
காய்ந்த கபில நிறத்துக் கோடுளை
உறங்கச் செல்லுமுன்னம் நான் துடைத்தழிப்பேன்.
ஒரு வாரத்துள் அவை அழிந்து விடவும் கூடும்.

இந்தியத் திருநாடு மறுபடி மறுபடி நியோன்
விளக்குகளுக்குள்
தன்னைத் தொலைத்த
சாயங்காலத் தெருவொன்றின்
மூலையில் அமர்ந்து
எவருமறியாச் சிறுமியவள்
பட்டாடைக்குள் பாதி மூடிய
தன் செம்மஞ்சள் வண்ண
முழங்கால்களில் கை ஊன்றி,
கூம்பின் உச்சி வழி ஈரமென
கபில நிறக் கோடுகளாய்
குளிர்மைப்பூக்க மருதாணி பீய்ச்சுகிறாள்
என் உள்ளங்கைகளில்.

மொனிஷா அல்வி தன்னைத் தேடுகிறாள். மேற்கத்தேய நாகரீகத்தின் தவிர்க்க முடியாப் பண்டமான "கேக்"குகளுக்கு இடப்படுகின்ற "ஐசிங்" போல அவளது உள்ளங்கைகள் மருதாணியால் குளிர்விக்கப்படுகின்றன. மேற்கத்தேய கலாசாரமும், இந்திய கிழக்கத்தேய கலாசாரமும் அவளுள் மோதி முட்டுகின்றன. மருதாணியிடும் பெண்ணின் மூடிய மேனிக்குள் மிளிரும் அழகை அவள் ரசிக்கிறாள். சிறுமியின் மென்மையும் கவனிப்பும் மொனிஷாவின் உள்ளத்தை அள்ளுகின்றன. ஈட்டுவது சிறுதொகைப் பணமேயாயினும், அவளது தொழிலில் அவள் சிரத்தை கொள்கிறாள். இந்தியாவின் பெரும்பாலான பெண்களது அழகிய ஆடையாக விளங்கும் சல்வார்கமீஸ்கள் உடல் ஒட்டிய மேற்கத்தேயப் பெண்களது ஆடைகளோடு மறைமுகமாய் மோதுகின்றன. போலவே, இந்தியத் திருநாட்டின் தேசியப்பறவையான மயில் இங்கு மருதாணி உருவமாய் கைகளில் வந்து விழுவதை அவள் ரசிக்கிறாள். பொய்யான போலியான மாடல் பொம்மைகளை, உலக அழகிகளை உலகுக்கு அறிமுகப்படுத்திய மேலைநாடுகளை, தெருவை அலங்கரிக்கும் வெற்று நியோன்களைச் சாடி இந்தியாவின் கபில நிறத்து நாடியே தன்னுள் ஓடுவதாய் அவள் புளகாங்கிதம் அடைகிறாள். தன் இதயமாகவும் ஆன்மாவாகவும் ஒளிரும் இந்திய பாகிஸ்தானிய பாரம்பரியத்தை உளம் நாடினாலும், மருதாணியே போலும் தற்காலிகமாய் தான் வந்து தரித்த இந்தியாவை விட்டு ஏக்கத்தோடு போகவேண்டியிருப்பதைச் சொல்லாமல் சொல்லி அழுகிறாள் அவள். கவிதையின் அழகியலுக்குள் வாசகனும் தொலைகிறான்.

# ‘கலையுருக்காட்டி’ காட்டும் கோலங்கள்




க.பரணீதரன்

அண்மையில் கவிஞர் இ.சு.முரளிதரன் அவர்களின் ‘கலையுருக்காட்டி’ என்ற கவிதைநூல் ‘ஜீவநதி’யின் *129* ஆவது வெளியீடாக வெளி வந்துள்ளது. இந்நூலை ‘ஜீவநதி’ வெளியீடாக வெளி யிட வேண்டும் என்ற தமது விருப்பத்தைக்கூறி, மூலப் பிரதியை இ.சு.முரளிதரன் அவர்கள் என்னிடம் தந்த போது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஏனெனில், அண்மைக்காலங்களில் முதற்தர கவிஞராக, கட்டுரை யாளராக, சிறுகதை எழுத்தாளராக தம்மை வெளிப் படுத்தி வருபவர் அவர். அவரது ஏனைய நூல்கள் போன்று இதுவும் சற்றுவித்தியாசமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பும் இந்நூலின் தலைப்பைப் பார்த்தபோது என்னுள் ஏற்பட்டது.

கலையுருக்காட்டி(Kaleidoscope) என்ற பெயரை யும் அட்டைப்படத்தையும் பார்த்தபோது பாடசாலைக் காலமே நினைவுக்கு வந்தது. கனிஷ்ட இடைநிலை வகுப்பொன்றில் விஞ்ஞான பாடத்தில் ‘ஒளித்தெறிப்பு’ குறித்து படித்துக் கொண்டிருந்துபோது இந்தப் பகுதியைக் கற்பிப்பதற்காக ஒரு கருவியை எமது வகுப்புக்கு ஆசிரியர் ஆய்வு கூடத்திலிருந்து எடுத்து வந்திருந்தார். ஏறத்தாழ ஒரு அடி நீளமானதும் கறுப்புநிறத் தாளால் சுற்றப்பட்டிருந்ததுமான முக்கோண அரிய வடிவத்தில் அமைந்த கருவியை ஆர்வத்தோடு நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். அரியத்தின் ஒரு புறத்தில் ‘ரிசுத்தாள்’ ஒட்டிய மூடிபோல இருந்த ஒன்றைத் திறந்து, நாம் காண, ஒரு சில நிறக்கண்ணாடித் துண்டுகளை(மணிகளை) மூடியின் உட்புறத்தே இட்டு மூடியை மூடிவிட்டு அந்தக் கருவியின் மறுபுறத்தில் ஒட்டப்பட்டிருந்த தாளிலுள்ள துவாரத்தினூடாகப் பார்க்குமாறு எம்மைப் பணித்தார். அக்கருவியினுள் நாம் கண்ட அழகுக் கோலம் எமக்கு வியப்பைத் தந்தது. ஒரு சில நிறமணிகள் அப்போது பல்கிப் பெருகி பல கோலவுருக்களை உருவாக்கி யிருந்தன. நாம் ஒவ்வொருவராக துவாரத்தினூடு பார்த்துக் கொண்டிருக்கும் போதே அடிப்புறத்தில் மெதுவாகத் தட்டி, கோலவுருக்களை மாற்றி ஆசிரியர் எமக்கு அற்புதம் நிகழ்த்திக் காட்டினார். அதன்பின்பு, முதல் நாளில் படித்த ஒளித்தெறிப்புப் பாடத்தை நினைவுபடுத்தி, இக்கருவியினுள் மூன்று கண்ணாடிக் கீலங்கள் *60* பாகை கொண்ட முக்கோண அரிய வடிவத்தில் அமைக்கப்பட்டிருப்பதால் அம்மூன்று கண்ணாடித் துண்டுகளிலும் ஒளி மீண்டும் பட்டுத் தெறிப்பதனால் ஒரு சில நிற மணிகளாலேயே பன்னிற உருக்கோலங்களைக் காட்ட முடிகிறதென அக்கருவி பற்றி, தெறிப்புப் பற்றி விளக்கப்படங்களுடன் எமக்கு எடுத்துக் கூறினார். அக்கருவியின் பெயர் ‘பன்னிற உருக்காட்டி’(Kaleidoscope) எனக்கூறி, மறுநாள் வகுப்புக்கு ஆர்வமுள்ள மாணவர்கள் பழுதடைந்த பெற்றோ மாக்ஸின் மூன்று கண்ணாடிக் கீலங்களை எடுத்து அதே போன்ற கருவியைச் செய்து கொண்டு வருமாறு எமக்கு ஆர்வமூட்டினார்.

அன்று பாடசாலையில் படித்த பன்னிற உருக்காட்டிக்கு ‘கலையுருக்காட்டி’ என்ற பெயரைப் பயன்படுத்தி இந்நூலைத் தந்துள்ளபோது, இந்நூலும் பல்வேறு கோலங்களைக் காட்டும் என்ற நம்பிக்கை பிறந்தது. இந்நூலின் ‘என்னுரை’யில் நூலாசிரியர் குறிப்பிடுவது கவனத்திற்குரியது.

“மரபுக் கவிதைமீது நவீன தீண்டாமை திணிக் கப்படுவது கவலைக்குரிய விடயமாகும். இத்தகைய திட்டமிட்ட புறக்கணிப்பால் எதிர்கால சந்ததியினர் பழந் தமிழ் இலக்கியங் களில் அடங்கியிருக்கும் பரவசத்திற் குரிய அம்சங்களை தரிசிக்காமலேயே கடந்தேகும் சூழல் உருவாகி விடலாம்... பல்வேறு காலங்களில் தோன்றிய கவிதையினை மாணவர் களுக்குகற்பித்து வருவதால் இயல்பாகவே அவ்வடிவங்களோ டான நெருக்கம் என்னுள் சுவறி விட்டது. கலையுருக் காட்டியுள் வீழ்ந்த சொற்கள் நுண்ணதிர்வால் பல்முகத் தோற்றத்திலே தென்படுகின்றன”

இந்நூலின் தோற்றம் பற்றி நூலாசிரியர் தந்துள்ள இக்குறிப்பு இக்கவிதை நூலின் உள்ளடக்கம் பற்றியும் சூசகமாகத் தெரிவிக்கின்றது.

இந்நூலினுள்ளே இருபது தலைப்புக்களின் கீழே நூலாசிரியரால் கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. சங்கப்பத்து, நீதிப்பத்து, பாதீனியம், பள்ளி எழுச்சி, நானோப்பதிகம், புட்பக விமானம் புலம்பல், வான் புகழ், தமிழ் அந்தாதி, மால் மாலை மாற்று, நடராசா திருத்த சாங்கம், எறிகணை விடு தூது, சிலேடை வெண்பா, காடு, குறும்பா, கும்மி, ஹைக்கூ, மலர்கள், இங்கே எங்கே, துயரின் பாடல், மிகப்பொருத்தமான விடை என அமையும் இருபது தலைப்புகளுமே சங்ககாலம் முதல் இன்று வரை தோன்றிய கவிதை வடிவங்களைக் கொண்டவை. சங்கப்பத்து, நீதிப்பத்து, பள்ளி எழுச்சி, தமிழ் அந்தாதி, மால் மாலைமாற்று, எறிகணை விடு தூது போன்றவை கவிதை வடிவங்களை நேரடியாக உணர்த்துகின்ற அதேவேளை, பாதீனியம், நானோப் பதிகம் போன்றவையும் தமிழ்க்கவிதை மரபை அடியொற்றியே எழுதப்பட்டவை. குறும்பா, ஹைக்கூ போன்ற பிறமொழிக் கவிதை மரபு வடிவங்களை உள்வாங்கியுள்ள தமிழ்க்கவிதை வடிவங்களிலும் இன்றைய நவீன கவிதை வடிவத்திலும் கூட கவிதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சங்ககாலக் கவிதை வடிவம் முதல் இன்றுள்ள கவிதை வடிவம்வரை எடுத்தாளப்பட்ட வடிவங்களில் கவிதைகள் எழுதப்பட்டிருந்தாலும் கூட அவற்றின் 'பாடு பொருள்' இன்றைய நிலவரங்களாகவும், விவகாரங்களாகவும் வாழ்க்கை முறைகளுமாகவே உள்ளன. சங்க காலக்கவிதை மரபில் தலைவி கூற்றாக அமையும் பத்துப்பாடல்களைக் கொண்ட சங்கப்பத்து "ஐந்நிலமும் கலந்த ஈழநிலத் தலைவி சமர் ஓய் காலத்தில் தலைவன் பிரிவினைக் குறித்து தோழிக்கு உரைப்பதாக' அமைந்துள்ளது. உதாரணத்திற்கு அவற்றுள் ஒரு பாடல் இதோ:

**கேட்டிசின் வாழி தோழி நெருநல்**
**முன்றில் பல்கணை சிதறத் தாய்சா**
**அறியாக் குழவி கொங்கை மேயும்**
**நினைத்திரள் கூர் தரும் சுடுகலன் உயிர்தெறும்**
**அற்றைத் துயில் தரு மாகம்**
**இற்றை பலர்க்குச் செல்லல் எவன் கொலோ**

கடந்த யுத்த அனர்த்தத்தின் கொடுமையைச் சொல்லும் இக்கவிதை எளிதிலே பொருள் கொள்ளக் கூடியதாகும்.

திருக்குறள் குறிப்பிடும் 'அறத்தாறு' என்ற பதம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய முறைமையான 'ஒழுக்கம்' என்பதனைச் சுட்டுவதாகும். அறம் என்பது ஒழுக்கமே. மக்களுக்கு ஒழுக்க நீதிகளை அறிவுறுத்துவதற்காக எழுந்த நூல்கள் நீதி நூல்களாகும். இந்த வகையில் நீதி கூறும் பத்துப் பாடல்களை 'நீதிப்பத்து' என்ற பெயரில் நூலாசிரியர் தந்துள்ளார். இவ்வகையில்,

**நாய்கள் குரைப்பின் உறங்கார் கரந்துறைவார்**
**வாய் காவல் செய் படைஞர் அன்றுறங்கார் - நோயில்**
**மகவுறங்கின் தாயார் உறங்கார் முகநூல்**
**மிகவிழைவோர் அல்லுறங்கார் மிக்கு**

என்ற வெண்பா எமது இன்றைய அவலத்தைத் தோலுரித்துக் காட்டுகின்றது.

Palindrome என்ற ஆங்கிலப்பதம் முன்னும் பின்னும் வாசிக்கும்போது ஒரேவிதமாக இருக்கும் ஒரு சொல், ஒரு வரி, ஒரு செய்யுள் அல்லது கவிதை, ஓர் எண், ஒரு வாக்கியம் போன்றவற்றைச் சுட்டுவதாக அமைவதாகும். இதனை ஒத்த கவிதை வடிவம் தமிழில் "மாலைமாற்று" என வழங்கப்படுவது. இது சித்திரக்கவி வகையைச் சேர்ந்தது. இப்படியான யாப்பு வடிவத்தை தமிழ்மொழியில் முதன்முதலில் கண்டு பிடித்துக் கையாண்டவர் திருஞானசம்பந்தப் பெருமான் என்று கூறுவர். திருப்பிரமபுரம் மீது இவர் பாடிய மாலைமாற்றுப் பதிகம் 'மாலை மாற்று' எனும் கவிதை வடிவத்துக்கு உதாரணமாகக் கொள்ளப்படும். இ.சு.முரளிதரன் அவர்கள் எழுதிய 'மாலைமாற்று' கவிதைகளில் ஒன்று,

**நாத நூதனா ராக சாகரா நேய மாயனே**
**மாதுபோதுமா தோடு பாடுதோ நாவை நாரணா**
**நாரணாவைநா தோடுபாடுதோ மாது போதுமா**
**நேயமாயனே ராகசாகரா நாத நூதனா**

என்பதாகும். திருமால் மீது பாடப்பட்ட இப்பாடல்நயந்து ரசிக்கத்தக்கதாகும்.

இவ்வாறாகவே திருப்பள்ளி எழுச்சி, தமிழ் அந்தாதி, தூதுப்பிரபந்தம், சிலேடை வெண்பா, குறள் வெண்பா போன்ற வடிவங்களிலும் கவிதைகள் அமைந்துள்ளன. இன்று எம் எல்லோரையும் அச்சுறுத்தி வரும் நச்சுக்களையான 'பாதீனியம்' பற்றிய கவிதை குறள் வடிவில் அமைந்துள்ளது. வட அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட இந்நச்சுப்பயிர் எமது மண்ணுக்கு வந்து சேர்ந்த அரசியற் பின்னணியை விளக்கும் குறள்கள் பாதீனியத்தின் கொடும் விளைவுகளையும் எடுத்துக் கூறுகின்றன:

**நம் தேசம் வாழ்கின்ற நச்சுப்பயிர் முன்னர்**
**செம்மறியில் ஒட்டி வந்த சீழ்**

**கமத்தின் வளஞ்சிதையக் காரணமே அன்று**
**அமைதிப்படை கொணர்ந்த ஆடு**

இக்குறள்கள் "அமைதிப்படை" எமக்குச் செய்தவற்றை பூடகமாகச் சொல்கின்றன.

நூலாசிரியர் இ.சு.முரளிதரன் அவர்களுக்கு தமிழ் கற்பித்த ஆசிரியர் திரு.கி நடராசா அவர்கள் ஆவார். அவரின் மணிவிழா மலரில் அவர் சார்பான பத்து சிறப்புக்களை ஒவ்வொரு பாடலாக எழுதி, 'நடராசா திருத்தசாங்கம்' என்ற தலைப்பில் நூலாசிரியர் பதிவு செய்துள்ளார். தமிழ்க்கவிதை மரபை அடியொற்றி நாமம், நாடு, நகர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி என்று ஒவ்வொரு சிறப்பம்சங்களையும் வெண்பாக்களாக எழுதியுள்ளமை பரவசப்படுத்துகிறது:

**மாஞ்சோலை வாழும் மரகதமே! தேவகுரு**
**வாஞ்சைகொள் ஊர்தியது வாய்விடு - ஆஞ்சநேயன்**
**போலச் சிரஞ்சீவியாகி உலா வரும்**
**நீலநிற "ஸ்கூட்டரே" தேர்.**

இப்பாடலைப் படிக்கும் மாணவர்கள் கூட எளிதாகப் பொருள் கொண்டு மகிழ்வர்.

சிலேடை வெண்பா, குறும்பா, ஹைக்கூ என்பனவும் இ.சு.முரளிதரன் அவர்களுக்கு கைவந்தவை. அவர் தமது முதலாவது கவிதைநூலை 'நுங்கு விழிகள்' என்ற பெயரில் ஹைக்கூ கவிதைகளின் தொகுப்பாகவே வெளியிட்டு வைத்தார். 'கலையுருக் காட்டி' என்ற நூலையும் உள்ளடக்கி ஆறு கவிதைத் தொகுதிகள், நான்கு கட்டுரைத்தொகுதிகள் ஒரு

சிறுகதைத் தொகுதி என பல்துறைகளிலும் இவர் நூல்களை வெளிக்கொணர்ந்தார். இவரின் படைப்பு களில் விஞ்ஞானபூர்வ நோக்கு மிளர்வதை எவரும் அவதானிக்கலாம். கட்டுரைத்தொகுதி ஒன்று 'சுரோடிங்கரின் பூனை' என்ற பெயரில் வெளிவந்தது. 'கடவுளின் கைபேசி எண்' என்ற பெயரில் வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுதி தொன்மங்கள், பின்நவீனத்துவம் பேசும் சிறுகதைகளையும் உள்ளடக்கியிருந்தது. மேலும் 'நனோப்பதிகம்' என்ற பெயரில் பாடப்பட்ட பத்துப்பாடல்களும் நானோவின் விளக்கம், நானோ தொழில்நுட்பம் நனோ மருத்துவம் என விரிந்து செல்கின்றது. ஒரு மீற்றரின் அல்லது ஒரு செக்கனின் ஒரு பில்லியனின்ஓர் அலகே அல்லது பகுதியே நானே என இவர் கவிதையில் எடுத்துக் கூறுவது அற்புதமாகவுள்ளது.

ஒன்றுடன் ஒன்பது சுழியாம் "நிகற்பம்"
சென்றுமேல் ஒன்று நில் பெறுமதி அளவிலே
தென்படும் நுண்ணிலை நானோவென விளம்புவோம்
பன்முகநுட்பமே பயிலவா உலகிலே!

ஒன்றுடன் ஒன்பது "சைபர்கள் சேரின் உருவாகும் எண்ணான பில்லியின் என்பதை 'நிகற்பம்' என்பதால் குறிப்பிட்டு பில்லியனில் ஒன்று என்ற பின்னமே 'நனோ' ஆகும் என எளிதாக எடுத்துரைப்பது தெளிவாக உள்ளது. நவீன கவிதை வடிவில் படிமங்களை அகத்தே கொண்டு விளங்குவதானது "நவீன கவிதை" பற்றிய இவரின் 'புரிதலை' தெற்றெனப் புலப்படுத்துகிறது. இவ்வாறாக, தமிழ்க் கவிதையின் பல்வேறு வடிவங் களையும் கொண்ட கவிதைத் தொகுதியாக வெளிவந்து கலையுருக்காட்டி போல தமிழ்க்கவிதையின் அழகுக் கோலங்களைக் காட்டுகின்ற இந்நூல் தமிழிலான புதிய வரவுகளுள் முதன்மையானது எனக்கூறலாம்.

இ.சு.முரளிதரன் அவர்கள் ஒரு தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் என்பதற்கும் அப்பால் ஒரு சிறந்த படைப்பாளி என்ற வகையில் அவர்மீது என்றும் எனக்கு அபிமானம் உண்டு. தற்கால தமிழ் இலக்கிய உலகில், நம்பிக்கை ஒளிதரும் நட்சத்திரமாக அவரை நான் காண்கின்றேன். என்னுடைய இக்கருத்துக்கு ஆதாரம் அளிப்பதாக 'கலையுருக்காட்டி' எனும் இக்கவிதை நூல் விளங்குகிறது.

---

## கீழடி

சங்ககாலச் சம அடியெனும்
தொல்லியல் அகழாய்வு அடி
தமிழனும் சங்ககாலமுமான தொடர்படி
சிவகங்கை மாவட்டக் கீழடி
தமிழனின் பெருமித அடி.

இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டடிக்கு
முன்னானது தமிழ் எழுத்தடியென
அறியப்பட்ட உண்மை ஆய்வடி
இரண்டாயிரத்து இருநூறு வருடவடி
பழமையானதென்ற நிரூபண நிசவடி.

ஆய்வு தமிழனுக்கு மேலடியே
முழுஉலகும் வியந்த அடி
முன்னோர் கதை சொல்லுமடி
பாண்டிய நாணயங்களாம், வணிக
ஆதாரம் ரோமானியர்களுடனாம்

சங்கஇலக்கியம் கற்பனை என்றதை
நொறுக்குமொரு நகரநாகரீகம் கண்டனர்.
சாதி மத குறியீடு, தாலி இல்லை.
ஆயுதம் தாங்கிய உருவமில்லை
தாய்த் தெய்வ வழிபாடே ஊகம்.

பண்புடை வைகைக் கரை நாகரீகமடி
மண்ணுக்குள் பாண்டியநாடு தாய்மடி
கண்முன்னேயான ஆவண சாட்சியடி
யூப்பிரட்டீஸ் ரைகிறீஸ் காலம் கடந்தோர்.
சுங்ககால வசிப்பிடம் கீழடி
- வேதா. இலங்காதிலகம் -

## பாலை வெளி

மழை வருகிறது
மாரித்தவளைகள்
கத்திக் கொண்டிருக்கின்றன
பின்னர்
வாலைச் சுருட்டிக்கொண்டு
காலடியில் பதுங்கும்



எச்சில் சோற்றுக்காக
எல்லாம்
அழகாகவே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன;
ஏமாளித்தனத்தையும்
சுய நலத்தையும் பயன்படுத்தி
வீட்டைக் கொளுத்த
கொள்ளி எடுத்துக் கொடுத்த
கதையாக

எல்லாம் சில நாட்களில்
முடிந்துபோம்

பின்னர் சுடுகாடுகளுடன் கூடிய
பாலை வெளி.
- இ.ஜீவகாருண்யன் -

## காயப்படும்பூமி

தேடுவாரற்ற நிலையில்
தெருவெங்கும் யாசகர் குரல்கள்

முதிர்கால இடைஞ்சல்களாய்
முதியோர் இல்லங்கள்

இன்னும்
மனிதம் செத்த மனிதர்கள் மத்தியில்
மேலும்
கருக்கட்டிப் பிரசவிக்கின்றன
கயமைகள்

அக்கிரமங்கள் மிகுதிபெற்று
அன்புணர்வு தணிந்து செல்ல
தாண்டவமாடுகிறது இயற்கை.

இது சாமிக்குற்றமென்று
சாஸ்திரியொருவன் சொன்னதைக்கேட்டு
வேள்விகள் நடக்கின்றன ஊரெங்கும்
வெகுவிமரிசையாக!

மீண்டும்
தெருவெங்கும் யாசகர் குரல்கள்.
அநாதை, முதியோர் இல்லங்கள்...
புன்சிரிப்பைத் தொலைத்த பூவையர்கள்.

காயத்துக்கு தகுந்த மருந்தில்லாததால்
மேலும்
காயப்படுகிறது பூமி
- அலெக்ஸ் பரந்தாமன் -

அவனைத் தெரியும். அவனும் இதே தெருவில் தான் வசிக்கிறான். இரண்டொரு தடவைகள் சந்தித்திருக்கின்றோம். நளினமான பெண்ணைப்போல அவன் நடந்து கொள்ளும் விதத்திலிருந்து அவனது நட்பை தவிர்த்துக் கொண்டிருந்தேன். மீண்டும் சந்திக்கலாம் என்று பழைய சந்திப்புக்களை உடனே முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறேன். எப்போதும் அவனோடு நீண்ட நேரம் கதை வளர்ப்பதில்லை. சற்று விட்டால் அவன் தன் பாட்டுக்குப் பேசிக் கொண்டே இருப்பான். என்னோடு நட்புப்பாராட்ட அவனுக்கு அதிக விருப்பம் போல தான்.

"பகல்ல தேடி வந்தா நீங்க நிக்கிறதே இல்ல. சும்மா இந்தப் பக்கமா வந்தன். கூப்பிட்டுப் பாப்பம் எண்டு தோணிச்சு."

அப்பிடி என்ன என்னோட பேசுறததுக்கு இருக்கு என்று மனதளவில் நினைத்துக் கொண்டு ஆ ஆ என்று மெல்லப் புன்னகைத்தேன். அவனுக்கு என்ன புரிந்து விடப் போகின்றது.

வெளியவே நிப்பாட்டி வச்சிருக்கிறிங்கள். உள்ள கூப்பிடமாட்டிங்களா!

ஓ வாங்களன். இப்படி கேட்பான் என்று நினைக்கவில்லை. வேறுவழி இல்லாமல் அவனை அழைத்தேன். அவன் மெல்ல மெல்ல நடந்து வந்தான். அவனை முன்னே நடக்கவிட்டு வாசலை மூடிக் கொண்டு பின்தொடர்ந்தேன். அவன் நடையில் ஒரு நளினம் இருந்தது. பெண்ணின் நடை அன்னநடை எனபார்களே! அதே போல சொல்லிக் கொள்ளும் அளவுக்கு அவன் நடந்தான். வீட்டு வாசலுக்கு வந்ததும் நின்று என்னைத் திரும்பிப் பார்த்தான்.

ஏன் வீட்டுக்கு வெளிச்சம் இல்லையா! என்று கேட்டான்.

இருக்கிறது. நான் தான் அணைத்து வைத்திருக்கிறேன். என்றபடி வாசலை நோக்கி விரைந்தேன். அவன் எனக்கு இடம் தருவதற்காக சற்று விலகினான். நான் புன்னகைத்தேன். பிறகு உள்ளே நுழைந்து முகப்பறைக்கான மின்குமிழ்களை ஒளிரவிடும் பட்டன்கள் இரண்டைத் தட்டிவிட்டேன். நுழைவுக் கதவுகள் இரண்டையும் திறந்து விட்டுக் கொண்டே உள்ளே அழைத்தேன். அவன் வந்தான். அவன் இருப்பதற்கு என்று ஒரு வாங்கிளை இழுத்து வைத்தேன்.


வீடு குப்பையாய் தான் இருக்கும். கொஞ்சம் சமாளித்துக் கொள்ளும் என்றேன்.

அது பரவாயில்லை என்றான்.

அவனுக்கு எதிராக என் புத்தகம் படிக்கும் மேசை இருந்தது. நடுவில் மண்ணெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவன் வருவதற்கு முதல் நான் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு அமைதியான சுற்றிலும் இருள் மயமான நேரத்தில் மண்ணெண்ணெய் விளக்கில் படிக்கும் பழக்கம் எனக்கு நீண்டகாலமாக இருந்தது. என்னதான் மின்சாரம் வந்தாலும் என் பழக்கத்தை மாற்ற முடியவில்லை. என் அப்பாவின் பழக்கம் அது. இன்னமும் தொடர்ந்தது. புத்தகங்களைப் படிக்கும் போது எந்தக் கவனச் சிதறலும் எனக்கு வராமல் இருக்கும். அது போக அந்த உலகத்தை கற்பனையில் அனுபவிக்க எனக்கு பிரியம் வேறு உண்டு. அந்த மேசைக்கு அருகில் ஒரே ஒரு நாற்காலிதான் இருந்தது. அந்த வீட்டிலேயே அது ஒன்றுதான் இருக்கக் கூடிய நாற்காலி என்ற பெயருக்குப் பொருத்தமானது. அதிலிருந்து தான் மேசையில் விரிக்கப்பட்ட புத்தகங்களைப் படிக்க முடியும். நான் உட்கார்ந்து கொண்டேன். அவனுக்கு எதிராக அந்த நாற்காலியில் உட்கார்ந்தேன். எரியும் விளக்கு இருவருக்கும் இடையில் இருந்தது.

# இயல்பு, இடைவெளி, ஒரு விலகல்

புகழ்



மின்விளக்குகளின் ஒளியில் அவனது முகம் சற்று தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அவன் முகம் பிரகாசமாகவும் உதட்டில் எதோ சிவப்புச் சாயம் பூசியது போலவும் இருந்தது. தன் கைகள் இரண்டையும் மடியில் ஒரு பெண்ணைப் போல வைத்திருந்தான். அவனது கௌப்பிக் கொட்டை நிறக்கண்களில் சுற்றி முற்றிப் பார்க்கும் பார்வைகள் அனைத்தும் ஒரு பெண்ணைப் போலவே இருந்தது. அவன் அப்படி ஒரு பார்வையிலேயே என்னைப் பார்த்தான். நான் மேசையில் இருக்கும் புத்தகத்தை விரித்து ஒரு பக்கத்தைப் படிப்பது போல பாசாங்கு செய்து கொண்டே அவனைக் கவனித்தேன்.

அவன் முதல் கேள்வி என்னவென்று எனக்கு ஓரளவு ஊகிக்கக் கூடியதாக இருந்தது. மேசையில் எரியும் விளக்கையும் சுவர்களில் எரியும் மின் விளக்கையும் அவன் பார்த்துக் கொண்டதிலிருந்து அந்த ஊகம் பிறந்தது.

சற்று நேரத்துக்கு முதல் மின்சாரம் துண்டிக்கப் பட்டதா என்று என்னைப் பார்த்துக் கேட்டான். நான் இல்லையே என்றேன். அப்படி என்றால் ஏன் இங்கு விளக்கு எரிகின்றது என்பதை தெரிந்து கொள்ள தனக்கு விருப்பம் உள்ளதாகச் சொன்னன். நான் சொல்லி முடித்த பிறகு நீங்கள் வினோதமான ஆள்தான் என்று வியந்து கொண்டே புன்னகைதான். பிறகு பேசினோம்.

அப்போதுதான் அவனது பெயரைக் கேட்க எனக்குத் தோன்றியது.

"உங்கட பெயர்?" என்ன என்று கேட்டேன்.

"என்ர பெயர் வினோதன்" என்றான்.

நான் சற்று வியப்போடு என்பெயரும் அதுதான் என்று சொல்லிக் கொண்டேன். உடனே பெயருக்கு ஏற்ற மாதிரிதான் நீங்கள் நடந்து கொள்கிறீர்கள் என்றான். உங்களுக்குக் கூடப் பொருத்தமான பெயரைப் போலதான் இருக்கிறது என்றேன். அவனுக்கு அது புரிந்ததோ தெரியாது.

"என்ன செய்றிங்க?"என்று கேட்டேன்.

"நான் படிச்சுக் கொண்டிருக்கிறன். நீங்களும் படிக்கிறிங்க தானே! உங்களிட்டையும் உதவி கேக்கலாம் எண்டு நினைச்சன்."

"நான் படிச்சு முடிச்சிட்டன். வேலை தான் தேடிக் கொண்டு இருக்கிறன். படிச்ச படிப்புக்கு ஏத்த நல்ல வேலை எங்க கிடைக்கப் போகுது. சம்மந்தமே இல்லாததுக்கு எல்லாம் அனுப்பிக் கொண்டு இருக்கிறன். எது முதல் கிடைக்குமோ அந்த வேலையையே செய்யலாம் எண்டு ஒரு எண்ணம் வேற இருக்கு. அதுக்கு கால நேரம் சரியா வரவேணும். எனக்கு உங்களுக்கு உதவ விருப்பம் தான். சொல்லுங்க. செய்ய முடிஞ்சா செய்யிறன்."

"எனக்கு நீங்க உதவுறன் எண்டு சொன்னதே சந்தோசம் தான்." என்று சொன்ன பிறகு அவன் சோகமாய் மாறிப் போயிருந்தான். தலையை வேறு எங்கோ திருப்பிக் கொண்டு இருந்தான். அப்போது தான் அவன் கை விரலைக் கவனித்தேன். அவன் வலது கையின் நடு விரல் கேள்விக் குறிபோல வளைந்து போய் இருந்தது. அதன் மேல் சிறிய வெள்ளைத் துணி ஒன்று சுற்றப்பட்டு இருந்தது. அவன் மறு கை விரல்களால் தன் நடு விரலை நிமிர்த்த முற்பட்டவனைப் போல பினைந்து கொண்டிருந்தான். ஆனால் விரல் அப்படியே தான் இருந்தது. அவனுக்குக் காயம் ஏதும் ஏற்பட்டதோ என்று தான் முதலில் நினைத்தேன். உண்மைதான். அது நீண்ட நாளையக் காயம்.

"இந்த நடு விரலுக்கு என்ன நடந்தது" என்று கேட்டேன்.

"என்ர அப்பா அடிக்க வந்தார் அப்போ நான் கையை குறுக்க வைச்சுத் தடுத்தன். அடி இந்த நடு விரல்ல பட்டு விரல் உடைஞ்சிட்டு." விரலைக் காட்டினான். "பிறகு மருந்து கட்டியும் மாறாமல் இருக்கு. அப்படியே இப்பவும் வளைஞ்சுதான் இருக்குது."

ஏன் அவன் அப்பா அடிக்க வந்திருப்பார் என்று கற்பனை செய்து பார்த்தேன். இனி இப்படி நடந்து கொள்ளாதே என்றுதான் இருக்கும். அதுவும் ஒரு பெண்ணைப் போல நடக்கும் ஒருவனை இந்த உலகம் எப்படி பார்க்க நினைக்கும் என்பதன் கவலையாகக் கூட இருக்கலாம். ஆனால் அது அவன் பிரச்சனை இல்லையே!

இந்த மனிசர்கள் கெட்டவர்கள். அவர்களுக்கு யாரும் நல்லா இருந்தால் பிடிக்காது. பொறாமை பிடித்துப் போய் எதாவது செய்து கெடுத்து விடுவார்கள். அவன் ஏன் அப்படிப் புலம்பினான் என்று தெரியாது. ஆனால் எதோ சொல்லவந்து கைவிட்டான் என்பது புரிந்தது. அவன் வீட்டுக்காரர்கள் பற்றி விசாரித்தேன்.

தனக்கு மேல் முரளி, கபில் என்று இரண்டு அண்ணன்கள் இருப்பதாகச் சொன்னான். வீட்டில் பெண்குழந்தை இல்லை என்று வருத்தப்பட்டதாகவும் சொன்னான்.

குடும்பத்தில் நான்தான் கடைக்குட்டி. என் மேல் என் அப்பாவுக்கு நல்ல பிரியம் இருந்தது. ஆனால் சிலவருடங்களுக்கு முன்பு என்னைப் போட்டு அடித்தார். அந்த அடியை வாழ்கையில் யாராலும் மறக்க முடியாது. அப்படி எல்லாம் நடக்காதே, நெளியாதே, சிரிக்காதே என்றெல்லாம் சொல்லிச் சொல்லி தினமும் அடித்தார். கிட்டதட்ட நான் இறந்துபோய் விட்டால் தான் என்ன என்று சிந்திக்கும் அளவுக்குத் தினமும் சித்திரவதையாக இருந்தது. எனக்கு என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளக் கூட முடியாமல் இருந்தேன். பிறகு என்னை அவர் கண்டு கொள்வதே இல்லை. ஒரு பொருட்டாய் மதிப்பதே இல்லை. வந்தவுடன் எனக்குத் தரும் முத்தங்கள் இல்லை. கேட்டதும் வாங்கிதரும் இனிப்புக்களும் இல்லை. அதுவரை அவரிடம் நான் காணாத வெறுப்பான ஒரு முரட்டு முகத்தைக் கண்டேன். பயந்து நடுங்க ஆரம்பித்தேன். எனக்குள் நானே முடங்கினேன். வீட்டுக்கு நான் ஒரு பாரத்தை போல சுமையைப் போல இருப்பதாக உணர்ந்தேன். என் அம்மா நளினி எப்போது அழுதுகொண்டிருப்பாள். எனக்கு விழும் அடிகளில் பலதை அவள் தன் முதுகில் வாங்கி இருக்கிறாள். அவள் பாவம். அவளை யாராலும் சமாதானம் செய்ய முடியாது. அவளே அழுது தீர்த்தால் தான் உண்டு. அண்ணன்கள் ஆள் ஆளுக்குத் தனித்தனியே பிரிந்து போய் விட்டார்கள். திருமணம், வேலை என்று பிரிந்தார்கள். மூத்த அண்ணன் முரளியின் மனைவி மிக மோசமானவள். வீட்டுக்கு வந்த முதல் நாளே வம்புக்கு இழுத்தாள். தலைக்கனத்தோடு அவள் நடந்து கொண்ட அந்த ஒரு நாளை எப்படி மறக்க முடியும். எனக்கு மட்டும் அல்ல வீட்டில் யாருக்குமே அவளைப் பிடிக்காமலே போனது. அதற்குப் பிறகு தனிக் குடித்தனம் போய்விட்டார்கள். அதைத்தான்

அவள் விரும்பினாள் போல இருந்தது. அவள் சிரிப்பில் வஞ்சனை தான் இருக்கும். முரளி காதலித்துதான் திரு மணம் செய்தான். அதனாலேயே அவள் சொல்வதை எல்லாம் வெட்கமே இல்லாமல் செய்தான். அவனுக்கு ஒரு மட்டமான மூளைதான் இருக்கவேண்டும். கபில் வேலை வேலை என்று ஓடிக் கொண்டிருக்கிறான். வீட்டுக்கு எப்போதாவது வருவான். என்னைக் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொள்வான். வலிந்து பேசினாலும் அவன் எதுவும் பேசமாட்டான். நான் மட்டும் தான் வீட்டில் இருக்கிறவன். எனக்கு நல்ல நண்பன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பெயர் அஸ்வந். நாங்கள் சின்ன வயதில் இருந்தே நல்ல நண்பர்கள். எனக்கு அவன் என்றால் உயிர் என்று சில நொடிகள் சிலாகித் தான். அப்படியே பழைய நினைவுகளில் அவன் சிக்கி மீண்டு மறுபடியும் சொல்ல ஆரம்பித்தான். நாங்கள் அப்படி ஒரு நண்பர்களாக இருந்தோம். பாரர் பாட சாலையில் இருந்து இருவரும் ஒன்றாகவே கல்வி கற்றோம். எந்த வம்பு தும்புக்கும் போகாமல் நான் இருப்பேன். சாதுவான பேர்வழி என்று எல்லாரும் சொல்லுவார்கள். பாடசாலைக்கு புதிதாக ஒருவன் சேர்ந்தான். அவனுக்கு என்னைக் கண்டாலே பிடிக்காது. வந்த முதல் நாளே என்னோடு சண்டைக்கு வந்தான். அன்றைக்கு அடி வாங்காமல் காத்தது அஸ்வந்தான். எங்களுக்குள் குறுக்கே புகுந்து அவன் மேல் கைவைத்து விட்டான். வகுப்பறையே கத்திக் கூச்சல் போட்டது. பக்கத்து வகுப்பிலிருந்து பிலிப்போ ஆசிரியர் வந்து விட்டார். அந்த கடுகடுப்பான முரட்டு ஆசிரியரை நாங்கள் எல்லோரும் இதோ பண்டி வயிறு வந்து விட்டது என்று சொல்லிக் கொள்வோம். அவ்வளவு பெரிய வயிறு அவருக்கு. அதுதான் அந்தப் பட்டப் பெயர். இதை விட இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய், வா பிள்ள போன்ற பட்டங்களை கொண்ட ஆசிரியர்களும் இருந்தார்கள். அவன் சிரித்தான். நானும் சிரித்தேன். பிறகு சட்டென சோர்ந்து போனான். அன்றைக்கு அவன் அடிவாங்கினான். எனக்காக அடி வாங்கினான். அவன் அழுததைத்தான் பார்க்க எனக்கு தாங்க முடியாத தாக இருந்தது. அப்படி நிறையத் தடவைகள் எனக்காக மூக்கை நுழைத்து சிக்கி அறுபட்டிருக்கிறான். சில போது என் பரீட்சைக் கட்டணங்களையும் அவன் கட்டி இருக்கிறான். அவன் இளகிய மனசுக்காரன். இன்னும் நெருக்கமாகி நாங்கள் இருவரும் வளர்ந் தோம். நட்பென்றால் நாங்கள் என்று சொல்லி பெருமைப் பட்டுக்கொண்டு திரிந்தோம். ஒரே அறையில் படுத்து உறங்கி இருக்கின்றோம். ஆனால் அப்படி இப்போது இல்லை. அவன் என்னை விலக்கி வைக்க ஆரம்பித்து விட்டான். நீங்கள் இருவரும் காதலர்களா என்று அவன் நண்பர்கள் எங்களின் நெருக்கத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு கேட்க ஆரம்பித்ததில் இருந்து தான் நடந்தது. அதிலிருந்து அவன் என்னை விட்டு நகர ஆரம்பித்து விட்டான். எனக்கு அவனைத் தொல்லை செய்ய விருப்பம் இருக்கவில்லை. என்பாட்டுக்கு நடக்க ஆரம்பித்துவிட்டேன். அவனுக்கும் அது பிடித்துப் போய் விட்டதாகவே தெரிகிறது. சொல்லி முடித்து விட்டு சோகமான முக பாவத்துடன் வேறெங்கோ பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனை எனக்கு உணரக் கூடியதாக இருந்தது. அவன் தனித்துவிடப்பட்டவனைப் போல எல்லாராலும் ஒதுக்கப்பட்டுக் கொண்டிருப்பவனைப் போல உணர்ந்து கொண்டு இருக்கிறான். அது அவனுக்கு ஆபத்தானது தான். அவன் தவறான முடிவுகளை எப்போதாவது கையில் எடுத்துக் கொண்டு எதாவது செய்து கொள்ளப் பார்ப்பான் என்று தோன்றியது. தனியாய் இருப்பதை விடவும் தனிமை உணர்வுதான் மோசமானது.

"சரி கவலைப்படாதிங்க எல்லாம் மாறும் எண்டு தன்னம்பிக்கையோட இருங்க." என்று ஆறுதல் கூறினேன். அப்படித்தானே இருக்க நினைக்கிறேன் என்றான். பிறகு என்னைப் பற்றிக் கேட்டான். பெரிய பழக்கமே இல்லாத என்னை நம்பி இவ்வளவு தூரம் வெளிப்படையாகப் பேசிக்கொண்டிருக்கும் ஒருவனிடம் நானும் எதாவது அரைகுறையாகவாவது சொல்லித்தான் ஆகவேண்டும். அவனைப் போல சொல்வதற்கு எனக்கு ஒன்றுமே இல்லை.

நான் ஒரு தனி மரம். எங்கெங்கோ வாடகைக்கு வீடு தேடினேன். கிடைக்கிற வீடுகளில் எல்லாம் ஒரு மாதத்துக்கு மேல் தங்க முடியாதமாதிரி சந்தர்ப்பங்கள் உருவாகும். உடனே இருக்கிற மூட்டைகளைக் கட்டிக் கொண்டு வேறு வீட்டைப் பார்த்துக் கிளம்பிவிடுவேன். மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் தான் என் தாய் வள்ளி என்னைப் படிப்பித்தாள். அவள் அழகிய சிவந்த சிரிப்போடு கூடிய முகத்தை உடையவள். அவளைப் போல அர்ப் பணிப்பான ஜீவனை நான் இன்னும் கண்டதில்லை. அவள் கைகளில் நான் தூங்கிக் கொண்டிருக்கும் போது என் தகப்பன் முருகன் யாரோ ஒரு தெய்வானையின் கண் பட்டு அவள் பக்கம் குடை சாய்ந்து போய்விட்டான். என் தாய் உண்மையிலேயே எப்படி பாடுபட்டாள். அதை நினைக்கும் போது என் கண்கள் கலங்குவதை என்னால் தடுக்கவே முடியாது. அதைவிடக் கொடுமையானது என் வளர்ச்சியை அவள் பார்ப்பதை பொறுக்கமுடியாமல் அவள் இதயம் துடிக்காமல் நின்றுபோனதுதான்.

நான் அமைதியாக இருந்தேன். பிறகு அமைதி அடைவதற்காக பெருமூச்சு ஒன்றை விட்டுக் கொண்டு மறுபடியும் பேசலானேன். அதன் பிறகு நான் தனிமையை வேண்டுமென்றே உருவாக்கினேன். இந்த உலகத்தில் உண்மை என்பதை எப்போதும் பார்க்க முடியாது. நான் படித்தேன். வெறி கொண்டவனைப் போல புத்தகங்களை படித்தேன். என் பசியின் கொடுமை அதிகமாகியது. வேலை தேடினேன். அங்குமிங்கும் கிடைக்கும் சில்லறை வேலைகளை அமுந்திக் கொண்டு கிடைக்கும் சுமையோடு கட்டி இழுத்துக் கொண்டு சுற்றினேன். வேலை கொஞ்சம் பழகிய பிறகு அதிகமான வேலைகள் கிடைத்தது. என்னைத் தேடி வர ஆரம்பித் தார்கள். அவை எல்லாம் சாதாரண நிரந்தர மற்ற சில்லறை வேலைகள். அவற்றால் எனக்கு பசியையும், வீட்டு வாடகைக்கான பணத்தையும் தான் தர முடிந்தது. அதுவும் போதுமானது அல்ல. இன்றைய வாடகை வீடுகள் எல்லாம் வழுக்கு மரத்தைப் போல ஏழைகளால் தொட்டுவிடவே முடியாது. பணக்காரனாக இருந்தால் ஏணி வைத்துக் கொண்டு சுத்தலாம். கிடைக்கும் வீடுகள் எதும் செல்லப் பிராணிகளை வளர்க்கக் கட்டப்பட்டதைப் போலதான் எனக்கு தோன்றும். இந்த வீடு கூட அப்படித் தானே. ஆனால் இங்கே அவந்திகாவின் தாய் வயதான

காலத்தின் இறுதி நாட்களின் போது, தங்கவைக்கப் பட்டிருந்தாள். அவந்திகா தான் இந்த வீட்டு உரிமை யாளர் என்பது உங்களுக்குத் தெரிந்து இருக்கும். அந்தத் தாய் இளையராணி தன் மகளின் காரியத்தை மெச்சிக் கொண்டே இந்தக் காணியின் ஒவ்வொரு மூலை யிலும் கால்களைப் பதித்தாள். காணியின் எல்லா இடமும் நெருஞ்சி முட்கள் பரவிக் கிடந்திருக்கும். அவளின் வெறும் கால்களில் முட்கள் தைக்கும் ஒவ்வொரு தடவையும் தன்மகளை நினைத்திருக்கும் அவளுக்கு வலித்திருக்காது. பிறகு அவள் தட்டுத் தடுமாறி இந்தத் தெருவில் நடக்கும் போது சட்டென இறந்து போனாள். தெருவே அதிரும் படி கோலாகல மாக மரணச்சடங்கும் வீதி உலாவும் நடைபெற்றது என்றார்கள். அந்த தாய் வீட்டுக்குள்ளே இறந்திருந்தாள் அழுகிநாறும் உடலைத்தான் கண்டெடுத்து இருப்பார் கள். அந்த அளவுக்கு ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தாள். இதை எல்லாம் நான் கேள்விப்பட்டேன். அவந்திகா தான் எனக்கு இந்த வீட்டை எந்த வாடகையும் இல்லா மல் தர சம்மதித்தாள். பதிலுக்கு அவள் வீட்டையும் காணியையும் நான் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பது இருவருக்குமான ஒப்பந்தம். அவள் இங்கு எப்போதாவது தான் வருவாள். நீண்ட காலத்துக்கு முன் வேறு ஒரு நகரப் புறத்தில் பெரும் பொருட்செலவில் வீடு ஒன்றைக் கட்டிக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு நான் சில சில்லறைவேலைகள் செய்யும்போதில் இருந்து நல்ல பழக்கம் உண்டானது. அவந்திகா ஒரு அலங்காரப் பிரியை. ஆடம்பரப் பிரியை. அவளது அழகிய கறுத்த முகத்துக்கு எத்தனையோ செயற்கை முகப் பூச்சுக்களைப் பூசுவாள். கண்ணுக்கு மை இடுவாள். எப்போதும் வாடாத இறந்தபூக்களையே மாட்டிக் கொள்வாள். ஆடைகள் நவநாகரிகத்தோடு இணைந்தவை. தன்னை இளமையாகக் காட்டுவதில் அவளுக்கு எப்போதும் பெரு விருப்பம் தான். அவள் கணவன் துரை எதுவும் சொல்லமாட்டன். அவன் பெரும் பணக்காரன். அவள் அப்படி இருப்பதையே அவனும் விரும்பினான். தன்னை அக்கா என்று அழைப்பவர்களை அவளுக்குப் மிகப் பிடிக்கும். அப்படித்தான் நான் அவளை அழைத்தேன். அதனால் தான் நெருக்க மானேன். மற்றவர்கள் அவள் முதுகுக்குப் பின்னால் கிண்டல் செய்வார்கள். அவளுக்கு ஒரு குரூர புத்திகள் வேறு இருந்தது. அவளுக்குப் பிடிக்காததை யார் செய்தாலும் அவர்கள் மனம் நோகும் படி எதாவது செய்து கொண்டே இருப்பாள். அப்படி எத்தனை பேர் பாடுபட்டார்கள் தெரியுமா! இதை எல்லாம் அங்கு போய் சொல்லிவிடக் கூடாது என்றபடி சிரித்தேன்.

"இல்ல இல்ல நான் ஏன் சொல்லப்போறன்." என்றபடி வினோதன் அமைதியாக இருந்தான்.

நான் சொன்னவற்றை எல்லாம் அவன் நம்பினான் என்று அவன் முகத்தில் தெரிந்தது. "உங்களோட பேசிக் கொண்டிருந்ததில நேரம் போனதே தெரியேல்ல." என்றபடி சுவரில் கொழுவப்பட்ட மணிக் கூண்டைப் பார்த்தேன். அத்தோடு அவனுக்கு அதை ஞாபகப்படுத்தவும் தான் செய்தேன்.

"மின்விளக்குகளை நிப்பாடி விடுங்களன். மண்ணெண்ணெய் விளக்கில பேசலாம்." என்றான்.

நான் தலையைத் தடவிக் கொண்டே இருக்கை யில் இருந்து எழுந்தேன். நேரம் ஒன்பதரை ஆகிக் கொண்டிருந்தது. அவன் போவதற்கான எந்த முடிவும் எடுத்தது போல தெரியவில்லை. மின்விளக்குகள் அணைத்த பிறகு நான் மறுபடியும் வந்து உட்கார்ந்தேன். அவன் என்னைப் பார்த்தான். இருவர் முகங்களும் தான் அந்த இருள் வெளிச்சத்தில் தெரிந்தது. ஒரு பெண் மயக்கத்தோடு பார்ப்பதைப் போல பார்த்தான். இதற்குப் பிறகு சரியாக வராது என்று புரிந்து கொண்டு நேரடியாகவே கேட்டு விட்டேன். நேரம் ஆகிவிட்டது. வீட்டுக்குப் போகவேண்டாமா!

அவன் எதுவும் பேசவில்லை. நான் இன்றைக்கு இங்கேயே தங்கப் போகிறேன் என்றான். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. இது என்ன எனக்கு வந்த சோதனை என்று நினைத்துக் கொண்டேன். எனக்கு அதில் கொஞ்சம் கூட விருப்பம் இல்லை. இப்போதுதான் பேசிக் கொண்டோம். அதற்குள் எப்படி இப்படி ஒரு முடிவுக்கு அவனால் வர முடிந்தது என்று மலைப்பாக இருந்தது. அவனைத் தங்க அனுமதித்தால் நான் இரவு தூக்கத்தைத் தொலைக்கவேண்டி வரும். அவனையே வேவு பார்த்துக் கொண்டு எவ்வளவு நேரம் தூங்காமல் விழித்து இருக்கமுடியும். இரவு அவன் எதையாவது தூக்கிக் கொண்டு போய்விட்டால், ஆனால் அவ்வளவு பெறுமதியான எதுவும் வீட்டில் இல்லை. அதைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. எப்படியானாலும் தூங்க அனுமதிக்க முடியாது. ஒரு கற்பனை விரிந்தது. தூங்கும்போது படுக்கையில் என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டான் என்றால் என்னவாகும். ச்சா எவ்வளவு மோசமான கற்பனை அது. அதற்காக நான் வெட்கப்பட்டேன். எதுவானாலும் தங்க வைக்க முடி யாது. இதையும் விட நாளைக்கு வெளியில் இருப்பவர் கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று நினைத்தேன். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அந்தக் கொச்சை வார்த்தைகளை நான் கேட்கத் தயாராக வில்லை. எப்படியும் தங்க அனுமதிக்க முடியாது.

"என்னத் தப்பா நினைக்க வேண்டாம். நீங்க இன்னொரு நாள் வாங்க. இப்போதான் நாங்கள் பேசினம். தெரிஞ்சு கொண்டம். அதுக்குள்ளே எப்பிடி நான் உங்கள அனுமதிக்கிறது. இன்னொரு நாள் வாங்க. தயவு செய்து குறைநினைக்காதிங்க." என்றேன். அவன் அமைதியாக என்னைத் துருவித் துருவிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"சரி இன்னொரு நாள் வாறன் வினோதன்." என்றபடி எழுந்தான்.

"தயவு செய்து தப்பாநினைக்கவேண்டாம்." என்று மறுபடியும் சொல்லிக் கொண்டு எழுந்தேன். மின் விளக்குகளைப் போட்டேன். அப்படி நான் சொன்ன தற்காக சங்கடப்பட்டேன். முகத்தை முறித்தது போல ஆகிவிட்டதே! வாசல் வரைக்கும் கொண்டு போய் விட்டேன். அவன் திரும்பத் திரும்ப பிரியமான நண்பனைப் பிரியும் துயரத்தைக் கொண்டவனைப் போல போய் வருகிறேன் போய் வருகிறேன் என்று பலதடவைகள் சொன்னான். வழியனுப்பிவைத்த பிறகு வீட்டுக்குள் நுழைந்தேன். பாதி படிக்கப் பட்ட புத்தகத்தை படிக்க ஆரம்பித்தேன். என் கவனம் எங்கோ சிதறிப் போய்க் கிடந்தது. என் மனம் அதில் ஒன்றாமல் அந்நியப்பட்டுப் போய் கிடந்தது. ஒரு பக்கத்தைக் கூட புரிந்து கொண்டு நகர்த்தமுடியாமல் நீண்ட நேரம் உட்கார்ந்து இருந்தேன்.

# க.சின்னராஜனின் 'தண்ணீர்' சிறுகதைத் தொகுப்பு புலப்படுத்தும் வாழ்வியல் தரிசனங்கள்

மு.அநாதரட்சகன்




க.சின்னராஜனின் சிறுகதைகளை உள்ளடக்கிய 'தண்ணீர்' என்ற தொகுப்பு ஜீவநதியின் 119வது வெளியீடாக சமீபத்தில் வெளிவந்துள்ளது. தொகுப்பிலுள்ள கதைகளில் அவர் எமது சமூகத்தையே படிமமாக்கியுள்ளார். நம்மைச்சுற்றியிருக்கும் மனிதர்களின் உள்முரண்பாடுகள் போலித்தனங்கள் மேலாதிக்கப்போக்கு, சாதியம், அடக்குமுறைகள் எனப் பல விடயங்களை உள்ளீடாகக் கொண்டிருக்கின்றன.

நவீன இலக்கிய வடிவங்களில் கவிதை போலவே சிறுகதையும் ஒரு சிறியவடிவமே. சிறுகதையானது தனது வெளிப்படையான எளிமையின் மூலம் வாசகனைச் சென்றடைகின்றது. அத்துடன் ஒரு சம்பவத்தை, உணர்ச்சியை நிதானமாகவும் சுதந்திரமாகவும் வெளிப்படுத்துகின்ற வடிவமே சிறுகதை. இதனால்தான் வாசகனை இலகுவாக உள்ளீர்த்து விடுகின்றது. அந்த வகையில் சின்னராஜனின் கதைகளும் இத்தகு இயல்புகளைக் கொண்டுள்ளன. பொதுவில் இக்கதைகளில் வரும் பாத்திரங்கள் அருவமானவையல்ல. கிராமத்து வாழ்வில் அழுந்திக் கிடக்கும் சாமானிய மனிதர்களாக உள்ளமை சிறப்புக்குரியது. இதனை நிரூபணப்படுத்தும் வகையிலான சில கதைகளை நோக்குவோம்.

தொகுப்பின் மகுடக்கதை "தண்ணீர்" என்பது குடிக்க நல்ல தண்ணீர் கிடைக்காது அலைந்து திரிந்து இறுதியில் கோவில் கிணற்றில் கொடிபிடிக்க முற்படுகையில் எழும் முரண்பாட்டின் உச்சத்துடன் கதை முடிகிறது. ஊரில் மேலாதிக்கம் செய்யும் வட்ட விதானையின் கறவை மாட்டுக்குக் கிடைக்கும் கொடுப்பினை கூட அயலிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கவில்லை. இது கோபவேசமாகி ரதியையும் கூட வந்த பெண்ணையும் வட்ட விதானையாருக்கு எதிராக செயல்படவைக்கிறது. ஒடுக்கப்பட்டவர்களிடம் இயல்பாகிப்போன போர்க்குணம் இறுதியில் வெற்றியும் பெற்று விடுகின்றது. கதையில் உணர்வின் உள் முகத்திதேடல் அழகாக வெளிப்பட்டுள்ளது.

"சவாரி" என்ற கதை பாரம்பரிய விளையாட்டின் சிறப்பினை நினைவூட்டுகிறது. கதையில் உண்மைச் சம்பவம் விபரிக்கப்படுகிறது. கோபாலன் சவாரிப் போட்டிக்காக தனது மாடுகளை தயார்ப்படுத்துகின்ற முறை அழகாகக் கூறப்படுகிறது. அவற்றுக்கு வேண்டிய பயிற்சிகள், சத்தான தீனிகள், அலங்கரிப்புகள் என அவன் கரிசனை காட்டியவை சுவைபடக் கூறப்பட்டுள்ளது. போட்டி நீர்வேலி தரவைத்திடலில் பெரும் ஆரவாரத்துடன் நடைபெறுகிறது. போட்டியில் கோபாலன் வெற்றி பெறுகிறான். இறுதியில், வெற்றியாளரை கௌரவிக்கின்றவேளை வந்த போது விருந்தினராக வந்த விதானையார் கோபாலனைத் தவிர்த்து விட்டு மாட்டுக்கு மாலைபோட்டு மகிழ்கிறார். கோபாலனின் வெற்றியை ஜீரணிக்க முடியாத மேட்டுக்குடியின் சாதிய மனத்தின் வக்கிரத்தை இனங்காட்டுகின்ற நல்ல கதை.

இன்னொரு கதையில் அடி நிலை மனிதனொருவன் குந்தியிருக்கக் குடிநிலம் ஒன்றைச் சொந்தமாக வாங்குவதில் எதிர் கொள்ளும் இடர்பாடு பற்றி கூறப்படுகிறது. "நாங்கள் எந்தக்காலத்திலையும் உந்தக் கலட்டியாற்றை வீடுகளில் செம்பு தண்ணி எடுக்க மாட்டம். அவையின்ரை சபைசந்திகளிலை கலந்து கொள்ள மாட்டம் அவையளைக் கொண்டு வந்து எங்கட அயலிலை குடியிருத்த வேண்டாம்" என்ற விமலாவின் வார்த்தைகளில் சாதிக்குள் மேனிலையாக்கம் பெற்றவர்களில் குரல் வெளிப்படுகிறது. தாழ்த்தப்பட்ட சாதியினர் தமக்குள் ஒரு பிரிவினரை ஒதுக்கி வைத்து விட்டு மேட்டுக்குடியினரிடம் சம உரிமை கோரி நிற்கும் முரண்நகையை இக்கதை சாரப்படுத்துகின்றது.

"ஒரு வங்கியும் வாடிக்கையாளரும்" என்ற கதை ஆசிரியரின் அனுபவ வெண்சூட்டில் பிறந்தது. கதையில் வங்கி மேலானரின் அலட்சியப்போக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. வங்கி நிறுவனத்தின் எதிர்காலமே வாடிக்கையாளர்களின் நலனோம்பில்தான் தங்கியுள்ளது என்பதை வலியுறுத்துகிறது. வங்கியின் மகிழ்ச்சியற்ற சூழலின் அவலத்தை வாடிக்கையாளர்களே தாங்கிக்கொள்ள நேர்கிற அபத்தம் வெளிப்படுத்தப்படுகிறது.

தொகுப்பிலுள்ள "காசுமாலை" என்ற கதை மாப்பசானின் நெக்கிளஸ் (necklace) என்ற கதையை இன்னொரு கோணத்தில் நினைவூட்டுகிறது.

"சிங்கை நகர் காவலன் உக்கிரசிங்கன்", "சிறைமீட்டல்" என்ற கதைகள் வரலாற்றை மீள் புனைவு செய்ய முற்படுகின்றன. கதைகளில் சிங்கள தேசம், தமிழ்தேசம், காதல், வீரம் பற்றியெல்லாம் பேசப்படுகிறது. கதைகளில் வரும் சம்பவங்களும், சம்பாசனைகளும் அதீத கற்பனைகளாக எஞ்சி நிற்கின்றன.

வரலாற்றுச் சம்பங்களை, தொன்மங்களை மீட்டுருவாக்கம் செய்து நவீன காலத்துக்குப் பொருந்து மாறு அமையும் எழுத்துமுறை பின் நவீனத்துவக் கதைகளில் காணமுடிகின்றது. அதனை ஒரு இலக்கிய உத்தியாகப் பலரும் பயன்படுத்தியுள்ளார்கள். சின்ன ராஜனின் வரலாற்றுக் கதைகளும் சமகால வாழ்வின் யதார்த்தங்களை வேறுவகையில் வெளிப்படுத்தி யிருப்பின் சிறப்பாக அமைந்திருக்கும்.

சின்னராஜனின் கதைகளில் வரும் பாத்திரங் களின் பெயர்கள் ஒரு அடையாளம் தான். கணேசன் (குலப்பெருமை), கோபாலு (சவாரி), ரதி (தண்ணீர்), சாந்தி (தொலையும் சாத்திரங்கள்) என இருந்தாலும் இப்பாத்திரங்களுக்கு சமூகத்திலுள்ள நிலை ஒன்று தான், இவர்களுடைய மனித உறவுகளை வறுமையும், சாதியுமே நிர்ணயிக்கின்றன. தொகுப்பிலுள்ள பெரும் பாலான கதைகளிற்கு இந்த அடித்தளமே வலுச்சேர்க் கின்றது. இதற்கு அப்பால் தனிமனிதர்கள் என்கிற முறையில் அவர்களுக்கிடையிலான உறவுகளை "காய்ந்த றோஜா", "அந்தியேட்டிக்குருமார்", "ஒரு வங்கியும் வாடிக்கையாளரும்" போன்ற ஏனைய கதைகள் சொல்கின்றன. அத்துடன் கதைகளில் வருகின்ற பாத்திரங்கள் யதார்த்தத்தினைப்புரிந்து கொள்ளும் முறையில் மட்டுமல்லாமல் தாம் ஏற்றுக் கொண்ட வாழ்க்கையில் ஒரு கலாசாரப்பின்னணியை கொண்டவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர்.

சின்னராஜனின் மொழி சிக்கலற்றது. பாத்திரங் களின் இயல்புக்கான மொழி. அதில் ஆசிரியரின் குரலும் சில கதைகளில் ஒலிப்பதை அவதானிக்க முடிகிறது. பாத்திரங்களின் உரையாடல்களும் சூழலுக்கேற்ப கட்டமைக்கப்பட்டுள்ளன.


சின்னராஜன் தனது கதைகளை பாரம்பரிய முறையில் படைத்திருப்பது அவரது கதைசொல்லும் பாணியின் சுதந்திரம். சில கதைகளின் வடிவ நேர்த்தியில் கவனம் செலுத்திருக்கலாமெனத் தோன்றுகிறது. தொகுப்பிலுள்ள சில கதைகள் காத்திரமான மையக் கருக்களை வெளிப்படுத்துகின்றன எனினும் வெளிப் பாட்டுத்தன்மையில் வாசகனுக்குத் திருப்தி யளிக்காமல் சிதைத்து விடும் தன்மையையும் கொண்டுள்ளன.

இவற்றுக்கப்பால் சின்னராஜன் சொல்லவரும் செய்திகள் முக்கியமானவை. அவை அறம் சார்ந்த முரண்களின் மீதான கேள்விகளை எழுப்புகின்றன. சமூகத்தின் அடிநிலை மாந்தர்களின் பிரச்சினைகளை அனுதாபத்துடன் அணுகுகின்ற அவரது மனித நேயப்பார்வை பாராட்டுதலுக்குரியது அவரிடம் இன்னும் தேடலும் வாசிப்பும் இருக்குமானால் நிச்சயம் நல்ல கதைகளை அவரால் தர முடியும்.



# திரும்பி பார்க்கிறேன் - 9

தெணியான்



"சிறுவர் அரங்கின் சிறப்புகள்" பற்றிய உரையினை 08.05.2011 இல் யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கே.ஆர். கமலநாதன் அவர்கள் நிகழ்த்தினார். அன்றைய நிகழ்வுக்குத் தலைமை தாங்கினேன். அந்நிகழ்வில்(அவை - 35) எழுத்தாளர் புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் அவர்களின் "புதிய பயணம்"(2வது பதிப்பு) அறிமுகம் செய்யப்பெற்றது. எனது "தவறிப்போனவன்" நாவலுக்கு டொக்ரர் எம்.கே.முருகானந்தன் அவர்கள் எழுதிய மதிப்பீடு 15.05.2011 தினக்குரலில் வெளி வந்திருக்கிறது.

"தாயகம்" சஞ்சிகையில் நான் எழுதியிருக்கும் வித்தியாசமான ஒரு கட்டுரை வெளிவந்திருக்கிறது. எழுத்தாளர் சட்டத்தரணி சோ.தேவராஜா அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த சமயம் ஒப்பாரி பற்றிக் குறிப்பிட வேண்டி நேர்ந்தது. நான் கூறிய கருத்துக்களைச் செவிமடுத்து தேவராஜன் அவர்கள் அதனைக் கட்டுரையாக எழுதித்தருமாறு கேட்டுக் கொண்டார். அன்னாரின் விருப்பத்துக்கிசைந்து எழுதிக் கொடுத்ததே ஒப்பாரி பற்றிய அக்கட்டுரை.

தினக்குரல் ஆசிரியர் வீ.தனபாலசிங்கம் அவர்களின் "ஊருக்கு நல்லது சொல்வேன்" தொடராக தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்தது. அந்தக் கட்டுரைத் தொடர் பின்னர் நூலாக வெளிவந்தது. அந்த நூலுக்கு நான் எழுதிய மதிப்பீடு 2011 மே மாத ஜீவநதியிலும் பின்னர் தினக்குரல் வாரமலரில் 5.6.2011 இல் மறு பிரசுரம் செய்யப்பட்டது.

பேராசிரியர் சி.மௌனகுரு அவை 36 நிகழ்வுக்கு வருகை தந்து "தனது நாடக அனுபவங்கள்" பற்றி அவையில் உரையாற்றினார். அத்தோடு உரையினைச் சிறப்பிக்கும் வண்ணம் விவரணப்படத்தினையும் காட்சிப்படுத்தினார். நிகழ்வு முடிந்து திரும்பி செல்லும்போது எனது இல்லத்துக்கு வருகை தந்து சற்று நேரம் உரையாடிச் சென்றார்.

தினக்குரல் பத்திரிகையில் "கிறிஸ்தவ மத குருமாரின் சமூக பண்பாட்டு இசைவாக்கம்" என்ற தலையங்கத்தில் கட்டுரை ஒன்றினை எழுதி இருக்கின்றேன். கட்டுரையின் தலைப்பினை "கீரியும் பாம்பும்" என விரும்பத்தகாத விதத்தில் மாற்றி "வண்ணவானவில்" வாரப்பத்திரிகை 12.06.2011 மறு பிரசுரம் செய்திருக்கிறது.

எனது பெருமதிப்புக்குரிய ஆசிரியர் ச.சிவகுரு அவர்களின் நூறாவது ஜனன தினம். அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தில் நினைவுகூரப் பெற்றது. எனது ஆசான்களுள் ஒருவரான அன்னார் பற்றிய உரையினை ஆற்றினேன்.

வதிரி சி.ரவீந்திரனின் கவிதைத் தொகுதி "மீண்டு வந்த நாட்கள்" தேவரையாளி இந்துக்கல்லூரியில் 18.06.2011 நடைபெற்றது. பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி சந்திரசேகரன் பங்கு பற்றினார். இந்த விழாவில் பங்குபற்றுவதற்காக வருகை தந்திருந்த மேமன்கவி, திக்குவல்லை கமால், உபாலி லீலாரட்ண, நாச்சியாதீவு பர்வீன் ஆகிய படைப்பாளர்கள் முதல் நாள் எனது இல்லம் வந்து சந்தித்துப்பேசினார்கள். நிகழ்வுக்கு நான் தலைமை தாங்கினேன்.

யாழ்ப்பாணம் தமிழழகன் காரியாலயத்தில் பிற்பகல் அமைச்சர் திஸவிதானவுடன் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. அந்தச் சந்திப்பில் பங்குபற்றி எமது சமூகப் பிரச்சினைள் அனைத்தையும் மிகத்தெளிவாக எடுத்து விளக்கினேன்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் 06.07.2011 காலமான துயரமான செய்தியினை கொழும்பில் இருந்து இரவு 8.20 மணியளவில் சி.ரவீந்திரன் அறிய தந்தார், தொடர்ந்து லெனின் மதிவானம், ஞானசேகரன், மேமன் கவி ஆகிய நண்பர்களும் அறியத் தந்தார்கள். "ஈழத்து இலக்கி உலகின் வசிட்டர்" என்ற எனது கட்டுரை (முன்னர் வெளிவந்த ஒன்று) சர்வதேச எழுத்தாளர் மகாநாட்டில் மகாநாடு தொடங்குவதற்கு முன்பு இருவரும் அமர்ந்திருந்து உரையாடிக் கொண்டிருக்கும் படத்துடன் தினகரனில் வெளிவந்தது. பேராசிரியர் கா.சி.இன் தகனம் கனத்தையில் 10.07.2011 இல் நடைபெற்றது. போராசிரியர் கா.சி. அஞ்சலி நிகழ்வு தேவரையாளி இந்துக்கல்லூரியில் எனது தலைமையில் பிற்பகல் நடைபெற்றது. திருவாளர்கள் இராஜேஸ்கண்ணன், குணேஸ்வரன் ஆகிய இருவரும் முன்னின்று நிகழ்வினை நடத்தினார்கள். நிகழ்வு நடைபெற்ற சமயம் மேடையில் வைத்த அஞ்சலி செலுத்தப்பெற்ற பேராசிரியர் உருவப்படம், இப்பொழுது எனது வீட்டு முன்மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

வதிரி கோவி நேசன் அவர்களின் அந்தியேஷ்டி 31.07.2011 நடைபெற்றது. அங்கு அவரது "சிறுவர் அரங்கக் கோலங்கள்" என்னும் சிறுவர் நாடக நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றினேன்.

ஜீவநதியின் நான்காவது ஆண்டுநிறைவுமலர் வெளியீட்டுக்கு 06.08.2011 தலைமை தாங்கினேன்.

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க மண்டபத்தின் மேல் மாடியில் நடைபெற்ற யோகரட்ணம் எழுதிய "தீண்டாமைக் கொடுமைகளும், தீ மூண்ட நாட்களும்" என்னும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு அரைநூற்றாண்டு காலத்து முன்னர் வடபிரதேசத்தில் தீண்டாமை என்னும் அரக்கனின் கொடுமைகள் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறினேன். விழாவுக்குத் தலைமை தாங்கினேன்.

நேற்றைய தினம் அறிவித்தல் தந்துவிட்டு எழுத்தாளர், சுதாராஜ், குணசேன விதனாவுடன் எனது வீடு வந்தார். குணசேனவிதான கல்வி அமைச்சின் நூல் பதிப்பக் செயலாளர். பிற்பகல் 3 மணியளவில் வீடு வந்தார்கள். ஒரு மணித்தியாலத்தின் பின்னர் அயிட்டியப்புலம் பொது மண்டபத்தில் எழுத்தாளர் சந்திப்பு நடைபெற்றது. "இலங்கை எழுத்தாளர் மன்றம்" நிறுவ இருப்பதால் அங்கத்துவம் பெறும் வண்ணம் கோரிக்கை விடுத்தனர். சுதாராஜ் அவர்கள் "உயிர்கசிவு", "மனைவி மகாத்மியம்" ஆகிய தனது இரண்டு நூல்களையும் எனக்கு தந்தார்

(தொடரும்)




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.